# வைகறை வெளிச்சம்

ஆசிரியர் : மு. குலாம் முஹம்மது

Volume - 9
Issue -4

ஏப்ரல் 2016 - ஜமாஅத்துல் ஆகிர் 1437

விலை ரூ. 20




## யார் இந்த ஹெட்லி?



## அம்பேத்கர் பிறந்த நாளும் தலித் மக்களின் அவலங்களும்!

### ஜனநாயகமா? பணநாயகமா?

### கிருஸ்தவர்களைத் தாக்கும் இந்துத்துவா!

- பா.ஜ.க.வும் வராக்கடனும்
- கோடை காலத்தில் பரவும் நோய்கள்

# வைகறை வெளிச்சம்

ஏப்ரல் 2016 - ஜமாஅத்துல் ஆகிர் - 1437

ஆசிரியர்
**மு. குலாம் முஹம்மது**

துணை ஆசிரியர்
**கே.எம். இல்யாஸ் ரியாஜி**

**தனி இதழ் : ரூ. 20/-**
**ஆண்டுச் சந்தா:**
**உள்நாடு : ரூ. 240/-**
**வெளிநாடு : ரூ. 1500/-**

பணவிடை மூலம் சந்தா செலுத்துவோர்
**DARUL ISLAM FOUNDATION TRUST**
என்ற பெயரிலேயே அனுப்ப வேண்டுகிறோம்.

விளம்பரங்களுக்கு
**VAIGARAI VELICHAM**
52/1, Mannady Street,
Room No.7, Mannady,
Chennai - 600 001.
Cell.: 8148129887

E-mail: darultrust@yahoo.com
Web : www.darulislam.in



**All disputes arising out of any publication in this monthly will come under the jurisdiction of chennai courts.**


بسم الله الرحمن الرحيم


யார் இந்த ஹெட்லி? ........ 6

**அம்பேத்கர் பிறந்த நாளும் தலித் மக்களின் அவலங்களும்! ........ 12**

மார்பக வரி (முலைகர்ணம்) – அதனை எதிர்த்தவருக்கு நினைவிடம் ........ 21

மால்கம் X கருத்தரங்கம் ........ 23

அடிமைத் தனத்தை இஸ்லாம் . . . ? ........ 25

“இஸ்லாமிய பிரச்சாரம் ஏன்? எப்படி?” கருத்தரங்கம்! ........ 27

கிருஸ்தவர்களைத் தாக்கும் இந்துத்துவா! ........ 29

தீன் சுடர் டி.எம். உமர் பாரூக் ........ 31

பா.ஜ.க.வும் வராக்கடனும் ........ 33

வைகறை வெளிச்சம் மறுப்புக்கு விளக்கம் ........ 35

கோடை காலத்தில் பரவும் நோய்கள் ........ 38

கற்காலம் – ஒரு வரலாற்றுப் பொய் ........ 44

பாலியல் அடிமைத் தொழிலுக்காக கடத்தப்படுகின்றதா சிரிய நாட்டு குழந்தைகள் ........ 47

இந்துத்துவா ஆட்சியும் வெளிநாட்டு வாழ் இந்தியர்களும்! ........ 52

நேதாஜி சுபாஷ் சந்திர போஸ்! ........ 53

பெருமானார் (ஸல்) அவர்கள் நமது காலத்திற்காக அனுப்பப்பட்ட நபி ........ 56

எது முதலில்? ........ 59

முஸ்லிம்களின் வீழ்ச்சியால் உலகம் இழந்ததென்ன? ........ 63


**“முஃமின்களே! நீதியை நிலைநாட்டுவதில் அல்லாஹ்வுக்கு நீங்கள் உறுதியான சாட்சியாக இருங்கள். எந்த ஒரு கூட்டத்தார் மீதும் நீங்கள் கொண்டுள்ள வெறுப்பு நீதி செய்யாமலிருக்க உங்களைத் தூண்ட வேண்டாம். நீதி செய்யுங்கள். இதுவே இறைவனை அஞ்சி வாழ்வதன் அர்த்தமாகும். அல்லாஹ்வுக்கு அங்சுங்கள் நிச்சயமாக அல்லாஹ் நீங்கள் செய்பவற்றையெல்லாம் (நன்கு) அறிந்தவனாக இருக்கின்றான்”**

**(அல்குர்ஆன்: 5:8)**

**http:/www.facebook.com / vaigaraivelichammgm**

அல்லாஹ்வின் அழகிய திருப்பெயரால்

# ஜனநாயகமா? பணநாயகமா?

தேர்தல் கமிஷன் இதுவரை 14 கோடி ரூபாயைக் கைப்பற்றியுள்ளதாக அறிவித்திருக்கின்றது. அத்தனையும் ஓட்டுகளை வாங்குவதற்காக எடுத்துச் செல்லப்பட்டவை என உறுதிப்படுத்தி இருக்கின்றது.

இஃதல்லாமல், பல கோடிகள் பெறுமான வாட்ச்சுகள், குத்துவிளக்குகள், செல்போன்கள் குறிப்பாக ஸ்மார்ட் போன்கள் இவையெல்லாம் கைப்பற்றப்பட்டிருக்கின்றன.

நடிகர் கேப்டன் விஜயகாந்த் அவர்களுக்கு 500 கோடி ரூபாயைத் தருவதாகப் பேரம் பேசியதாக ஒரு அறிவிப்பைச் செய்திருக்கின்றார் திருவாளர் வை.கோ. அவர்கள்.

அவரே 1500 கோடியை வாங்கிக் கொண்டுதான் அண்ணா திராவிட முன்னேற்ற கழகத்தின் வெற்றியை உறுதி செய்யும் அணி ஒன்றை அமைத்திருக்கின்றார் என்றொரு கூப்பாடும் தொடர்ந்து கொண்டே இருக்கின்றது.

தொலைக்காட்சிப் பேட்டியில் இந்தக் கேள்வியை முன் வைத்ததும் சிங்கம் போல் சீறிப்பாயும் வை.கோ. பதில் சொல்லாமல் எழுந்து சென்று விடுகின்றார்.

இவற்றிலிருந்தெல்லாம் ஓர் உண்மை தெளிவாகப் புரிகின்றது. அது, பணம் குறிப்பாக கோடிகள், அரசியல் உலகில் ஐந்து ரூபாய், பத்து ரூபாய் போல் விளையாடுகின்றன. இதனால் தான் பல கத்துக்குட்டிகளும், அரசியல் கட்சிகளைத் தொடங்கி அவர்களுக்கே புரியாத விஷயங்களிலெல்லாம் கோஷம் போட்டுக் கொண்டிருக்கின்றார்கள்.

நடந்து முடிந்த நாடாளுமன்ற தேர்தலில் ஆப்கோ வேர்ல்டு என்ற நிறுவனம்தான் மோடியைப் பிரதமராக ஆக்கிக் காட்டுவதை குத்தகைக்கு எடுத்துக் கொண்டது.

தேர்தல் நெருக்கத்தில் நாளொன்றுக்கு 18,000 கோடிகள் என மோடி வகையறாக்களிடம் பணம் வசூலித்து இருக்கின்றது ஆப்கோ நிறுவனம். டீக்கடையில் டீ விற்றவன் என மக்களை ஏமாற்றத் துடிக்கும் மோடி எங்கிருந்து இவ்வளவு பணத்தைப் பெற்றார் என்பது எல்லோருக்கும் தெரியும். மோடி பதவி ஏற்கும் நிகழ்வில் 500 பெரும் தொழில் முதலாளிகள் (Corporates) அழைக்கப்பட்டிருந்தார்கள், என்ற செய்தி மோடி. இத்தனைக் கோடி பணத்தை எங்கிருந்து பெற்றார் என்பதை உறுதிப்படுத்திற்று.

காங்கிரஸூம் கடைசி நேரத்தில் சில கார்ப்பரேட்களை வாடகைக்கு அமர்த்தியது. ஆனால் அது காலந்தாழ்ந்த நடவடிக்கையாக ஆகிப் போயிற்று.

மோடி ஆட்சியில் அமர்ந்ததும் இந்தக் கார்ப்பரேட்களுக்கு அதாவது பெரும் பண முதலைகளுக்கு நாட்டுடைமையாக இருந்த பல நிறுவனங்களை எழுதி தந்தார்.

இப்போது ரெயில்வேயும் பறிபோகும் நிலை. ‘அதானி’ போன்ற பெரும்பண முதலைகளே இப்போது இந்தியாவின் இயற்கை வளங்களின் மொத்த வியாபாரிகளாக மாறிப் போனார்கள்.

இன்றைய நாள்களில் தேர்தலில் வெற்றித் தோல்விகளை நிர்ணயிப்பது எவ்வளவு பணம் செலவு செய்திட இயலும் என்பதைப் பொறுத்தே அமைகின்றது.

அதனால் தான், கட்சித் தலைவர்கள், வேட்பாளர்களாக ஆக விரும்புபவர்களை நேர்காணல் காணும் போது எவ்வளவு பணம் செலவு செய்ய இயலும் எனக் கேள்விகளைக் கேட்கின்றார்கள்.

இந்தியாவில் தேசப்பக்தியை மொத்தமாக குத்தகைக்கு எடுத்துக் கொண்டதாக பிதற்றும் வந்தேறிகளின் கோட்டமாகியப் பாரதீய ஜனதா கட்சியினர் இப்படிக் குறிப்பிடுகின்றனர்.

“கடந்த 2011 தேர்தலில் வேட்பாளர்கள், அனைவருக்கும் ரூபாய் 10 லட்சம் முதல் ரூபாய் 30

*லட்சம் வரை பா.ஜ.க. மேலிடம் வழங்கியது. இந்த முறை மத்தியில் ஆட்சியில் இருப்பதால், தொகுதிக்கு ரூபாய் 20 லட்சம் முதல், ரூபாய் 50 லட்சம் வரை வழங்கப்படும் என எதிர்பார்க்கின்றோம். இதுதவிர வேட்பாளருக்குத் திறமை இருந்தால், சொந்த ஜாதியினர், கட்சி ஆதரவாளர்கள், இவர்களிடம் நிதி வசூலிக்கவும் முடியும். இதனால் தான் பலரும் போட்டியிட ஆர்வம் காட்டுகின்றார்கள்." (தி ஹிந்து - தமிழ் - மதுரை : மார்ச்சு 5-2016)*

*ஆக, எல்லாம் பணமயம். தேசப் பக்தர்களின் வாழ்க்கையையும் பணமே வழி நடத்துகின்றது.*

*இங்கே மிகப்பெரிய அளவில் தியாகம் செய்யப்பட்டிருப்பது கொள்கைகள்தாம். யாருக்கும் கொள்கை இல்லை. அதனால் வெட்கமுமில்லை. இதனால் பணப் பேரங்கள் வெட்கமின்றி நடக்கின்றன.*

*எப்படியேனும் பணத்தை அள்ளிக் கொட்டி ஆட்சியைப் பிடிப்பது எதற்கு? பணம் சம்பாதிக்கத்தான்,மக்கள் நலன் தான் முதல் சேதாரம்.*

*இதனால்தான் இஸ்லாம் இந்த முறையை அறவே வெறுத்தது. இறைவன் தன்னுடைய இறைத்தூதரை எச்சரித்தான் இப்படி, "நீங்கள் பெரும்பான்மையினரை பின்பற்றினால் வழி கேட்டில் வீழ்ந்து விடுவீர்கள் என்றான். இறைவனை அடிப்படையாகக் கொண்ட ஓர் அரசியல் முறையை அறிமுகப்படுத்தியது. ஒரு நீண்ட நெடுங்காலம் நீதியும், நேர்மையுமிக்க ஆட்சி ஒன்றை நடத்திக் காட்டிற்று. இஸ்லாத்தின் வழிகாட்டுதல்கள். இதில் முத்தாய்பாக அமைந்தது தான் கலீபா உமர் (ரழி) அவர்களின் ஆட்சி.*

*இதனால் தான் மகாத்மா காந்தி அவர்கள், கலீபா உமர் (ரழி) போன்ற ஒருவரின் ஆட்சி இந்தியாவில் வரவேண்டும் என்றார்கள்.*

*ஏனெனில் இறைவனை அஞ்சி வாழுகின்ற ஒருவர்தான். என்ன விலை தந்தாலும் விலைபோக மாட்டார். மக்களின் நல்வாழ்வு ஒன்றையே இலட்சியமாகக் கொண்டு ஆட்சியை நடத்துவார்.*

*ஏனெனில் அவர் தான் ஆட்சியில் எடுக்கும் ஒவ்வொரு முடிவுக்கும் ஒவ்வொரு நடவடிக்கைக்கும் ஏன் சொந்த வாழ்க்கைக்கும் சேர்த்து இறப்பிற்கு பின் வரும் வாழ்க்கையில் இறைவனிடம் பதில் சொல்லியாக வேண்டும் என அஞ்சுகின்றார்.*

*இறைவனிடம் உள்ள இந்த* "Accountabilty" *அதாவது தன் செயல்களுக்காக இறைவனிடம் பதில் சொல்லியாக வேண்டும் என்ற பயம். அவர்களை நீதியோடும் நேர்மையோடும் ஆட்சிச் செய்ய வழி வகுத்தது.*

*ஜனநாயகம் இந்த* "Accountabilty" *-ஐ அதாவது யாருக்காவது பதில் சொல்லியாக வேண்டும் என்பதை மக்களுக்குப் பதில் சொல்லிட வேண்டும் என மாற்றுகின்றது. அதனால் வழிகேடுகளும் பாவங்களும், குடி, விபச்சாரம், இன்னோரன்ன தீங்குகளும் அன்றாட வாழ்க்கையில் அங்கீகரிக்கப்பட்டவைகளாகி விடுகின்றன.*

*இந்த பணநாயகத்தைத் தூக்கியெறிந்து விடுவோம், மக்களாட்சி என்றொரு தத்துவத்தைப் பேசி மக்களை பணத்தால் அழிப்பதையும், பாவங்களால் சூழச் செய்வதையும், விட்டொழிப்போம், இஸ்லாத்தின் பக்கம் முழுமையாகத் திரும்புவோம்.*

*இறைவன் கூறுகின்றான்:*

> ***"பூமியில் உள்ளவர்களில் பெரும்பாலோரை நீர் பின்பற்றுவீரானால், அவர்கள் உம்மை அல்லாஹ்வின் பாதையை விட்டு (நேர்வழியை விட்டு) வழி கெடுத்து விடுவார்கள். ஆதாரமற்ற வெறும் யூகங்களைத்தான் அவர்கள் பின்பற்றுகிறார்கள். இன்னும் அவர்கள் பொய்யான கற்பனைகளிலேயே மூழ்கிக் கிடக்கின்றார்கள்."***

**அல்குர்ஆன்- 6:116**

*இந்த வழிகாட்டுதலை ஏற்போம்! இந்தியாவைக் காப்போம்!*



# யார் இந்த ஹெட்லி?

முஸ்லிம்களைத் தொடர்ந்து தீவிரவாதிகளாக மக்கள் மன்றத்தில் பதியவைக்கும் சதிகள். கடந்த 30 ஆண்டுகளாகத் தொடர்ந்து நடந்து வருகின்றன. அதற்காகவே உலகெங்கும் குண்டு வெடிப்புகளையும் தீவிரவாத தாக்குதல்களையும் நடத்தி வருகின்றது. அமெரிக்காவும், அதற்குப் பக்கத்துணையாக நாடுகளும், அதில் புதுப்புதுகாட்சிகள் நமக்குக் காட்டப்படுகின்றன. புதுப்புது தீவிரவாதிகள் அதில் நமக்கு படக்காட்சிகள். அறிமுகப்படுத்தப்படுகின்றார்கள்.

எல்லா ஊடகங்களும் ஒன்று போல் ஊதிப் பெருக்குகின்றன. அந்த வகையில் மக்கள் மன்றத்தில் காட்டப்படும் தீவிரவாதிகள் தாம்.

1. தாவூத் இப்றாஹீம், 2. மேமன்கள், 3. சோட்டா சக்கீல்கள், 4. பின்லேடன், பகுதாதி

இப்படி பழைய முஸ்லிம் பெயர்களையே சொல்லிக் கொண்டிருந்தால் பார்ப்பவர்களுக்குப் 'போரடிக்கும்' என்பதால் இப்போது பென்னட் கோல்மேன் ஹெட்லி என்றொருவரை அறிமுகப்படுத்து கின்றார்கள். இவரை இன்னொரு பின்லேடன் என்கின்றார்கள்.

இவர் அமெரிக்காவில் இருந்து கொள்வாராம். காணொலி மூலம் சாட்சி சொல்லுவாராம். காட்சி ஊடகங்கள் அவருடைய கூற்றை (சப்தத்தை மட்டும்) நமக்குக் காட்டுவார்களாம். நாம் நம்பிட வேண்டுமாம்.

எப்படி இருக்கின்றது கதை! இந்தக் கதைக்குப் பின் உள்ள அந்தரங்கங்களைத் தெரிந்து கொள்வோம்.

## யார் இந்த டேவிட் கோல்மேன் ஹெட்லி

இவரைப் பற்றிக் கிடைக்கும் தகவல்கள் சொல்லும் சேதி.

இவர் ஓர் அமெரிக்க தந்தைக்கும் பாகிஸ்தான் தாய்க்கும் பிறந்தவர்.

தாயும், தந்தையும் பிரிந்துவிட்டார்கள். ஓர் தறுதலைப் பிள்ளையாக வளர்ந்தவர்.

வாழ்க்கையில் நோகாமல் சம்பாதிக்க வேண்டும், போகாத சுகங்களைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என வாழ்பவர்.

போதை பொருட்களைக் கடத்துவதில் சர்வதேச குற்றங்களைச் செய்தவர். இறுதியில் அமெரிக்காவின் கைகளில் சிக்கிக் கொண்டவர். பல ஆண்டுகள் சிறை தண்டனையை பெற்றவர். கடைசியாக 35 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப் பட்டது அமெரிக்க நீதிமன்றத்தால்.

இந்த நீண்ட சிறை தண்டனையால் அவர் அமெரிக்காவின் சிறைகளிலிருந்து வெளியே வரும் எல்லா வழிகளும் அடைக்கப்பட்டன. ஒரே ஒரு வழி மட்டும் திறந்திருந்தது. அது, அமெரிக்காவின் உளவுத் துறையின் கையாளாக பயன்படுவது. இந்த வாய்ப்பை தனக்குக் கிடைத்த அருளாக நினைத்தான் டேவிட் கோல்மென் ஹெட்லி. அமெரிக்கா இஸ்லாத்திற்கெதிரான தனது பெரும் போரில் இவரைத் தாராளமாகப் பயன்படுத்திட முன் வந்தது. முஸ்லிம் உலகெங்கும் குண்டுகளை வெடிக்கச் செய்யும். அமெரிக்காவின் கைப்பாவையாகச் செயல் படும் தீவிரவாத குழுக்களை உருவாக்கவும், இவனைப் பயன்படுத்தியது. இதற்காக இவனை உலகெங்கும் தாராளமாக சுற்றி வரச் வகை செய்தது.

அமெரிக்காவில் 35 ஆண்டுகள் சிறையிலிருக்க வேண்டிய ஒருவன் எப்படி உலககெமல்லாம் சுற்றி வருகின்றான் என்ற வினா இங்கே எழுகின்றது. இதற்காக அமெரிக்க ஓர் கண்துடைப்பு நாடகம் ஒன்றை நடத்தியது.

அந்த நாடகத்தில்; இந்த டேவிட் கோல்மேன் ஹெட்லி இடம் உலகத் தீவிரவாதக் குழுக்களைப் பற்றிய அதிசய தகவல்கள் அதிகமிருப்பதாகவும் அவற்றை அவனிடமிருந்து பெறுவது மிகவும் முக்கியம் என்றும், அதனால் அவனுடன் அமெரிக்க அரசாங்கம் ஓர் ஒப்பந்தத்தைப் போட்டுள் ளது என்றும் கதைக்கட்டி விட்டது.

## ஹெட்லி யின் ஒப்பந்தம்.

அந்த ஒப்பந்தத்திற்கு பெயர் - "Plea Bargain Agreement" பிளீ பார்கெய்ன் எக்ரீமெண்ட், இதை "கோரிக்கை பேர ஒப்பந்தம்" என அழைக்கலாம். இதனை அமெரிக்கர்கள் ஒருவர்தான் குற்றவாளிதான் என ஒத்துக் கொண்டால் தனக்கு தண்டனையை குறைத்து வழங்கும் முறை எனக் கூறுகின்றார்கள்.

என்னடா? இது, உலகில் எங்கேயும் கேள்விப் படாத ஓர் அதிசயமாக இருக்கின்றது? என யாரும் ஆதங்கப்பட வேண்டாம். அமெரிக்காவும் அதன் உளவுத்துறையும் என்ன வேண்டுமானாலும் சொல்லும் அதை நாம் கேட்டுத்தான் ஆக வேண்டும். ஏனெனில் அமெரிக்கா உலகின் முன்னேற்றத்தின் உச்சாணியில் நிற்கும் நாடு.

'இந்த ப்ளீ பார்கெய்ன் எக்ரீமெண்ட்' என்ன சொல்லுகின்றது. பல அதிசயமான தகவல்களை ஹெட்லி சொல்வானாம். அதற்கு கைமாறாக அமெரிக்கா பின் வரும் நிபந்தனைகளை ஒத்துக் கொள்ள வேண்டு மாம். இந்த நிபந்தனைகளை அமெரிக்கா ஒத்துக் கொள்ளவில்லை என்றால் டேவிட் கோல்மேன் ஹெட்லி தகவல்களைச் சொல்ல மாட்டானாம்.

## அந்தத் நிபந்தனைகள்

1. அமெரிக்க நீதிமன்றங்கள் என் மீது சொல்லும் எல்லா குற்றச் சாட்டுகளையும் ஒத்துக் கொள்வேன். ஆனால் எனக்கு மிகக் குறைந்த தண்டனையே தந்திட வேண்டும். (அவர் மீது அமெரிக்க நீதிமன்றங்கள் 12 குற்றச் சாட்டுகளைச் சொல்லின).

2. நான் அமெரிக்க புலனாய்வுத்துறை, உளவுத்துறை இவற்றுடன் முழுமையாக ஒத்துழைப்பேன் அதற்கு கைமாறாக எனக்கு எந்த நிலையிலும் மரண தண்டனையைத் தந்திடக் கூடாது.

3. என்னை எந்த நிலையிலும் இந்தியா விடமோ, பாகிஸ்தானிடமோ, டென்மார்க் கிடமோ ஒப்படைத்திடக் கூடாது.

**(ஆதாரம் :** The Hindu (English) March, 20,2010**)**



இதை விடுத்து அவனுடைய காலில் வீழ்ந்து கெஞ்சாதக் குறையாக சில ஒப்பந்தங் களைப் போடு வானேன்!

இல்லை அமெரிக்கா உலக மக்களை முடடாள் களாக ஆக்கிட மேற் கொண்ட முயற்சிதான் இது என்பதை நாம் எளிதாகப் புரிந்திட முடியும்.

அமெரிக்க உளவுத் துறை இப்படியொருவனை ஒரு குற்றவாளியை ஓர் ஆயுள் கைதியை கையில் வைத்துக் கொண்டு உலகில் தாங்கள் குற்றவாளிகளாக அறிவிக்க விரும்புகின்றவர்களை குற்றவாளிகளாக ஆக்கிடவும், தாங்கள் பாதுகாத்திட விரும்புகின்றவர்களைப் பாதுகாக்கவும், போடும் கபட நாடகம். இதுவல்லாமல் வேறென்ன நடந்து கொண்டிருக்கின்றது.

அமெரிக்காவின் நீதிமன்றங்களில் குற்றம் சுமத்தப்பட்ட ஒருவன் அமெரிக்கா விடமே நிபந்தனை போடுவானாம், அதை அமெரிக்கா ஒத்துக் கொள்ளுமாம். அந்த ஒப்பந்தத்தின் அடிப்படையில் அவனுக்கு உல்லாச வாழ்வைத் தருவார்களாம். அவன் தேடப்படும் நாடுகளிடம் அவனை ஒப்படைக்க மாட்டார்களாம்.

சிந்திக்க வேண்டாமா? ஒருவன் உண்மையிலேயே குற்றவாளி என்றால் அவனிடமிருந்து தகவல்களைச் சேகரிக்க வேண்டும் என்றால் அவனை விசாரிக்க வேண்டிய விதத்தில் விசாரித்தால் எல்லாம் கிடைத்துவிடும். அப்படியும் முடியவில்லை என்றால் அமெரிக்கா கண்டு பிடித்து வைத்திருக்கும் அதிசயமான விஞ்ஞான கருவிகளிடம் அவனை ஒப்படைத்தால் எல்லாம் கிடைத்துவிடும்.

அவன் சொன்ன தகவல்கள் உண்மையானவைதானா? அவன் எதையாவது மறைத்துவிட்டானா? அல்லது பொய் சொன்னானா? என்பதையெல்லாம் கண்டு பிடிக்க இன்னும் சில அதிசய கருவிகளை அதே அமெரிக்கா கண்டுபிடித்து வைத்திருக் கின்றது. அவற்றிடம் அவனை ஒப்படைத்தால் அவன் சொன்ன தகவல்கள் உண்மையா அல்லது பொய்யா என்பது தெரியவந்திடும்

நம் நாட்டில் நடந்த நாடாளுமன்ற தாக்குதலுக்கும் தனக்கும் சம்பந்தமுண்டு என்கின்றான், இந்த டேவிட் கோல்மேன் ஹெட்லி. மும்பைத்தாக்குதலுக்கு நான் தான் எல்லாம் என்கின்றான். இந்த டேவிட் கோல்மேன் ஹெட்லி இர்ஷத் ஜஹான் விவகாரத்திலும் நான் தான் எல்லாம் என்கின்றான். இந்த ஹெட்லி.

அவன் மீது நமது அதிசய புலனாய்வுத்துறை என அறியப்படுகின்ற (National Investigation Agency) தேசியப் புலனாய்வு முகவாண்மை மும்பை தாக்குதலில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்கின்றது. ஆனாலும் அவன் இந்தியா வந்திட மாட்டானாம், அனுப்ப மாட்டார்களாம் அமெரிக்கர்கள். அவன் காணொலியில் நடனமாடுவானாம். வாக்கு மூலங்களை வழங்குவானாம், நாம் பார்த்து ரசிக்க வேண்டுமாம்.

அவன் சொல்வதை நமது நீதிமன்றங்கள் நம்புமாம் இங்கே நமது இந்தியாவின்

முன்னாள் உள்துறை அமைச்சர் பழனியப்பன் சிதம்பரம் கொண்டு வந்துவிடுவேன் ஹெட்லியை இந்தியாவுக்குள் என்றாரே என்ன ஆயிற்று?







அமெரிக்காவே எனக்கு வைகுண்டம், அங்கேயே நான் இரண்டு முறை போய் வந்து விட்டேன் என்றாரே மோடி, என்ன ஆயிற்று 26/11 மும்பைத் தாக்குதலின் முக்கிய குற்றவாளி ஹெட்லி விவகாரம்? இந்தியாவிடம் அவனை ஒப்படைக்கச் சொல்லிட வேண்டியதுதானே.

இவர்கள் அமெரிக்காவின் கைப்பாவைகள் நீதியை நிலை நாட்டுவதில் எள் மூக்கின் முனை அளவாவது இவர்களுக்கு அக்கறை இருந்தால் இவர்கள் ஹெட்லியை இங்கே அழைத்து வந்து நமது நீதிமன்றங்களில் நிறுத்தி விசாரிக்க வேண்டும். அப்போது தெரியவரும் அத்தனை தாக்குதல்களும் அமெரிக்க உளவுத்துறை, இந்திய உளவுத்துறை இவற்றின் கைவண்ணம் என்ற உண்மை.

### இந்திய நீதிமன்றங்களில் என்ன நடந்து கொண்டிருக்கின்றது?

அப்சல் குரு என்ற அப்பாவியை தூக்கிலே போட்டிட உச்சநீதிமன்றம், எந்தக் காரணத்தையும் சொல்லிடவில்லை. கூட்டு மனசாட்சியைத் திருப்திப்படுத்திட அவனை தூக்கிலே போட்டு சந்தோஷம் கொண்டாடினார்கள்.

மக்களின் கூட்டுமனசாட்சியை உச்சநீதிமன்ற நீதிபதிகள் எந்த ஞானக் கண்கொண்டு கண்டுபிடிக்கின்றார்களோ தெரியாது. இதன் வழி நாடாளுமன்றத் தாக்குதலின் மொத்தக் குற்றவாளிகளையும் தப்பிக்க விட்டுவிட்டார்கள். அப்போது மௌனியாக இருந்தவர் பழனியப்பன் சிதம்பரம். இப்போது, அப்சல் குருவைத் தூக்கிலே போட்டது தவறு என திருவாய் மலர்ந்திருளினார்.

அன்றைக்கே நாடாளுமன்ற தேர்தலை ஏற்பாடு செய்தது அன்றைய பாரதீய ஜனதா கட்சியின் தலைமையில் வீற்றிருந்த என்.டி.ஏ. அரசு தான் என இரண்டு அரசு செயலர்கள் அறிவித்தார்கள்.

'பொடா' என்ற பாசிச பயங்கரவாதச் சட்டத்தை கொண்டு வந்திடத்தான் நாடாளுமன்ற தாக்குதல் என்ற ஏற்பாடு என்றார்கள்.

அதுபற்றி எந்த ஆய்வும் இன்றளவும் மேற்கொள்ளப்படவில்லை. நீதிமன்றங்களும் வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருக்கின்றன.

அதே போல் 26/11 அடையாளப் படுத்தப்படும் மும்பைத் தாக்குதலும் அரசின் ஏற்பாடுதான் என்றார்கள் அரசு செயலர்கள். அது UAPAA என்ற தடை செய்யப்பட்ட செயல்களின் தடைச் சட்டம், திருத்தச் சட்டம் என்பதைக் கொண்டு வந்திட அரசே ஏற்பாடு செய்தது.

இவற்றிலெல்லாம் எந்த நடவடிக்கையும் இல்லை. நாம் கொடுத்த தீர்ப்பு ஒன்றில் பளிச்சென தலைகீழான தகவல்கள் வருகின்றனவே. அப்படியானால் உண்மையைச் சொல்லுங்கள் என்று Suo Moto தன்னார்வ நடவடிக்கையை எடுத்திருக்க வேண்டிய உச்ச நீதிமன்றம் வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருக்கின்றது.

மும்பைத் தாக்குதலில் வீரமகன் கர்கரேயைக் கொலை செய்தது. நமது உளவுத்துறை யின் ஏற்பாடு தான் என நீதிமன்றங்களில் வழக்குகளைத் தொகுத்து கொண்டிருக் கின்றார் முன்னாள் காவல்துறை அதிகாரி எஸ்.எம். முஷ்ரிஃப்!



**கர்கரே கொலை**

வழக்கு மும்பை உயர்நீதிமன்றத்தில் உச்ச கட்டத்தை அடைந்த போது அதில் முக்கிய விவாதங்கள் நடந்தது டிசம்பர் 01,2010 அன்று. அன்று நீதிமன்றத்தில் எதுவுமே நடக்கவில்லை என அதே மும்பை நீதிமன்றம் கூறியது. அதாவது வடிவேலின் கிணற்றைக் காணவில்லை என்ற வழக்காகவே அது நடந்துகொண்டிருக்கின்றது.

நாங்கள் தாம் நாடெங்கும் குண்டு வைத்தோம் என அசீமானந்தா போன்றவர்கள் வாக்குமூலங்கள் வழங்கிய பின்னரும் டேவிட் கோல்மேன் ஹட்லியின் வாக்குமூலங்கள் எதற்கு?

டேவிட் கோல்மேன் ஹெட்லி என்ன செய்து கொண்டிருக்கின்றார்?

இர்ஷத் ஜஹான் என்ற இளம் பெண் 2004 ஆம் ஆண்டு குஜராத் காவல்துறை யினரால் கடத்திச் செல்லப்பட்டு ஒரு பண்ணை வீட்டில் வைத்துக் கொலை செய்யப்பட்டாள். அவளோடு இன்னும் மூன்று அப்பாவிகளும் கொலை செய்யப் பட்டார்கள் இதை நீதிமன்றங்களில் நிரூபித்து விட்டோம்.

இந்தக் கொலைகளுக்கு மத்திய உளவுத் துறையைச் சாாந்த இராஜேந்திர குமார் என்பவர் தந்த பொய்யான தகவல்தான் காரணம் எனக் கண்டுபிக்கப்பட்டது. அவர் மீது மத்திய புலனாய்வுத்துறை Central Bureau of Investigation குற்றப்பத்திரிகையையும் தாக்குதல் செய்தது. குற்றம் சுமத்தப்பட்டவர் நான்கு கொலைகள் நடப்பதற்கு காரண மானவர், அவரை கைது செய்திருக்க வேண்டும். அந்த நேரத்தில்தான் நமது NIA National Investigation Agency தேசிய புலனாய்வு முக வாண்மை நாங்கள் மும்பைத் தாக்குதல் குறித்து புலனாய்வு செய்ய அமெரிக்கா செல்லப் போகின்றோம். அங்கே நாங்கள் டேவிட் ஹோல்மேன் ஹெட்லியைச் சந்திக்கப் போகின்றோம் என்றார்கள். சந்தித்தார்கள். அங்கே மும்பைத் தாக்குதலை விட இர்ஷத் ஜஹான் ஒரு லஷ்கரே தொய்பா உறுப்பினர்தான் என டேவிட் ஹெட்லி சொன்னதாகக் கூறினார்கள்.

அன்று முதல் இர்ஷத் ஜஹானையும் இன்னும் மூன்று பேரையும் கொலை செய்த ‘வன்சாரா’ உட்பட காவல்துறை அதிகாரிகளை சிறையிலிருந்து மீட்கும் பணியை மோடி தலைமையிலான குஜராத் அரசு மேற்கொண்டது.

மோடி பிரதமரானதும் நீதி மன்றங்களை மோடிப் பேரவைகளாக மாற்றினார். சிறையிலிருந்த அத்தனை காவல்துறை அதிகாரிகளையும் வேறு சொற்களால் சொன்னால் பட்டப்பகலில் இந்தியக் குடிமக்களைக் கொலை செய்தவர்கள் விடுதலைச் செய்யப்பட்டார்கள். இதில் மத்திய உளவுத்துறையைச் சார்ந்த இராஜேந்திரகுமாரும் காப்பாற்றப்பட்டார்.

இப்படி டேவிட் ஹோல்மென் ஹெட்லி இந்தியாவில் கொலை பாதங்களையும் குண்டு வெடிப்புகளையும் நடத்திக் கொண்டிருக்கின்றார். இங்குள்ள நீதிமன்றங்களில் நாம் தொடுத்த வழக்குகளில் விசாரணை நடத்திடவோ, தீர்ப்பு வழங்கிடவோ போக்கற்று போய் அமெரிக்காவின் உளவாளியைக் காணொலி

மூலம் விசாரணை செய்து கொண்டிருக்கின்றார்கள். என்னே கபட நாடகம்?

இர்ஷத் விவகாரத்தில் நீதிக்காகப் போராடிக் கொண்டிருப்பவர் அவருடைய தாயார்தான். அவருக்கு டீஸ்டா செட்டல்வாட் அவர்கள் உதவிச் செய்து கொண்டிருக்கின்றார்கள்.

இவர்களெல்லாம் இந்திய நீதித்துறை பாசிஸ்ட்டுகளின் பயங்கரப் பிடிக்குள் சிக்கிக் கொண்டிருப்பதைப் பார்த்து நிலைகுலைந்து நிற்கின்றார்கள். கொலைகாரர் கரை விட்டுவிட்டு நீதிக்காகப் போராடும் இவர்கள் மீது வழக்கு தொடர்ந்து வருகின்றார் மோடி..

இப்போதும் ஹெட்லி சொன்ன தகவல்களின் அடிப்படையில் இர்ஷத் ஜஹான் படுகொலை வழக்கில் சிறை யிலிருக்கும் அத்தனை பேரையும் விடுதலைச் செய்திட வேண்டும் என்றொரு மனு நமது நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்பட்டது. அதனை உடனேயே நீதிமன்றங்கள் ஒத்துக் கொண்டிருக்கின்றன.

**ஹெட்லியின் இப்போதைய முரண்பாடுகள்**

ஹெட்லி அறையிலிருந்தே இர்ஷத் ஜஹான் ஓர் லஷ்கரே தைய்பா உறுப்பினர் என்றார். ஆனால், இப்போது 25.3.2016 இல் காணொலி மூலம் வழங்கிய வாக்குமூலத்தில் நான் இர்ஷத் ஜஹானைப்பற்றி குறிப்பிட வில்லை எனக் கூறி இருக்கின்றார். அவரை காணொலியில் குறுக்கு விசாரணைச் செய்த வழக்கறிஞர், அப்துல் வஹாப்கான் அவர்கள் இப்படிக் கேட்டார்கள், “இர்ஷத் ஜஹான் பெயரை நீங்கள் சொன்னீர்களா?”

இதற்கு ஹெட்லி இப்படி பதில் சொன்னான்:

“I did not disclose about any women’s cell at the Lashkar - e - Taiba as I had no knowledge”

“நான் லஷ்கரே தைய்பா அமைப்பில் பெண்கள் அணி இருப்பதாக நான் யாரிடமும் சொல்லவில்லை. காரணம், எனக்கு அதுபற்றி எதுவும் தெரியாது.”

பின்னர், வழக்கறிஞர் அப்துல் வஹாப்கான் அவர்கள் இப்படிக் கேட்டார்கள். “அப்படியானால் இர்ஷத் ஜஹான் அவர்களின் பெயரை தேசிய புலனாய்வு முகவாண்மை உங்களிடம் சொன்னார்களா?”

இதற்கு, ஹெட்லி இப்படிப் பதில் சொன்னார். “அவர்கள் ஏன், ஒரு பெயரைச் சொல்லி பின்னர் என்னிடம் அதைப் பற்றி கேட்க வேண்டும்? ” என்றான்.

உண்மையில் நடந்தது என்னவென்றால் நமது தேசிய புலனாய்வு முகவாண்மை தான் இர்ஷத் ஜஹான் பெயரை ஹெட்லிக்குச் சொல்லி தந்தது.

**செய்தி ஆதாரம் : THE HINDU, 26.3.2016**

அடுத்த நாள் ஹெட்லி இர்ஷத் ஜஹான் விஷயத்திலும் பல்டி அடித்தார். இந்தக் “கூத்தை” நாம் நம்பிட வேண்டுமா?

**எம்.ஜி.எம்.**

**சிந்திக்க:**

டேவிட் கோன்மென் ஹெட்லி இன்னும் பாகிஸ்தான். பாகிஸ்தான் பாஸ் போர்ட் தான் வைத்திருக்கின்றான். ஆனால் இந்தியாவுக்கு பல முறை வந்து விட்டுப் போயிருக்கின்றான். பாகிஸ்தான் பாஸ்போர்ட் வைத்திருப்பவர்களைக் கடுமையான சோதனைக்கு உள்ளாக்கும் இந்திய அதிகாரிகள், எப்படி இந்த மர்ம நபரை பல முறை இந்தியாவுக்குள் விட்டார்கள்?

# அம்பேத்கர் பிறந்த நாளும் தலித் மக்களின் அவலங்களும்!



டாக்டர் அம்பேத்கர் அவர்கள், 1891 ஏப்பிரல் திங்கள் 14 ஆம் நாள் பிறந்தார்கள். வளர்ந்த காலங்களில் சொல்லொண்ணா ஜாதிய கொடுமைகளுக்கு ஆளானார்கள்.

அதனால் வாழ்நாளெல்லாம் ஜாதியக் கொடுமைகளுக்கெதிராகப் போராடினார்கள். அந்தப் பெரும் போரிலேயே தன்னைத் தந்தார்கள்.

அவர்கள் அடியெடுத்துக் கொடுத்த ஜாதிய கொடுமைகளுக்கெதிரான போர் இன்றளவும் தொடர்ந்து கொண்டே இருக்கின்றன. ஆனால் விடிவே இல்லை, எனத் தொடர்ந்து கொண்டே இருக்கின்றன.

இன்றைய இந்தியாவைக் கவ்விப் பிடித்திருக்கும் பாசிச பயங்கரவாதம், தீண்டத்தகாத தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப் பட்ட, அமுக்கப்பட்ட மக்கள் மீது அவிழ்த்து விடும் கெடுபிடிகளுக்கு அளவே இல்லை. பாசிசத்திற்கு அடுக்கடுக்காய் பலியாகிக் கொண்டே இருக்கின்றார்கள்.

குறிப்பாக, கல்வி நிறுவனங்களில் அவர்கள் எல்லாத் திறமைகளும் இருந்தும் விரட்டப்படுகின்றார்கள். கல்வியைக் கற்றால் தங்கள் அவலம் தீரும் எனக் கருதிக் கல்வியைக் கற்றிட அந்த மக்கள் வந்த போது பாசிஸ்டுகள் அங்கேயும் அவர்களைத் துரத்துகின்றார்கள்.

இந்த பாசிஸ்டுகள் ஆட்சிக்கு வந்த பின் கல்வி நிறுவனங்களில் அதிலும் மதிப்புமிக்க உயர் கல்வி நிறுவனங்களில் கல்வி கற்றிடுடத தலீத்துகளும், பணியாற்றிடும் ஆசிரியர் களும் அவமானப்படுத்தப் படுகின்றார்கள். தலீத் மக்களின் தன்னிகரற்ற போராளி டாக்டர் அம்பேத்கரை இந்துத்துவ வாதியாகக் காட்டிடத் துடிக்கும் நாள்களில் அவருடைய மக்களை கேவலப்படுத்துவதும் கொலை செய்வதும், அவர்கள் தங்களைத் தாங்களே கொலை செய்திட வைப்பதும், என்ன நியாயம்? எத்துணை முரண்பாடு. இதனை ஏனைய குடிமக்கள் தட்டிக் கேட்க வேண்டாமா?

அவர்களுக்கு நியாயம் கிடைக்க வழிவகைகள் காண வேண்டும். இதில் அரசியல் நடத்துபவர்களை நம்பிப் பயனில்லை. காரணம் அரசியல்வாதிகள் தங்களுக்கு அரசியல் ஆதாயம் கிடைக்கும் அளவுக்கு மட்டுமே, இதில் கவனம் செலுத்துகின்றன.

இதனால் நாம் இந்த மக்களின் அவலங்களைத் தொடர்ந்து மக்கள் மன்றத்தில் வைத்து வருகின்றோம். அந்த மக்களின் இழவு நிரந்தரமாக ஒழிய இஸ்லாத்தை தீர்வாக முன் வைக்கின்றோம்.

காரணம், நாம் இரண்டு யதார்த்தங் களைக் கண்கூடாகக் காணுகின்றோம். அனுபவத்தால் உணருகின்றோம்.

ஒன்று ஜாதி கொடுகைளுக்கெதிராகத் தொடர்ந்து போராடும் போராளிகள். அவர்கள் சந்திக்கும் தொடர் தோல்விகள்.

இரண்டு இந்தப் போராட்டங்களால் பயனில்லை என்பதைக் கண்டு இஸ்லாத்தை ஏற்று தங்கள் இழிவையும் தங்கள் சந்ததிகளின் இழிவையும் நிரந்தரமாக ஒழித்த தலீத் போராளிகள்.

ஆமாம் ஏன் இந்த மக்கள் குன்றில் மேலிட்ட விளக்காய் மிளிரும் தீர்வை வைத்துக் கொண்டு இழிவையும் அழிவையும், தருபனவற்றில் நிலைத்து நிற்கின்றார்கள் என்பதே நம் கேள்வி.

ஆனாலும் அந்த மக்கள் இன இழிவிலிருந்து விடுபடும் வரை அல்லது விடுவிக்கும் வரை நமது அழைப்பும், உழைப்பும் அவர்களுக்காகவே இருக்கும். இஸ்லாத்தை விளக்கிச் சொல்லி இஸ்லாத்தின் பக்கம் அழைத்துக் கொண்டே இருப்போம்.

இந்த வகையில் கடந்த பல ஆண்டுகளாக அவர்களுக்கேற்படும் அவலங் களையும் அதற்கான தீர்வுகளையும் நாம் முடிந்த வரை மக்கள் மன்றத்தில் இடை விடாமல் வைத்து வருகின்றோம்.

இந்த வகையில், இப்போது அறிவியல் துறையில் அவர்களுக்கு ஏற்படுத்தப்பட்டி ருக்கும் அவலங்களை இங்கே பட்டியலிடு கின்றோம்.

படியுங்கள் இந்தியாவின் உண்மை நிலை புரியும். இப்போது இன்றைய பாசிச ஆட்சியில் அவர்கள் உரிமைகளுக்காகப் போராடும் போதெல்லாம் அவர்களின் உயிருக்கு உலை! கொலை!

இவற்றிலிருந்து அந்த மக்களை மீட்கும் பணியில் ஓய்வுக்கு மட்டுந்தான் ஓய்வு எனக் களம் காணுவோம்.

---

*நீ தொட்டுப் படைத்தவனை*
*இந்த மூடர்கள்,*
*தீண்டத்தகாதவன் என்கின்றார்கள்!*

*பறவையின் பாதையில் - கவிக்கோ அப்துல் ரஹ்மான்*

**சிறுநீரகம் வேண்டும் ஆனால் தலீத் சிறுநீரகம் வேண்டாம்**

*வறுமையின் பிடியில் அந்த மாணவன்,*

*அவன் ரூபாய் 2.7 லட்சம் கடன் பட்டுவிட்டான். பனாரஸ் இந்து பல்கலைக் கழகத்திற்கு,*

படிப்பை பாதியிலே நிறுத்திட வேண்டிய நிலை. அதனால் தனது சிறு நீரகங்களில் ஒன்றை விற்று விடலாம் என்ற முடிவுக்கு வந்தான்.

சிறுநீரகம் தேவைப்பட்டவர்கள், தலீத் (கிட்னி) சிறுநீரகம் வேண்டாம் எனச் சொல்லி விட்டார்கள்.

இதனால் தனது கிட்னியை வாங்குவோரில்லை. அவன் கிட்னியை விற்பனை செய்திட இயலவில்லை. கல்விக் கடனை அடைத்திட இயலவில்லை. படிப்பை முடித்திட இயலவில்லை. பாதியிலே நிறுத்தி விட்டு 4,000 ரூபாய் சம்பளத்திற்கு தெருக்களை சுத்தம் செய்யும் பணிக்கு வந்துவிட்டான். அவன் தான் தலீத் மாணவன் மஹேஷ் உத்திரபிரதேசத்தை சாரந்தவன்.

அவன் பள்ளிப்படிப்பில் 80 சதவீதம் மதிப்பெண் பெற்றே வந்தவன். 10 ஆம் வகுப்பில் 85 சதவீதம் மதிப்பெண்களைப் பெற்றவன்.

உழைத்துக் கொண்டே படித்துக் கொண்டிருந்ததால் அடிக்கடி உடல் நிலை பாதிப்பிற்குள்ளானது. இதனால் உழைத்துப் பெற்ற பணத்தின் பெரும் பகுதியை மருத்துவ செலவுகளுக்கே செலவிட வேண்டி வந்தது. ஆனாலும், பனாரஸ் இந்து பல்கலைக் கழகத்தில் சுரங்கவியலில் இளநிலை இன்ஜினியரிங் படிப்பில் சேர்ந்து விட்டான் (B.Tech. Mining) முதலாம் ஆண்டை வெற்றி கரமாக முடித்துவிட்டான். இதற்காகப் பெற்ற கடன்தான் இரண்டு லட்சத்து எழுபது ஆயிரம் ரூபாய். இந்தக் கடனை கேட்டு பல்கலைக்கழகம் கொடுத்த நெருக்கடியால் தான் அவன் படிப்பை விட்டான்.

தற்கொலை செய்து கொள்ளலாம் என்றிருந்த போதுதான் கிட்னியை - தனது ஒரு சிறுநீரகத்தை விற்பனைச் செய்யலாம் என நினைத்தான்.

கிட்னிக்காக அலையும் தரகர்களைச் சந்தித்தான். தன் கிட்னியை விலை பேசினான். ஆனால் தரகர்கள் தலீத் கிட்னியை யாரும் வாங்க முன் வரவில்லை என்றார்கள்.

கிட்னி தேவைப்படுபவர்கள் கிட்னியை தருபவரின் ஜாதியைத் தவறாமல் கேட்கின்றார்கள் எனத் தரகர்கள் சொன்ன போது மகேஷ் மனம் உடைந்தான்.

மீண்டும் தற்கொலைக்கு திரும்பினான். இதனை அறிந்த அவனுடைய நண்பர்கள் சிலர், இந்த சோகக்கதையை பனாரஸ் பல்கலைக்கழகத்தின் பழைய மாணவர்கள் சங்கத்தினரிடம் கொண்டு சென்றார்கள். அந்த பழைய மாணவர்கள் இந்தத் தொகையை பலரிடமும் திரட்டிப் பல்கலைக்கழகத்திடம் தந்து விட்டார்கள். பல்கலைக்கழகத்தின் கடனை அடைத்த பின்னரும் அங்கே அவன் படிப்பைத் தொடர்ந்திட இயலிவல்லை. தெருவை சுத்தம் செய்யும் தொழிலையே செய்கின்றான்.

மகேஷ் மணிவிளக்கான மாணவன் எனக் குறிப்பிடும் பல்கலைக்கழகம், அவன் தன் படிப்பைத் தொடர்ந்திட ஏன் அனுமதிக்கவில்லை? என்ற வினாவிற்குப் பதில் சொல்வதில்லை? தலீத் என்பதுதான் அதற்கும் காரணமா?

நன்றாக படிக்கும் ஒரு மாணவன் ஏன் தன் படிப்பிற்கு இத்துணை பெரியதொரு தொகையை கடனாகப் பெற வேண்டும்? என்ற வினாவிற்கும் பதில் இல்லை.

பனாரஸ் இந்து பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பிற்கு அவ்வளவு பணமா?

மாணவன் மகேஷ் கடன் பட்டான் என்பதைச் சொல்லும் டைம்ஸ் ஆஃப் இந்தியா நாளிதழ் நாம் மேலே எழுப்பியுள்ள கேள்விகளுக்கு பதில் காணவில்லை.

மோடி ஆட்சியில் அமர்ந்ததும் தலீத் மாணவர்கள், திட்டமிட்டு பல்கலைக்கழகங் களிலிருந்து வெளியேற்றப்படுகின்றார்கள். கொலை செய்யப்படுகின்றார்கள். தற்கொலை நோக்கித் தள்ளப்படுகின்றார்கள் என்பதற்கு இதுவும் ஓர் எடுத்துக் காட்டு!

**ஆதாரம் Times of India, Chennai, January 23,2016.**

**எம்.ஜி.எம்.**

## தலித் மாணவனின் கௌரவம்

அந்த தலீத் 19 ஆம் நூற்றாண்டு விஞ்ஞானி ஒருவரின் பெயரைத்தான் தனக்கு வைத்திருந்தார்.

ஆனால் ஏதோ காரணத்திற்காக இப்போது அவர் அந்தப் பெயரை வைத்துக் கொள்ள விரும்பவில்லை.

அதனால் அவர் தன்னை லெனின் என்றே அழைத்தார்.

பெயரும்,பிறந்த இடமும் நம் நாட்டில் ஜாதிய அடையாளங்களைக் கண்டு கொள்ள பயன்படுபவை. இதை அவன் அந்த தலீத் தன் கல்லூரி வாழ்வின் முதல் நாளிலேயே தெரிந்து கொண்டான்.

அவன் கூறுகின்றான், 'கல்லூரியில் வகுப்பறையில் புகுந்தவுடன் நானும் என்னுடைய நண்பனும் கடைசி நாற்காலியில் அமர்ந்தோம்.

பேராசிரியர் வகுப்பறைக்குள் புகுந்த வுடன், எங்கள் இருவரையும் பார்த்து 'நீங்கள் எங்கிருந்து வருகின்றீர்கள்?' எனக் கேட்டார். நான் என்னுடைய ஊர் பெயரைச் சொன்னவுடன், அவர் என்னிடம் என்ன சட்டையின் கைகளைச் சுருட்டி வைத்திருக் கின்றாய்? சட்டையின் கழுத்துப் பகுதியைத் திறந்து விட்டிருக்கின்றாய்? என்றெல்லாம் கேட்கத் தொடங்கினார்.

ஆனால் வகுப்பறையிலிருந்த எல்லா மாணவர்களும் சட்டைக் கைகளைச் சுருட்டித்தான் வைத்திருந்தார்கள். சட்டை யின் கழுத்துப் பகுதியை பொத்தான் போடாமல் திறந்துதான் வைத்திருந்தார்கள்.

அதன்பின் பேராசிரியர் அவர்கள் இரண்டு பேரையும் அழைத்து நீங்கள் முன் வரிசையில் அமருங்கள். நீங்கள் இரண்டு பேரும் பிரச்னைக்குரியவர்களாக இருக் கின்றீர்கள். உங்களைக் கண்காணிக்க வேண்டும் என்றார். முன்வரிசையில் அமர வைத்தார்.

"என்னுடைய கிராமம் நாச்சிப்பட்டி, அது பட்டியலின மக்கள் அதிகமாக வாழும் பகுதி. இதை அனைவரும் அறிவார்கள். இந்தப் பட்டியலினத்தைச் சார்ந்த மாணவர்கள் என்பதால்தான் அவர்கள் இருவரும் கவனிக்கப்பட வேண்யடிவர்களாகி விட்டார்கள்.

எந்த நிலையான வருமானமுமில்லாத ஒரு குடும்பத்தில் பிறந்த நான்கு குழந்தைகளுள் ஒருவன், அவன். (8000) ரூபாய் எட்டாயிரத்தை கட்டணமாகச் செலுத்தி இருக்கின்றான். எண்ணிப் பார்த்திட இயலாத பெரும் தொகை அது. இந்நிலையில் 'கௌரவம்' என்பது ஒரு பெரும் ஆடம்பரம், அந்த இரண்டு தலீத் மாணவர்களுக்கும்.

லெனினுக்கு 18 வயதுதான் ஆகின்றது. அந்த நிலையில் அவன் அப்போதுதான் தன்னுடைய ஜாதியின் பெயரால் சக மாணவர்கள் மத்தியில் அவமானப்படுத்தப் பட்டான். நெஞ்சம் பொறுக்கவில்லை.

65 மாணவர்கள் கொண்ட ஒரு வகுப்பறையில் மூன்று மாணவர்களே தலீத் மாணவர்கள், இவர்கள் மூன்று பேரும் தனியாக விடப்பட்டனர். பல ஆசிரியர்கள் இதர மாணவர்களிடம், இந்த மூன்று பேரிடமிருந்தும், தூரத்தில் இருக்கும்படி அறிவுறுத்திக் கொண்டே இருந்தார்கள். இல்லையேல் பிரச்னைகள் வந்துவிடும் என எச்சரித்தார்.

மாணவர் லெனின் மெத்த வருத்தத் தோடு இன்னொன்றையும் பதிவு செய்தார். எங்கே பிரச்னை என்றாலும், ஏன் கல்லூரிக்கு வெளியே நடந்தாலும், எங்களைத் தான் ஆசிரியர்கள் அறைக்கு அழைப்பார்கள், கண்டிப்பார்கள்.

மாணவர்களுக்கு வகுப்பாசிரியர்கள் Internal Assessment உள் மதீப்பீட்டு மதிப்பெண்கள் வழங்கிடும் வழக்கம் ஒன்று இருக்கின்றது. அதில் தலீத் மாணவர்களுக்கு முழு மதிப்பீடு வழங்குவதே இல்லை.

25 மதிப்பெண்களுக்கு ஏனைய மாணவர்களுக்கு மாணாவாரியாக 20 மதிப்பெண்களை வழங்கிடும் இந்த

**தொடர்ச்சி 19ம் பக்கம்**

# ஓர் தலித் பேராசிரியரின் ஆதங்கம்!

"அடே! உன்னுடைய ஆங்கிலம் நன்றாக இருக்கின்றதே அதை நீ எங்கிருந்து கற்றாய்?"

ஓர் தலித் பேராசிரியரின் ஆங்கிலப் புலமையைப் பொறுத்துக் கொள்ள வியலாத ஒருவர் அள்ளிச் சொரிந்த காழ்ப்பு.

அந்தப் பேராசிரியரின் ஆதங்கத்தைப் பொறுமையாகப் படியுங்கள்.

"தலீத்களின் ஆதங்கங்களை வெளியே கொட்டிட வழிகளே இல்லை என்றே அந்தப் பேராசிரியர் நம்மிடம் பேசிடத் தொடங்குகின்றார்"

இந்த ஏக்கத்தோடு இன்னொரு கேள்வியையும் நம்முன் வைக்கின்றார்.

நிலையான பொருளாதாரம், Economic Stability நிரூபிக்கப்பட்ட கல்வித் தகுதி,

கூர்மையான அறிவு - இவை ஓர் ஆண் மகனுக்கு அங்கீகாரத்தைப் பெற்றுத் தந்திடுமா?

இவற்றையெல்லாம் ஓர் தலீத் பெற்றிருந்தால் அவன் மனிதனாக மதிக்கப்படுவானா? - இப்படி கேட்டுவிட்டு பேராசியரே பதில் சொல்லுகின்றார்.

இல்லை நிச்சயமாக இவை எதுவும் அவனுக்கு அங்கீகாரத்தையோ - கண்ணியத் தையோ வெறுப்போடு நடத்தப்படுவதி லிருந்து பாதுகாப்போ தந்திடுவதில்லை.

அவனது அறிவு, வாய்மை, நுன்மாண் நுழைபுலம், அனைத்தையும் கடந்த அவனுடைய தலீத் அடையாளமே முன்னே நிற்கும். அவன் தலீத்தாகவே பார்க்கப் படுவான்.

மனது இறுகுகின்றது பேராசிரியருக்கு. கண்கள் கலங்குகின்றன. பின்னர் அதே கண்கள் கோபக்கனலை வீசுகின்றன.

மேலும், தொடருகின்றார். அந்த மேல் ஜாதி மனநிலை Mind Set அப்படியே இருக்கின்றது.

இப்படியெல்லாம் ஆதங்கப்படும் அவர்தான் பேராசிரியர் விவேக் குமார். டெல்லியின் புகழ்மிக்க பல்கலைக்கழகமாம் ஜவஹர்லால் நேரு பல்கலைக் கழகத்தில் 'Sociology' என்ற சமூகவியலில் பேராசிரியராக இருக்கின்றார்.

இவர் 'உலகமயமாக்கல்' என்ற கருத்தியலில் மிகவும் தேர்ந்தவர். சமூக வியலில் பல நூல்களை எழுதியுள்ளார். இன்னும் பல தலைப்புகளில் ஆய்வுகளை மேற்கொண்டுள்ளார். தொடர்ந்து அவற்றைக் குறித்து எழுதியும் வருகின்றார்.

ஆனால் அத்தனையையும் புறந்தள்ளி விட்டு அவரை ஓர் தலீத் ஆகவே பார்க்கின்றார்கள்.

அவரை தலீத்கள் சம்பந்தப்பட்ட விவாதங்களுக்கு மட்டுமே அழைக் கின்றார்கள். சாதாரணமாகவே அவரை அழைக்கும் போது 'சமூகவியல் பேராசிரியர்' என்றழைப்பதிற்குப் பதிலாக தலீத் பேராசிரியர் என்றே அழைக்கின்றார்கள்.

இந்த சொல்லாட்சியிலேயே வெறுப்பைக் கலந்து விடுகின்றார்கள். கொச்சைப்படுத்தப்பட்ட ஓர் அடையாளத் துடனேயே தான் அழைக்கப்படுவதாக அவர் உணருகின்றார்.

என்னை தொலைக்காட்சி விவாதங் களுக்கு அழைக்கும் போது நேயர்களுக்கு 'தலீத் சின்னாக்' என்று அறிமுகப் படுத்துகின்றார்கள். அதாவது என்னுடைய எல்லாத் திறமைகளையும், அறிவுத்துறையில் நான் சாதித்தவற்றையும் ஒன்று போலவே மூடி மறைத்து விடுகின்றார்கள். ஒன்று போலவே மூடி மறைத்துவிடுகின்றார்கள். என்னை மிகவும் குறுகிய வட்டத்திற்குள்ளாலேயே கொண்டு வந்து விடுகின்றார்கள். தலீத் எனச் சுருக்கி விடுகின்றார்கள்.

இது கொடுமையான 'ஜாதீயம்' Crude Casteism.

தலீத் சம்மந்தப்பட்ட பிரச்னைகளில் தாம் அவர்கள் என்னை விவாதத்திற்கு அழைக்கின்றார்கள். நாட்டை உலுக்கும் இதரப் பிரச்னைகளில் என்னிடம் எந்தக் கருத்து, சிந்தனையும் இல்லை என்பது போல் எடுத்துக் கொள்கின்றார்கள். அதன் வழி என்னுடைய கருத்து சுதந்திரம் பறிக்கப்பட்டு விட்டதாகவே நான் கருதுகின்றேன் என்றார்.

இதிலும் கொடுமை என்னவென்றால் உயர் ஜாதி காரர்கள், எல்லோரும் ஒன்றாய் அமர்ந்து 16 கோடி தலீத்கள் எப்படி வாக்களிக்க வேண்டும் - ஓட்டுப்போட வேண்டும் என்பதைத் தீர்மானிக்கின்றார்கள்.

அதே நேரத்தில் 15 ஆண்டுகளாகப் படித்து கொடுத்துக் கொண்டிருக்கும் என்னை உயர் ஜாதி காரர்களின் 'சவர்ணா'வைப் பற்றி விவாதிக்க அழைக்க வில்லை. 'சவர்ணா' என்ற நான்கு வர்ண கொள்கை பெரும் விவாதமாக வந்த நாள்களில் கூட என்னை விவாத்திற்கு அழைத்தவர்கள் யாருமில்லை. சில பல நேரங்களில் என்னை வேண்டுமென்றே ஒதுக்கி வைத்தார்கள்.

ஆனால் நாடெங்கிலுமுள்ள தலீத்கள் என்னை அழைத்துக் கருத்துக் கேட்டார்கள்.

என்னுடைய வெளியீடுகள் எல்லாம் மிகையான பாராட்டைப் பெற்றவை. ஒவ்வொரு நூலும் ஒரு பெரும் ஆய்வறிக்கை தான். ஆனால் மாணவர்கள் சமர்ப்பிக்கும் ஆய்வறிக்கைகளில் என்னுடைய ஆய்வுகளி லிருந்தும், நூல்களிலிருந்தும் மேற்கோள்கள் காட்டப்படுவதில்லை. ஆனால் உயர் ஜாதியினரின் பெயர்கள் தாராளமாகவும், ஏராளமாகவும் மேற்கோள்களில் காட்டப் படுகின்றன.

நான் ஒரே ஒரு எடுத்துக் காட்டை சொல்லுகின்றேன். Dalit Diaspora தலீத் டயோஸ்போரா அதாவது வீடிழிந்து அகதிகளாக அலையும் தலீத்கள் பற்றிய ஓர் ஆய்வு. இந்த ஆய்வின் முன்னோடியே நான் தான். உண்மையைச் சொன்னால் இந்தச் சொல்லாட்சியை வடிவமைத்ததே நான் தான். அண்மையில் இந்த தலைப்பில் ஓர் ஆய்வு வெளியிடப் படுகின்றது. ஆனால் என்னுடைய ஆய்விலிருந்து ஒரு மேற்கோள் கூடக் காட்டப்படவில்லை.

ஓர் தலீத் - ஐ மேற்கோள் காட்டினால் எங்கே அந்த ஆய்வில் குற்றங் குறைகள் சொல்லி வெளியிடாமல் போய் விடுவார்களோ, என்ற அச்சமே அந்த ஆய்வை வெளியிட்டவர்களை பேராசிரியர் விவேக் வெங்கையாவை மேற்கோள் காட்டாமல் விட்டிருக்கலாம்.

இதனை நாசூக்காக சுட்டிக்காட்டும் பேராசிரியர் விவேக் குமார் அவர்கள் தலீத்களின் அறிவுத்திறமையை பாராட்டுவார் யாருமில்லை. ஏன் பயன்படுத்துவார் யாருமில்லை என ஏங்குகின்றார். இதுபோன்ற மாச்சர்யங்களை நீங்கள் எந்த அளவுகோல் கொண்டு அளப்பீர்கள் என்ற வினாவையும் நம் முன்னே வைக்கின்றார்.

தலீத்களுக்கு எதிரான காட்புகளும், கசப்புகளும் இன்றைய நாள்களில் மிகவும் நாசூக்காகப் போய்விட்டது.

ஒரு நேர்காணலில் நேர்காணலை செய்தவர் என்னிம், "உங்கள் ஆங்கிலம் நன்றாக இருக்கின்றது. இதனை நீங்கள் எப்படி கற்றீர்கள்?" எனக் கேட்டார்கள்.

இதனை அவர்ஓர் உயர் ஜாதிக் காரரிடம் கேட்பாரா? நிச்சயமாகக் கேட்க மாட்டார். அல்லது தலீத் அல்லாதவர் களிடமாவது கேட்பாரா? நிச்சயமாக கேட்க மாட்டார்.

பேராசிரியர் விவேக் குமார் அவர்களின் கூற்றுப்படி தலீத்கள் தங்களுக்கு இழைக்கப் படும் அநீதிகளைப் பொறுத்துக் கொண்டு அடங்கி ஒடுங்கி இருந்தால் அவர்கள் சகிப்புத்தன்மையுடையவர்கள் என எடுத்துக் கொள்வார்கள். அவர்கள் தங்கள் கருத்துக் களைப் பேசிடத் தொடங்கினாலே எல்லாம் கெட்டுப் போய்விட்டது எனக் கூப்பாடு போடுவார்கள். நம்மை ஏதாவது சாக்குப் போக்குக்களைச் சொல்லி ஓரங்கட்டுவார்கள். உங்களை நிம்மதியாக இயங்க விட மாட்டார்கள்.

**Omar Khalid in The Hindu - February 7, 2016 Weekly Edition 2**

**தமிழ்வடிவம் : எம்.ஜி.எம்.**

# அந்த தலீத் மாணவன் - 2

“நீங்களெல்லாம் லயோலாவில் சேர்ந்ததால் தான் கல்லூரியின் மகிமை மங்கிப் போயிற்று” - ஓர் தலீத் மாணவனிடம் சக மாணவன் சொன்னது.

அந்த மாணவன் தான் சந்தோஷ் குமார் செல்வராஜ்!

என்னுடைய பெயர் யாருக்கும் தெரியாது. நான் என்ன படிக்கின்றேன் என்பதும் யாருக்கும் தெரியாது. ஆனால் அந்தக் கல்லூரி வளாகத்தில் எல்லோருக்கும் நான் எந்த ஜாதியைச் சார்ந்தவன் என்பது தெரியும். ஏன் தேனீர் விற்பவனுக்கும் தெரியும்.

நான் ஒரு தலீத் கிருஸ்தவன் என்பது எல்லோருக்கும் தெரியும்.

சந்தோஷ் குமார் செல்வராஜ் என்ற இந்த மாணவன், சென்னை லயோலா கல்லூரியில் கணிதத்தில் Ph.D. என்ற ஆராய்ச்சி மாணவனாக இருக்கின்றான். மாணவர்கள் பல ரகங்களில் அவனைப் புறக்கணிப் பதையும், அவனை தனிமைப்படுத்துவதையும் உணர்ந்திருக்கின்றான். அது அவனது சுயமரியாதையை அதிகமாகப் பாதித்திருக் கின்றது.

இது அவனை கல்வி சார்ந்த விஷயங்களிலிருந்து மாற்றி அரசியல் மயமாக்கி இருக்கின்றது.

அவன் தலீத் மாணவர்கள் அமைப்பின் முக்கிய உறுப்பினராக இருக்கின்றான். இந்த அமைப்பு ஹைதராபாத் பல்கலைக்கழகத்தில் ரோகித் வெமுலா கொலை செய்யப்பட்ட பின் ஏற்படுத்தப்பட்டது. நோக்கம், ஜாதியை ஒழிப்பது Annihilation of Caste.

அவனுடைய தாயும், தந்தையும் விவசாய தொழிலாளர்கள். அவனுடைய தந்தை மூன்றாம் வகுப்பு வரை மட்டுமே படித்திருந்தார். ஆனால் அவர் தன் மகன் சந்தோஷ் குமார் செல்வராஜ் முழு அளவில் கல்வியைப் பெற வேண்டும் என விரும்பினார்.

விழுப்புரத்திற்கு பக்கத்திலுள்ள சத்தியகாந்தனூர் கிராமத்தின் ஒரே ஆராய்ச்சி மாணவன். முதல் பட்டதாரியும் கூட.

பள்ளி நாள்களில் கடைசி பெஞ்ச் இல் இருக்க வைக்கப்பட்டான். அப்போது என்னுடைய வெட்க உணர்வு காரணமாக இருந்திருக்கலாம். ஆனால் இப்போது நடப்பது பட்டவர்த்தனமான ஒதுக்குதல் என்கின்றான்.

சென்னையில் எல்லாமே வித்தியாசமாக இருக்கின்றது. 2013 ஆம் ஆண்டில் ஒரு நாள் ஒரு பேராசிரியர் வகுப்பறையில் ஜாதியின் அடிப்படையில் அமருங்கள் என மாணவர்களிடம் சொன்னார் என்கின்றார்.

இந்தப் பேராசிரியர் இப்படி பல முறை ஜாதி வெறியைக் காட்டி இருக்கின்றார். அதனால் நாங்கள் மாணவர்கள் நிருவாகத்திடம் புகார் செய்தோம். அவர் மீது நடவடிக்கை எடுக்கச் சொல்லி கேட்டோம்.

ஆனால் நிர்வாகம் அவர்மீது எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. மாறாக, எங்களிடம் மன்னிப்புக் கேட்டது. மன்னிப்புக் கேட்பது, நீதி கிடைத்துவிட்டது என்றாகிவிடாது. (An Apology is not Justice)

லயோலா கல்லூரியின் முதல்வர் கண்ணியத்திற்குரிய டாக்டர் ஜோசப் ஆண்டொணி சாமி அவர்கள், மேலே குறிப்பிட்ட நிகழ்ச்சிக்கும் ஜாதி முறைக்கும் எந்த சம்மந்தமுமில்லை என்றார். அந்த நாளில் அந்த விரிவுரையாளர், மாணவர்களை தாங்கள் தேர்ச்சிப் பெற்றிருக்கும் பாடங்களின் அடிப்படையில் அமரச் சொன்னார் அவ்வளவுதான் எனச் சொன்னார். லயோலாவில் அது போன்ற செயல்கள் நடப்பதில்லை என்றும் கூறினார். அது அட்வான்ஸ் புள்ளிவிபர வகுப்பு. அதில் மாணவர்களை அவர்கள் எடுத்த பாட வரிசைபடி குழுக்களாக அமரச் சொன்னார். பௌதீகம், கணிதம், வணிகவியல் எனப் (பாட

வரிசையாக) மாணவர்களை குழுக்களாக அமரச் சொல்லி இருக்கின்றார் என்பது லயோலா கல்லூரியின் முதல்வர் தந்த விளக்கம்.

சந்தோஷ் இன்னும் சில ஜாதிய இடித்துரைகளைச் சொன்னான். சில மாணவர்கள் அவனிடம் லயோலாவின் கல்வி மகிமை மங்கி வருகின்றது காரணம் உங்களைப் போன்ற தலீத் மாணவர்கள் அதில் அதிகம் இடம் பிடிக்கத் தொடங்கி விட்டார்கள். உங்களுக்கு பல சலுகைகளும் கிடைக்கின்றன. அதனால் தான் நீங்கள் இங்கே அதிக இடம் பிடித்துக் கொள்கின்றீர்கள்.

கல்லூரி ஆசிரியர்களுள் ஒருவர் சந்தோஷ் செல்வராஜ் தனிப்பட்ட முறையில் அழைத்து, தலீத் மாணவர்களின் கல்வி பதிவேடுகள் மிகவும் மோசமான நிலையையே காட்டுகின்றது எனக் கூறியுள்ளார். ஆனால் உண்மையான கல்வி பதிவேடுகள் வகுப்பில் முதன்மை இடத்தைப் பிடித்தவர்கள் தலீத் மாணவர்கள் தாம் என்பதையும் அதிகமாக தேர்ச்சி பெற்றவர்களும் தலீத் மாணவர்கள் தாம் என்பனவற்றை எடுத்துக் காட்டுகின்றன என்கின்றார் சந்தோஷ்.

இன்னும் சில வாசகங்கள் நான் எப்போதும் கேட்டுக் கொண்டே இருக்கின்றேன். அந்த சொற்கள் “நீங்கள் உடுப்பது - ஆடை அணிவது - அதைப் போல்தான் இருக்கின்றது நீங்கள் சாப்பிடும முறையும் அதைப் போலத்தான் இருக்கின்றது. நீங்கள் பேசுவதும் அதைப் போல்தான் இருக்கின்றது” இவை தமிழகம் முழுவதும் பேசப்படுவதுதான் அது இங்கேயுமிருக் கின்றது.

சந்தோஷ் குமார் செல்வராஜ் எல்லோருக்கும் ஒரே விதமான பதிலைத்தான் சொல்லிக் கொண்டிருக்கின்றான். அது,

உங்களால்தான் நாங்கள் அப்படி உடுக்கின்றோம்.

உங்களால் தான் நாங்கள் அப்படி உணணுகின்றோம்.

உங்களால்தான் நாங்கள் அப்படி பேசுகின்றோம்.

நான் செல்லுமிடமெல்லாம் நான் தலீத் சமுதாயத்தைச் சார்ந்தவன் அதனால் பெருமைப்படுகின்றேன் என்றே சொல்லிக் கொண்டிருக்கின்றேன்.

அவனுடைய மின்னஞ்சல் முகவரி ‘தி கிரேட் தலீத்’ என்று தான் தொடங்குகின்றது. இந்த ‘சொல்தான்’ தலீத் என்ற சொல்தான் என்னை கற்றவனாக ஆக்கி இருக்கின்றது.

**திவ்வியா காந்தி :** The Hindu (English) February 7, 2016

**தமிழ் வடிவம் : எம்.ஜி.எம்.**

---


# அடிமைத்தனத்தை இஸ்லாம் அங்கீகரித்தா?

**மூலம் : முஹம்மது குதுப் மிஸ்ரி**

**(முன்னாள் பேராசிரியர் உம்முல்குறா பல்கலைக்கழகம், சவூதி அரேபியா)**

**தமிழில் : மு. குலாம் முஹம்மது**

பக்கங்கள் - **64**

விலை ரு. **50** மட்டுமே

**வேர்கள் பதிப்பகம்,**

**52/1, மண்ணடி தெரு, மண்ணடி,**

**சென்னை - 600 001.**

**தொடர்ப்புக்கு : 8148129887**

# அவர்கள் படித்தால் கழனியிலே யார் வேலை செய்வார்கள்?

உத்திரப்பிரதேசம் - தலீத்களின் உரிமைப் போர் போராளி மாயாவதி பல முறை ஆட்சிச் செய்த மாநிலம். அங்குதான் நாம் மேலே சொன்ன கேள்வியை ஆதிக்க ஜாதியினர் கேட்கின்றார்கள்.

இதனுடன் இன்னொரு விஷயம் இணைந்து வேலை செய்கின்றது.

அது "இவர்கள் படித்தால் கூலியைக் கூட்டிக் கேட்பார்கள். உரிமைகள் பேசுவார்கள்." இப்படிப் பேசியே கிராமங்களிலுள்ள தலீத் இளைஞர்களின் கல்வியை மறுத்துவிட்டார்கள்.

இது போன்ற தடைகளைத் தாண்டி ஒரு தலீத் மாணவன் பாசி படிக்க வந்துவிட்டான். லக்னோவிலுள்ள டாக்டர் அம்பேத்கர் மத்திய பல்கலைக்கழகத்தில்.

அவன் முனைவர் பட்டம் பெற அரசாங்கத்தின் நிதி உதவிக்கு காத்திருந்தான். நிதி உதவியை வழங்கிட வேண்டியவர்கள் வழங்கிவிட்டார்கள். ஆனால் கல்லூரி நிருவாகம் அதனை 'பாசி'இடம் ஒப்படைக்க மறுத்து விட்டது.

ஒரு காரணம், அல்லது ஒரு சாக்குப் போக்கு இவற்றைச் சொல்லியே அவனை ஏமாற்ற வருகின்றார்கள்.

உத்திரப்பிரதேசத்தின் இன்னும் பல கிராமங்களில் வேறு வகையான அடக்கு முறை நடைமுறையில் இருக்கின்றது. அது, தலீத்கள் தங்கள் குழந்தைகளுக்குப் பெயர் வைத்திடும் போது, அந்தக் குழந்தை 'தலீத்' என்பதை எளிதில் அறிந்திடும் வகையில் வைத்திடவேண்டும்.

இல்லையேல், ஆதிக்க ஜாதியினர் அறிந்தால் அந்தப் பெயரை மாற்றிட வேண்டியது வரும். மறுத்தால் பயங்கர விளைவுகளைச் சந்திக்க வேண்டியது வரும்.

**Source: The Hindu February 7, 2016.**

---

**14ம் பக்கத்தின் தொடர்ச்சி . . .**

ஆசிரியர்கள் எங்களுக்கு 10 முதல் 12 மதிப்பெண்களே தருகின்றார்கள்.

லெனின் தருமபுரியில் ஜாதி இந்துகளால் நடத்தப்படக் கூடிய கல்லூரி ஒன்றில் முதுநிலை விஞ்ஞானப் படிப்பைப் படித்து வருகின்றார். அவர் இளம் நிலை பட்டப்படிப்பில் 70 சதவீதம் மதிப்பெண்கள் பெற்று தேறினார்.

அவர்கள் அம்பேத்கர் உருவத்தை பயன்படுத்திட அனுமதிக்கப்படுவதில்லை. கறுப்புச் சட்டை அணிந்திட அனுமதிக்கப் படவில்லை. இத்தனைக்கும் இந்தக் கல்லூரி கறுப்புச் சட்டையை அறிமுகப்படுத்திய பெரியார் பல்கலைக்கழகத்தின் கீழ் வருகின்றது. இது எண்ண பெரிதாக அழுத்தி வருகின்றது. ஆனால் நான் இதுவரை கருஞ்சட்டை அணிந்திட முயன்றதில்லை.

Courtesy : The Hindu Sunday Magazine : Dated 7th February 2016 - Tamil Version

**எம்.ஜி.எம்.**

**வைகறை வெளிச்சம் படியுங்கள்**

# மார்பக வரி (முலைகர்ணம்) - அதனை எதிர்த்தவருக்கு நினைவிடம்

வேர்கள் வெளியீட்டகத்தின் சார்பில், அண்மையில் நூல் ஒன்றை வெளியிட்டோம். அது தலைசிறந்த வழக்கறிஞர் லஜபதி ராய் அவர்களால் எழுதப் பெற்றது. நூலின் பெயர் 'நாடார் பெருங்குடி மக்கள் ஏன் மதம் மாறினார்கள்?'.

இந்த நூல் வழக்கறிஞர் அவர்கள் அன்றைய ஜாதிக் கொடுமைகளுள் ஒன்றான மார்பக வரியைப் பற்றிக் குறிப்பிடுகின்றார்கள்.

அதாவது, மார்பகத்தை மறைக்க விரும்பும், பெண்கள், அதற்கொரு வரியைச் செலுத்த வேண்டும். இல்லையேல் மார்பகம் அறுக்கப்படும்.

இதில் திப்பு சுல்தான் அந்தப் பெண்களுக்கு மார்பகத்தை மறைக்கும் உரிமையைப் பெற்றுத் தந்ததையும் குறிப்பிடுகின்றார்கள்.

இந்த மார்பக வரி குறித்து, இப்போது சில வரலாறு கிடைத்திருக்கின்றது.


அதனை இங்கே தருகின்றோம்.

-ஆசிரியர்

முன்னோடி வழக்கறிஞர் லஜபதி ராய் அவர்கள், மார்பகத்திற்கு வரியும் அதனை மூடி மறைப்பதற்கு வரியும், விதித்த வரலாற்றை தன்னுடைய கட்டுரையில் விரித்துரைத்துள்ளார்கள்.

அண்மையில் ஓர் அதிசயமான கண்டுபிடிப்பு. அது ஆட்சியாளர்கள் இந்த மார்பக வரியை வசூலிப்பதில் காட்டிய வேகத்தையும், ஆதிக்க ஜாதியினரின் இந்த வரியை எதிர்த்த வீராங்கனையின் வரலாறும் ஒன்று போலவே உலகறிய வந்தது.


நடந்தது வழக்கறிஞர் லஜபதி ராய் அவர்கள் குறிப்பிடும் அதே திருவிதாங்கூர் இராஜியம் தான். நடந்த காலம் சுமார் 100 ஆண்டுகளுக்கு முன். இடம் திருவிதாங்கூர் இராஜ்யம், நாங்கிலி கிராமம், சேர்த்தலா தாலூக். இப்போது கேரள மாநிலத்தில் இருக்கின்றது. 'நாங்கிலி' என்ற சொல்லுக்கு 'அழகு' எனப் பொருள். 'நாங்கிலி' என்பது தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்த ஒரு பெண்ணின் பெயர்.



இவர் முப்பது வயதை அடைந்த அழகிய மாது. ஒரு கட்டத்தில் இவர் தன்னுடைய மார்பகத்திற்கு விதிக்கப்பட்ட வரியைச் செலுத்துவதில்லை என முடிவு செய்திருந்தார்.

ஆனால் திருவிதாங்கூர் இராஜ்யத்தின் உயர் ஜாதி ஆட்சியாளர்கள் விடுவதாக இல்லை.

தொடர்ந்து மார்பக வரி வசூலிப்பவர்களை நாங்கிலியின் வீட்டுக்கு அனுப்பி வரியை வசூலித்து வரக் கட்டாயப்படுத்தினார்கள். ஆனால் அழகி நாங்கிலி இந்த வரியைச் செலுத்துவதை மிகப் பெரிய அவமானமாகக் கருதினார். அதனால் மார்பக வரியை தருவதில்லை என்பதில் உறுதியாக இருந்தார்.




இந்த மார்பகவரிக்கு மலையாள மொழியில் முலைக்கர்ணம் என்று பெயர்.

'அழகி' தொடர்ந்து வரியைக் கட்டிட மறுத்து வந்ததால் வரி பாக்கி அதிகரித்துக் கொண்டே சென்றது.

மார்பகம் பெரியதாக இருந்ததால் வரியும் அதற்குத் தகுந்தாற் போல் அதிகமாக இருக்கும். அழகியின் மார்ப்பகங்கள் பெரியவை அதனால் விதித்த வரியும் அதிகம்.

'முலைக்கர்ணம் பார்வத்தியார்' அதாவது மார்பகவரியை வசூல் செய்யும், பார்வத்தியார் ஒரு நாள் பல முறை நாங்கிலியை, அதாவது அழகியைத் தேடிப் போய்விட்டார்.

அழகி - நாங்கிலி அவரை சற்றுப் பொறுங்கள், இதோ வரித் தொகையோடு வருகின்றேன் என்றார்.

ஓர் வாழை இலையை எடுத்து விரித்தாள். விளக்கொன்றை ஏற்றி வைத்தாள். தன் மார்ப்கங்களை ஒவ்வொன்றாக அறுத்து வைத்தாள். மடிந்தாள்.

மார்பகவரியை வசூலிக்க வந்த பார்வத்தியாருக்கு இந்த மார்பகங்களைத் தந்துவிடுங்கள் எனச் சொல்லாமல் சொன்னாள். மார்பக வரிக்கு எதிராகத் திப்பு சுல்தானின் நடவடிக்கைகளுக்குப் பின்,

நூறு ஆண்டுகளுக்கு முன் அழகி நாங்கிலி அறுத்து வைத்த மார்பகங்கள் தாம் 'முலைவரி' என்ற மார்பக வரிக்கு எதிராக எழுந்த முதல் எதிர்ப்பலை என்பது வரலாற்று ஆய்வாளர்களின் கருத்து.

இந்த இடம் அன்றைய நாள்களில், இந்த அதிர்வான நிகழ்ச்சிக்குப் பின் 'முலைச்சிபரம்பு' மார்பகப் பெண் வாழ்ந்த இடம் என்றே வழங்கப்பட்டது.

பின்னர் இந்த போராட்ட வரலாற்றை வரலாற்றுச் சுவடுகளிலிருந்து மாய்த்திட விரும்பினார்கள் ஆதிக்க ஜாதியினர். இதனால் இந்த இடத்தை முலைச்சிபரம்பு என்பதை மனோரமா காவலா என மாற்றினார்கள்.

ஆனால் அவள் வாழ்ந்த அந்த ஓலைக் குடிசை இடிபாடுகளுடன் அதே இடத்தில் இருக்கின்றது.

முரளி என்ற ஓவியர் இந்த வரலாற்றைச் சித்திரமாகத் தீட்டி அந்த இடத்தில் வைத்திருக்கின்றார்.

அந்த ஊர் மக்கள் ஒவ்வொருவரும் "நாங்கள் இந்த வரலாற்றை செவி வழி செய்தியாகக் கேட்டு வளர்ந்தோம். இப்போது எங்கள் உள்ளக் கிடக்கையை அப்படியே சித்திரமாக வரைந்துள்ளார் முரளி" என அவரை பாராட்டுகின்றார்கள்.

இந்த இடம், இடம்பெறும், சேர்த்தலாதான் முன்னாள் இராணுவ அமைச்சர் ஏ.கே. அந்தோணி அவர்களின் சொந்த ஊர்.

இந்த வரலாறு பேணப்படவேண்டும், அழகி நாங்கிலிக்கு நினைவிடம் ஒன்றும் எழுப்பப்பட வேண்டும என்பது அந்த மக்களின் வேண்டுகோள்.

**Times of India 7.3.2016**

அழகி, நாங்கிலிக்கு குழந்தைகள் இல்லை. அவருடைய அக்காளுக்கு குழந்தைகள் உண்டு. சந்ததிதிகளும் உண்டு. அவர்கள் இப்போது இந்தக் கிராமத்தில் வாழ்ந்திடவில்லை.

செய்தி ஆதாரம் : **Times of India 7.3.2016**


**எம்.ஜி.எம்.**

# மால்கம் X கருத்தரங்கம்

இந்தியாவில் எப்படி சாதியை கொண்டு மக்கள் ஒடுக்கப்படுகின்றார்களோ அதே போல் அமெரிக்காவில் மனிதனின் நிறத்தை அடிப்படையாகக் கொண்டு கருப்பு நிற மக்களை அமெரிக்கர்கள் ஒதுக்கினர். ஒடுக்கப்பட்ட மக்களில் ஒருவராக பிறந்த அவர்களின் உரிமைக்காக போராடி இறுதியில் இஸ்லாம் ஒன்றே தீர்வு என்பதை முன்னிறுத்தி அமெரிக்க மக்களுக்கான விடுதலையை பெற்றுத் தந்தவர் மால்கம் X.

நமது தாருல் இஸ்லாம் பவுண்டேசன் டிரஸ்ட் மற்றும் வைகறை வெளிச்சம் வாசகர் வட்டம் சார்பாக கடந்த மாதம் (பிப்ரவரி) தமிழ்நாட்டின் பல்வேறு இடங்களில் மால்கம் X அவர்களின் போராட்டத்தையும் அவர்கள் பெற்ற விடுதலையும் அவர் காட்டிய வழியையும் மக்களிடம் கொண்டு போய்ச் சேர்ப்பதற்காக பல கருத்தரங்குகளையும் பிரச்சார மையங்களையும் அமைத்து விழிப்புணர்வு ஏற்படுத்தி வந்தது.

இந்த அடிப்படையில் மதுரையில் காஜிமார் தெரு பத்து நோன்புச் சாவடியில் கடந்த 28.2.2016 அன்று மாலை 7.00 மணி முதல் 10.00 மணி வரை நமது தாருல் இஸ்லாம் பவுண்டேசன் டிரஸ்ட் அமைப்பின் உறுப்பினர்கள் மற்றும் நமது வைகறை வெளிச்சம் இதழின் வாசகர்களும் இணைந்து ஒரு கருத்தரங்கத்தை ஏற்பாடு செய்திருந் தார்கள். இக்கருத்தரங்கத்தில் சிறப்பு அழைப் பாளராக தலித் மக்களுக்காக போராடக் கூடிய சகோ. கருப்பையா, சமயநல்லூர், மதுரை அவர்களும், விடுதலை சிறுத்தைகள் கட்சியின் துணை மாநில செயலாளர் சகோ. கனி அமுதன், மதுரை அவர்களும் வந்திருந்தனர். சிறப்புரை வழங்குவதற்காக திருப்பூரைச் சார்ந்த சகோ. காதர் மைதீன் அவர்களும் வந்திருந்தார். மேலும் இஸ்லாமிய மக்களும் மற்ற சகோதரர்களும் குறிப்பாக தலித் மக்கள் பெரும்பாலானோர் நிகழ்ச்சியில் திரளாக கலந்து கொண்டனர்.



இந்நிகழ்ச்சி திருக்குரானின் வசன (கிரா அத்) உரையுடன தொடங்கப்பட்டது. அதன் பிறகு சகோதரர் ஜாகிர் உசைன் அவர்கள் அறிமுக உரை நிகழ்த்தி இக்கருத்தரங்கம் நடைபெறுவதற்கான நோக்கத்தை மக்களிடம் எடுத்துரைத்தார். அதற்கு பிறகு சிறப்பு அழைப்பாளராக வந்திருந்த கருப்பையா அவர்கள் உரையாற்றினார்.


சகோ. கருப்பையா தனது உரையில் இந்து மதம் என்ற மதம் உள்ள வரை இங்கு சாதிகள் ஒழியாது, தீண்டாமை ஒழியாது, அடக்குமுறைகள் ஒழியாது! மதமாற்றமே இங்குள்ள அனைத்து பிரச்சனைகளுக்கும் தீர்வு என அழுத்தமாக கூறினார். மேலும் தானும் தன் சமுதாயமும் இதுவரை சாதி இந்துக்களால் அனுபவித்த கொடுமைகள் அனைத்தையும் மக்களிடம் பகிர்ந்து கொண்டார். தலித் மக்கள் மீதான இன்றைய அரசின் அடக்குமுறைகளையும் மக்களிடத் தில் எடுத்துரைத்து பேசினார்.

அடுத்ததாக பேசிய நிகழ்ச்சியின் சிறப்பு அழைப்பாளர் சகோ. கனிஅமுதன் அவர்கள் ஆற்றிய உரையில், “மால்கம் X அவர் களுடைய போராட்ட வழிமுறையும் அவர்கள் பெற்ற விடுதலையும், இன்றைய தலித் மக்களின் வாழ்வுக்கு மிக பொருத்தமானது. தலித் மக்கள் நாகரிகமாக வாழ்வதற்கு இஸ்லாம் ஒன்றே சிறந்த வழி. கிறிஸ்தவத்தில் சென்றாலும் தலித் கிறிஸ்தவன், செட்டியார் கிறிஸ்தவன் என அழைக்கின்றார்கள். ஆனால் இஸ்லாத்தில் மட்டும் தான் அப்படியொரு நிலை என்றுமே இருந்தது இல்லை. இன்றைய அரசினால் ஒன்று தலித் மக்கள் கொல்லப் படுகின்றார்கள் அல்லது தற்கொலைக்கு தூண்டப்படுகின்றார்கள். அவர்கள் காவல் துறை அதிகாரியாக இருந்தாலும், கல்லூரி மாணவனாக இருந்தாலும் இன்னும் எவ்வளவு பெரிய உயர் பதவியில் இருந்தாலும் சரியே!” மேலும் இது போன்ற நிகழ்ச்சிகளை தொடர்ந்து நடத்தும்படி நம்மிடம் கேட்டுக் கொண்டார்.

கருத்தரங்கத்தின் மையமான சிறப்புரையை சகோ. காதர் மைதீன் அவர்கள் பேசுகையில் மால்கம் X அவர்களுடைய வாழ்ககையில் நடந்த நிகழ்ச்சிகளையும் அவரது சிறுகுழந்தை பருவத்திலிருந்து அவரது இறுதிக்காலம் வரை அவர் அனுபவித்த சோதனைகளையும் இறுதியாக அவர் எதற்காக கொல்லப்பட்டார் என மால்கம் X அவர்களுடைய முழு வரலாற்றையும் மக்களிடம் எடுத்துரைத்தார்.

கருத்தரங்கத்தின் முடிவாக கலந்துரையாடல் நிகழ்ச்சியை ஏற்பாடு செய்திருந்தோம். இந்நிகழ்ச்சியில் பல தலித் மக்கள் இஸ்லாம் சம்பந்தமாக அவர்களுக்கு இருந்த பல சந்தேகங்களை கேட்டனர். இதற்கு சரியான விளக்கம் தரப்பட்டது. அவர்கள் திருப்தியும் அடைந்தனர்.

கலந்துரையாடல் நிகழ்வுடன் கருத்தரங்கம் இனிதே நிறைவுற்றது. கருத்ரங்கத்தை சிறப்பாக நடத்தி தந்த அல்லாஹ்வுக்கே எல்லா புகழும்.


விலை ரூ. 200 மட்டுமே

**இப்போது பரபரப்பான விற்பனையில்**




விலை ரூ. 225 மட்டுமே

**வேர்கள் பதிப்பகம்,**

**52/1, மண்ணடி தெரு, மண்ணடி, சென்னை - 600 001. தொடர்ப்புக்கு : 8148129887**

# அடிமைத் தனத்தை இஸ்லாம் . . . ?

1980களில் தாம், இந்த நூல் முதல் பதிப்பைச் சந்தித்தது. ‘குமுதம்’ இதழில், ‘புதுத்தகம்’ என்றொரு பகுதியில் புதிய புத்தகங்களை அறிமுகப்படுத்துவார்கள். அதில் இந்த நூலும் இடம் பெற்றது.

நான் அப்போது இந்திய ரெயில்வேயில் பணியாற்றிக் கொண்டிருந்தேன். தொழிலாளர்களின் நலனிலும் அக்கறை எடுத்துக் கொள்வேன். இதனால் பல்வேறு தொழிற்சங்க அமைப்புக்களையும் சார்ந்தவர்கள், என்னோடு மிகவும் நெருங்கி வந்தார்கள்.

அவர்களுக்கும் முஹம்மத் குதுப் அவர்களின் இஸ்லாம் ஒரு தவறாகப் புரிந்து கொள்ளப்பட்ட மார்க்கம் என்ற ஆங்கில நூலை அவ்வப்போது தந்திருக்கின்றேன்.

இந்த நிலையில் அந்நூலின் என்னுடைய மொழி பெயர்ப்பும் சிறு, சிறு நூலாக வெளிவரத் தொடங்கி இருந்தது. ஆமாம், இஸ்லாம் தவறாகப் புரிந்துகொள்ளப் பட்ட மார்க்கம் என்ற அந்த நூலின் ஒவ்வொரு அத்தியாயத்தையும் ஒரு நூலாக நான் வெளியிட்டிருந்தேன். இவற்றையும் அந்த கம்யூனிஸ்ட் நண்பர்களுக்குத் தந்தேன். அவர்களும் படித்தார்கள். மிகவும் ஆச்சர்யப் பட்டார்கள். இப்படியெல்லாமா இஸ்லாத் தில் நூல் இருக்கின்றது? என்பதுதான் அவர்களின் ஆச்சர்யம். கம்யூனிச இயக்கங் களிலிருந்த பல முஸ்லிம் சகோதரர் கள். அதிலிருந்து கொள்கை ரீதியாகத் தங்களை விடுவித்துக் கொண்டார்கள்.

ஆனால் ஒரு தொழிலாளி என்ற அடிப்படையில் ஓர் தொழிற்சங்கத்தில் உறுப்பினராக இருந்திடவேண்டுமே என்பதற் காக இருந்தார்கள். இப்படி அவர்கள் பல முறை என்னிடம் சொல்லி இருக்கின்றார்கள்.

சில கம்யூனிச சித்தாந்த வகுப்புக்கள் அவர்களுக்கு நடத்தப்பட்ட போதும், அடிமைத் தனத்தை இஸ்லாம் அங்கீகரித்தது என அவர்களுக்குப் பாடம் நடத்தப்பட்ட போதும் அவர்கள் “இப்போது இதற்கெல்லாம் விளக்கம் சொல்லவும் மறுக்கவும் நூல்கள் வந்துவிட்டன. அவை தமிழிலேயே கிடைக்கின்றன” என்பதையும் சொல்லி இருக்கின்றார்கள்.

1992களில் ‘The Week’ என்ற பத்திரிகை இஸ்லாம்தான் அடிமை முறையை அறிமுகப்படுத்தியது, அதனை நிலைபெறச் செய்தது என்ற அடிப்படையில் கட்டுரை ஒன்றைப் பிரசுரித்திருந்தது. அவர்களின் ‘Islam the misundertood Religion’ என்ற நூலின் அத்தியாயத்தை அதாவது, ‘Islam and Slavery’ ஜெராக்ஸ் எடுத்து அனுப்பி வைத்தேன். ஜெராக்ஸ் உண்மை நகல் நன்றாகவே வேலை செய்தது. அவர்கள் மொத்தப் புத்தகத்தையும் கேட்டார்கள். புத்தகத்தை அனுப்பி கொடுத்தேன்.

நன்றி சொன்னார்கள், கடிதம் வழி! ஆனால் என் மறுப்பையோ அல்லது புத்தகத்தின் பக்கங்களையோ வெளியிட வில்லை. கண்டித்து ஓர் கடிதம் எழுதிடலாமா? என எண்ணினேன். அன்றைய நாள்களில் பத்திரிகைகளுக்கு இப்படி மறுப்பு தேவைப்படும் போது கண்டிப்புக் கடிதங் களும் எழுதுவது எனது வாடிக்கை! இதனை ஜமாஅத்தே இஸ்லாமி என்ற அமைப்பின் தமிழக உயிர்நாடி மர்ஹூம் ஜமீல் அஹ்மத் சாகிப் மிகவும் பாராட்டுவார். உற்சாகந் தருவார்.

ஆனால் வீக் ‘The Week’ பத்திரிகைக்கு கண்டித்துக் கடிதம் எழுத வேண்டாம் என முடிவு செய்தேன். ஆனால் இனி எப்போதாவது அவர்கள் அடிமைத்தனத்தைப் பற்றி எழுதினால் தவறாமல் நாம் எழுதிட வேண்டும் மறுப்பும், கண்டிப்பும் என முடிவு

செய்திருந்தேன். அப்படி எதுவும் வந்ததாகத் தெரியவில்லை. ஆனால் முன்னைப் போல் என்னால் எல்லா இதழ்களையும் கண்காணித்திட இயல வில்லை.

வாசகர்கள் இதில் ஓர் உதவியைச் செய்யலாம். அது உங்கள் பார்வையில் எந்தப் பத்திரிகையிலாவது அடிமைத்தனத்தையும் இஸ்லாத்தையும் இணைத்து செய்திகளோ, கட்டுரைகளோ வந்தால் இந்த நூலை அனுப்புங்கள். அத்தோடு வேர்கள் வெளியீட்டகத்தின் பார்வைக்கும் கொண்டு வாருங்கள். என் அலைபேசியில் ஒரு தகவல் வந்தால் போதும் அலை பேசி மின்னஞ்சல் ஆகியவற்றை இந்த நூலில் தந்திருக்கின்றோம். எனது பொதுவுடைமை சகோதரர்கள் நூலின் தரத்தை வெகுவாகப் பாராட்டினார்கள். அல்ஹம்ந்து லில்லாஹ். இந்தப் பின்னணியுடன் இந்த நூலை உங்கள் முன் சமர்ப்பிக்கின்றோம்.

# முஸ்லீம் லீக் மாநாட்டில் சிறைவாசிகளை விடுவிக்க தீர்மானம்!



மார்சு 10, விழுப்புரத்தில் நடந்த முஸ்லிம் லீக் இன் முஹல்லா ஜமாஅத் ஒருங்கிணைப்பு மாநாட்டில் பின் வரும் தீர்மானம் நிறைவேற்றியது.

**தமிழ் ஆயுள் சிறைவாசிகளை விடுதலை செய்ய வேண்டும்**

முன்னாள் பிரதமர் ராஜீவ் கொலை வழக்கில் தூக்கு தண்டனை விதிக்கப்பட்டு பின்னர் ஆயுள் தண்டனையாக குறைக்கப்பட்டவர்களை விடுவிக்க தமிழக அரசு எடுத்துள்ள முடிவையும் அறிவிப்பையும் வரவேற்கிறோம்.

தமிழகத்தில் கோவை உள்ளிட்ட மத்திய சிறைச்சாலைகளில் அடைக்கப்பட்டுள்ள 49 முஸ்லிம் கைதிகள் 22,20,18,15,14 வருடங்கள் என சிறையில் இருப்பவர்கள் அவர்களின் வழக்குகளை தமிழக காவல்துறையே நடத்தியது. எனவே ஆளுனருக்குள்ள அதிகாரத்தை பயன்படுத்தி இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் 161வது பிரிவின்படி தமிழக அரசே விடுதலை செய்ய முடியும் என்பது தெளிவாக உள்ளது.

அண்ணா பிறந்த நாள் உள்ளிட்ட விசேஷ காலங்களில் கூட முஸ்லிம் சிறைவாசிகள் விடுவிக்கப்படாமல் இருப்பதற்கு 1987 ஜூலை 20ல் பிறப்பிக்கப்பட்ட அரசாணையே தடையாக உள்ளதாகவும் கூறப்படுகிறத. அந்த அரசானையைத் திரும்பப் பெறுவதோடு நீண்ட காலமாக சிறையில் வாடும் முஸ்லிம் சிறைவாசிகளையும் விடுவிக்க வேண்டுமென தமிழக அரசை இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது.

# "இஸ்லாமிய பிரச்சாரம் ஏன்? எப்படி?" கருத்தரங்கம்!

சிந்திக்கும் ஆற்றலை பெற்றவன் மனிதன். அம்மனிதன் பகுத்தறிவு எத்தகையதென்றால் அது இந்த உலகத்தையே விஞ்சி நிற்கும் விஞ்ஞானமாகும். வானத்தை பிளந்து பூமியை குடைந்து தன் வாழ்க்கை பிரயானத்தை பூர்த்தி செய்யும் மனிதன் தூணில்லா வானத்தையும், நிலையில்லா பூமியையும் படைத்த தன் ஒப்பில்லா இறைவனின் ஆற்றலை தன் சிந்தனையில் ஏனோ சிந்திக்க மறக்கிறான். தன் பாதைகள் திசைமாறும் போது நேரான பாதையை கற்று உணர்த்தவே பல இறைதூதர்கள் பூமியில் வலம் வரவே செய்தார்கள். தங்களின் கடமைகளை நிறைவுறவே செய்தார்கள். அதுமட்டுமல்லாது அவர்கள் அந்தந்த சமூகத்திற்கு தன் சீர்திருத்தத்தை விட்டு செல்லவும் செய்தார்கள். அந்த சீர்திருத்தமே உம்மத்தே முஹம்மது ஆகிய நமது முதல் அடிப்படை கடமையாகும்.

இறைவன் தன் திருமறை குர்ஆனில் இறைதூதர் முஹம்மது நபியை எப்படி எதற்கு இந்த உலகத்திற்கு அனுப்பினான் என்று கூறும் போது, அவனே தன் தூதரை நேரான வழியைக் கொண்டும் சத்திய மார்க்கத்தைக் கொண்டும் அனுப்பியிருந்தான். சகல மார்க்கங்களையும் விட அதை மேலோங்கச் செய்வதற்காக (இதற்கு) அல்லாஹ் சாட்சியாக இருப்பதே போது மானது. (அல்குர்ஆன் 48:28). இந்த சத்திய மார்க்கம் இஸ்லாம் என்பது முஸ்லிம்களுக்கு மட்டும் சொந்தமான மார்க்கம் அல்ல. உலகில் உள்ள அனை வருக்கும் அது பொதுவான பின்பற்றப்பட வேண்டிய மார்க்கமாகும். அது மட்டுமல்லாது அந்த மார்க்கத்தை பிற மக்களிடம் ஏற்றிவைப்பது மனோ இச்சையை கொண்டு தன் வாழ்க்கை நெறியாக்கி உலாவரும் மனிதனை நன்மையை கொண்டு ஏவுவதும் தீமையை கொண்டு தடுப்பதும் ஒவ்வோர் முஸ்லிம்களின் மீதும் கட்டாய அடிப்படை கடமையாகும். அல்லாஹ் முஹம்மது நபிக்கு மட்டும் இஸ்லாத்தை மார்க்கமாக்கவில்லை. அவன் தன் எல்லா இறை தூதர்களுக்கும் இஸ்லாத்தை தன் மார்க்கமாக்கி கொடுத்திருக்கின்றான். தன் திருமறையில் கூறுகையில் நூஹூக்கு எதனை அவன் உபதேசித்தானோ அதனையே உங்களுக்கும் அவன் மார்க்கமாக்கியிருக் கின்றான். ஆகவே (நபியே) நாம் உமக்கு வஹீமூலம் அறிவிப்பதும் இப்ராஹீமுக்கும், மூஸாவுக்கும், ஈஸாவுக்கும் நாம் உபதேசித்ததும் என்னவென்றால், நீங்கள் (அனைவரும்) சன்மார்க்கத்தை நிலை நிறுத்துங்கள். நீங்கள் அதில் பிரிந்து விடாதீர்கள் என்பதே. இணைவைப்போரை நீங்கள் எதன் பக்கம் அழைக்கின்றீர்களோ அது அவர்களுக்கு பெரும் சுமையாகத் தெரிகிறது. தான் நாடியவர்களை அல்லாஹ் தன் பால் தேர்ந்தெடுத்துக் கொள்கிறான். (அவனே) முன்னோக்குபவரை அவன் தன்பால் நேர் வழி காட்டுகிறான். (அல்குர்ஆன்-42:13). இவ்வாறு கூறுகிறான். ஆகவே சன் மார்க்கத்தை நிலை நாட்டுவதென்பது இஸ்லாமிய பிரச்சார அழைப்பு பணி என்பது முஸ்லிம்களின் மீது விதிக்கப்பட்டுள்ளது.

அல்லாஹ்வின் அழைப்பு பணியாம் இஸ்லாமிய பிரச்சாரத்தை உணர்ந்தன் விளைவாக தமிழ்நாடு மட்டுமல்லாது இந்தியாவின் வடமாநிலங்களிலும் பிரச்சார புத்தகங்களை மொழி பெயர்த்து 35 ஆண்டுகளாக கால் பதித்து தன் 36 ஆம் ஆண்டை எதிர்நோக்கி இஸ்லாமிய பிரச்சாரத்தை செவ்வனே செய்து வருகிறது தாருல் இஸ்லாம் ஃபவுண்டேஷன் டிரஸ்ட். இஸ்லாத்தை பிரச்சாரம் செய்வதை பொறுக்க வியலாதவர்கள் பல தடைகளையும் புதிய சட்டங்களையும் கொண்டு புணைக்க முற்படும் போது அது வென்றெடுக்கவே செய்தது. முற்போக்கு சிந்தனையாளர்கள் ஈண்டெடுத்த இந்த இஸ்லாமிய பிரச்சாரம் தன் பாதையை முன்னோக்கி செல்கிறது.

இஸ்லாம் மனிதர்கள் அனைவருக்குமே

அருளப்பட்ட மார்க்கம். இஸ்லாத்தின் வழிகாட்டுதல்களை எல்லோருக்கும் எடுத்துச் சொல்லிட வேண்டியது முஸ்லிம்களின் கடமை. அதன் அடிப்படையில் தன் தொடர்ச்சியாக இதை ஏன்? செய்ய வேண்டும் எப்படி செய்ய வேண்டும்? என்பதை இஸ்லாத்தின் பிரச்சாரம் செய்வதில் வெற்றிக் கண்டவர்கள் விளங்கிச் சொல்லும் கருத்தரங்கம் நாகர்கோவில் பெருவிளை மதரஸா மஹாலில் வைத்து 31.0.1.2016 அன்று அல்லாஹ்வின் உதவியால் பயிற்று விக்கப்பட்டது. களங்களின் அனுபவங்கள் எடுத்துரைக்கப்பட்டன. தமிழ்நாடு முஸ்லிம் நலச் சங்கம், மஸ்கட் பொது செயலாளர் ஜனாப் எஸ்.பி.எம். பாசல் அலி அவர் தலைமை தாங்கி இனிதே இந்நிகழ்ச்சியை துவக்கி வைத்தார்கள். மேலும் முஸ்லிம் ஜமாஅத் ஒருவர் முஹல்லம் வடக்கு சூரங்குடியை சார்ந்த தலைவர் ஜனாப் முஹம்மத் ஃபாருக் அவர்கள் முன்னிலை வகுத்தார்கள். கம்யூனிஸ சிந்தனையில் வலம் வந்த கொடிக்கால் அவர்கள் இறையருளால் இஸ்லாத்தை ஏற்று தான் முன்பு இருந்ததையும் தற்போது கொடிக்கால் ஷேக் அப்துல்லாஹ்வாக இஸ்லாத்தை பின்பற்றும் அனுபவத்தையும் அங்கே எடுத்துரைத்தார்கள். தான் ஏன் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டேன் என்பதையும் இஸ்லாமிய பிரச்சாரத்தின் முககியத்துவத்தையும் அங்கே எடுத்துரைத் தார்கள். அதுமட்டுமல்லாது, கொடிக்கால் ஷேக் அப்துல்லாஹ் அவர்கள் கன்னியாகுமரி தாவா சென்டரின் அமைப்பாளராக இருந்து வருவது குறிப்பிடத்தக்கது.

கிறிஸ்தவத்திலே வளர்ந்து தன்னை ஒரு பாதிரியாராக அறிமுகம் செய்து கிறிஸ்தவத்தை போதித்து வந்த எம்.சி. முஹம்மது அவர்கள் தன்னை அல்லாஹ்வின் அடியானாக்கி இஸ்லாத்தின் முழு நேர பிரச்சாரராக தன்னை ஈடுபடுத்தி வருகின்றார் கள். அங்கே அவர்கள் எப்படி இஸ்லாத்தை பிரச்சாரம் செய்ய வேண்டும் என்பதனை தன் அனுபவம் மூலம் மக்களுக்கு பயிற்று வந்தார்கள். மேலும் வைகறை காப்பாள ருமான ஆசிரியர் மற்றும் தாருல் இஸ்லாத்தின் காப்பாளருமான ஜனாப் மு. குலாம் முஹம்மது அவர்கள் தன் தாஃவாவின் 35 ஆண்டுகால அனுபவத்தையும் களத்தில் எதிர் கொண்ட பிரச்சனைகளையும் அதை எதிர் கொண்ட விதத்தையும் அங்கே எடுத்துரைத்தார்கள். தாஃவாவே முஸ்லிம் களின் உயிர் மூச்சு என்பது அங்கே எடுத்துரைக்கப்பட்டது.

சூரங்குடியை சேர்ந்த ஜனாப் அலி அவர்கள் தாருல் இஸ்லாத்தின் சிறப்பு பணிகளையும் சமுதாயத்தின் பங்கினையும் அங்கே எடுத்துரைத்தார்கள். மு. குலாம் முஹம்மது அவர்களின் எழுத்துக்களுக்கும் இலக்கியங்களுக்கும் சீதக்காதி விருதினை பெற்றதை அங்கே நினைவூட்டினார்கள். இஸ்லாமிய சமுதாயத்திற்கு இது போன்ற எழுத்துக்களும், தாஃவாவின் முக்கியத்து வத்தை எடுத்துரைக்கும் கருத்தரங்குகளும் தேவை எனவும் இது போன்ற இஸ்லாமிய பிரச்சாரத்தை ஆங்காங்கே பயிற்றுவிக்க வேண்டும் எனவும் கேட்டுக் கொள்ளப் பட்டது.

அல்லாஹ் தன் (திருமறையில் கூறுகிறான் மேலும் (மக்களை) நன்மையின் பக்கம் அழைப்பரவராகவும், நல்லதைக் கொண்டு (மக்களை) ஏவுபவர்களாகவும் தீயதிலிருந்து (மக்களை) விலக்குபவர் களாகவும் உங்களிலிருந்து ஒரு கூட்டத்தார் இருக்கட்டும். இன்னும் அவர்களே வெற்றி பெற்றவராவர். (அல்குர்ஆன் 31:104) அப்படிப்பட்ட ஒரு கூட்டமாக இன்ஷா அல்லாஹ் நம் அனைவரையும் அல்லாஹ் ஆக்கி அருள் புரியட்டும். இது போன்ற இஸ்லாமிய பிரச்சாரத்தின் முக்கியத்துவத்தை பட்டி தொட்டிகளிலும் பயிற்றுவிப்போம். மக்களை இஸ்லாத்தின் பால் அழைப்போம். சன்மார்க்கத்தை நிலை நாட்டுவோம்!

**நாகர்கோவிலிருந்து அப்துல் பாஸித்**

# கிருஸ்தவர்களைத் தாக்கும் இந்துத்துவா!

சட்டமன்ற தேர்தல் நெருங்கும் சமயம் இது. சிறு சிறு கட்சிகளெல்லாம் கூட்டணி அமைத்து ஆதாயம் அடைவதற்கு அலைந்து திரிந்து கொண்டிருக்க மதத்தின் பெயரால் மக்களை மோதவிட்டு கொழுந்து விட்டெறியும் தீயில் குளிர் காய நினைக்கும் பி.ஜ.க.யின் அணுகுமுறை வேறுவிதமாக இருக்கிறது.

கோயம்புத்தூரில் விமான நிலையத்திற்கு அருகில் உள்ள அழகிய கிராமம் காளப்பட்டி. இக் கிராமத்தை சுற்றிலும் பெரும்பாலும் தனியார் பொறியியல் கல்லூரிகள் மற்றும் பள்ளிக் கூடங்கள்தான். இவ்வாறு கல்விச் சூழலில் சூழப்பட்ட காளப்பட்டி இன்று கலவரச் சூழலில் சிக்கித் தவிக்கிறது. இதற்குக் காரணம் காளப்பட்டியில் மனித உருவில் நடமாடும் ஆள்கொல்லி குட்டி (எ) பிரகாஷ்.

குட்டி (எ) பிரகாஷ் தன்னுடைய நண்பர்களின் சக்தி வேல் (சிங்காநல்லூர்), விக்னேஷ் (சவுரிபாளையம்), தேவராஜ், சம்பத் என்பவர்களையும் மற்ற இரண்டு பேர்களையும் சேர்த்துக் கொண்டு 12.3.2016 அன்று மாலை 6.00 மணியளவில் அங்குள்ள சி.எஸ்.ஐ. கிறிஸ்தவ ஆலயத்திற்குள் புகுந்து கிறிஸ்தவர்கள் வணங்குகின்ற சிலைகளை அடித்து நொறுக்கி சேதப்படுத்தியதோடு அவ்வாலயத்தைக் காக்கின்ற வயதான தம்பதியினர் பால்ராஜ், மரியம்மையையும் மிரட்டிச் சென்றுள்ளனர்.

இந்த இருக்குமிடம் 1926ஆம் ஆண்டு ஆங்கிலேய ஆட்சியின் போது ஆலயம் கட்டுவதற்கென ஒதுக்கீடு செய்யப்பட்டது. அப்போது இந்த ஆலயம் கட்டப்படவில்லை.

1948 ஆம் ஆண்டு இந்த ஆலயம் கட்டப்பட்டது. பழைய கட்டிடம் என்பதால்



மிகுந்த சேதத்திற்கு உள்ளானது. அதனால் ஏழு ஆண்டுகளுக்கு முன்பாக அந்த வளாகத்தினுள்ளே புதிதாக ஒரு ஆலயம் கட்டத் தொடங்கினர் சிறுபான்மை கிறிஸ்தவர்கள். இதைக் தாக்கியுள்ளார்கள்.

கிட்டத்தட்ட 30 ஆண்டுகளாக இவ்வாலயத்தை காவல் காக்கும் பணியில் ஈடுபட்டுள்ள பால்ராஜ், மரியம்மை கூறியதாவது:

“இந்த ஆலயத்திற்கு ஆங்கிலேயர்கள் வந்து வழிபாடுகளில் கலந்து கொண்டனர். அந்த சமயத்தில் இங்கு 200க்கும் மேற்பட்ட கறிஸ்தவ குடும்பங்கள் இருந்தன. ஆனால் தற்போது 100 குடும்பங்களுக்கும் குறைவாகவே உள்ளனர். காரணம் கேட்டதற்கு 1980களில் குடிநீர் பற்றாக்குறை, மற்றும் போக்குவரத்து வசதி இல்லாததாலும் கிட்டத்தட்ட 100 குடும்பங்கள் நகரத்திற்கு புலம் பெயர்ந்து சென்று விட்டனர் கூறினர்.



ஆலயம் தொழுவது சாலமும் நன்று என்பதினை அறிந்திராத ப.ஜ.க., இந்து முன்னணியினர் சிலர் நீதிமன்றத்தில் கிறிஸ்தவர்கள் புறம் போக்கு இடத்தில் ஆலயம் கட்டுகிறார்கள் என்று வழக்கு தொடர்ந்தார்கள். (VAO, தாசில்தான், RDO, DRO, கலெக்டர் இவர்களுக்கெல்லாம் தெரியாத புறம்போக்கு இடம் நாலைந்து ரவுடிகளுக்கு தெரிந்திருககிறது. என்ன கொடுமை சார்! இது) இவ்வழக்கு கடந்த ஏழு ஆண்டுகளாக நிலுவையில் இருந்து வருகிறது.”

சில மாதங்களுக்கு முனபு ஆலய நிர்வாகம் சென்னை உயர்நீதிமன்றத்தை அணுகி கட்டிட வேலைகள் தொடர்ந்து நடப்பதற்கான அனுமதியை வாங்கியது. புதிய ஆலயம் கட்டி முடிக்கப்பட்டு 9.3.16 அன்று திறப்பு விழாவும் இனிதே நடைபெற்றது.

இதனை பொறுக்காத சமூக விரோதிகள் குட்டி (எ) பிரகாஷ் என்பவனின் தலைமையில் ரவுடி கும்பல் 12.03.2016 அன்று மாலை ஆலயத்தை தேசப்படுத்தியதோடு அங்கு காவல் பணிபுரியும் வயதான தம்பதியினர் பால்ராஜ், மரியம்மாவையும் மிரட்டி சென்றுள்ளனர்.

கோயம்புத்தூரிலுள்ள அணைத்து கிறிஸ்தவ மக்களும் ஒருங்கிணைந்து மாவட்ட ஆடசியரிடத்தில் புகார் அளித்தனர். அதன் அடிப்படையில் கோவில்பாளையம் போலீசார் 295(A), 147, 148,452, 502(A) ஆகிய வழக்குகளின் கீழ் 3 பேர் மீது மட்டும் வழக்கு பதிவு செய்து மற்றவர்களை விடுவித்து விட்டனர்.

1997ல் முஸ்லிம்களுக்கு எதிராக கலவரங்களை நடத்தி 1998ல் மத்தியில் ஆட்சியை பிடித்து பா.ஜ.க. தற்போது கிறிஸ்தவர்களுக்கு எதிராக கலவரத்தை உருவாக்கி சட்டமன்றத்தில் ஒரு சில சீட்டுக்களை பெற்று விடலாம் என்று கனவு காண்கின்றது.

இவர்களது (பா.ஜ.க.) ஆட்சியில் நேர்மையான அதிகாரிகள் கொலை செய்யப்படுவதும் (கர்கரே, ஐ.பி.எஸ்.) கோவிந்த் பன்சாரே போன்ற சிந்தனை யாளர்கள் ொகலை செய்யப்படுகின்றனர்.

விருதுகளை திரும்பக் கொடுக்கும் எழுத்தாளர்கள். மிரட்டப்படுகின்றார்கள். கோடிக்கணக்கில் மக்கள் வரிபணத்தை கொள்ளையடிக்கும் கொள்ளைக்காரர் களுக்கும்(ரிலயன்ஸ் அம்பானி), இயற்கை வளத்தை நாசமாக்கியவர்களுக்கும் (ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர்) பத்மஸ்ரீ விருதுகள் வழங்க காத்திருப்பதும், தலீத் மற்றும் சிறுபான்மை மக்களை தொடர்ச்சியாக கொலை செய்து வருவதையும் மக்கள் மறக்க மாட்டார்கள் மன்னிக்கவும் மாட்டார்கள்.

**கோவையிலிருந்து சிக்கந்தர்**

# தீன் சுடர் டி.எம். உமர் பாரூக்

**-மு. குலாம் முஹம்மத்**

அண்ணன் டி.எம். உமர் ஃபாருக் அவர்களின், தாழ்த்தப்பட்டவனின் வாழ்வி லே என்றொரு தொடரை எழுதினார்கள். அதை நான் என்ற கட்டுரையை எனது விடியல் வெள்ளி பத்திரிகையில் தொடராக வெளியிட்டு வந்தேன்.

தொடர் 20 மாதங்கள் தொடர்ந்தன.

தொடர் என்னைப் போன்றவர்களின் உள்ளங்களில் இப்படியுமா நடக்கும் சுதந்திர இந்தியாவில் என்ற எண்ணத்தை ஏற்படுத் தியது. விடுதலை அடைந்த இந்தியாவில் விடுதலை அடையாத மக்கள், இன்னும் இருட்டறையில் பூட்டி வைக்கப்பட்ட மக்கள் கோடிக்கணக்கில் இருக்கின்றார்களே என்ற ஆதங்கத்தையும், ஆற்றாமையையும் சேர்த்தே உணர்த்தியது.

அதே நேரத்தில் இவர்களை நிரந்தரமாக விடுவிக்கும் மருந்தாக இஸ்லாம் இருக்கின்றது. அதை நாம் அந்த மக்களிடத் தில் தொடர்ந்து விளக்கிச் சொல்லி வருகின்றோம். அதற்காகவே அந்த மக்களைத் தொடர்ந்து சந்தித்து வருகின்றோம். இறைவனின் பெருங்கிருபை யினால் ஒரு நல்ல பணியையும் செய்து தானே வருகின்றோம் என்ற ஆறுதலும் இருந்தது.

ஆனால் பல வாசகர்கள் குறிப்பாக அப்போது என்னுடன் மனித நீதிபாசறை என்ற அமைப்பில் பணியாற்றி வந்தவர்கள், தொடரில் அத்துணை ஆர்வம் காட்டிட வில்லை. ஆர்வம் காட்டிடவில்லை என்பது மட்டுமல்ல, அவர்கள் தொடரை நிறுத்து வதற்கான வழிமுறை களைக் காணுங்கள் என்றார்கள். இது ஒரு தொடருக்குகெதிரான ஒருவகை எதிர்ப்பு. மற்றொன்று கண்ணீர் மல்க தலீத் பெருங்குடி மக்கள் எழுதிய கடிதங்களும், தொலைபேசி அழைப்புகளும்.



அந்தக் கடிதங்களும் தொலைபேசி அழைப்புகளும் எங்கள் அவலங்களை நெஞ்சை அடைத்துக் கொண்டிருக்கும், கொடுமைகளை பதிவு செய்ய ஒரு பத்திரிகை இருக்கின்றது என்பது எங்களுக்கும் பெருத்த ஆறுதலை தருகின்றது எனத் தெரிவித்தார்கள்.

இந்த வகையில் தேனி மாவட்டம் முத்துத் தேவன்பட்டியைச் சார்ந்த ஆசிரியர் ஹிதாயத்துல்லாஹ் அவர்கள் இந்தத் தொடரால் பெரிதாகக் கவரப்பெற்றார்கள். வெறும் நூறு பத்திரிகைகள் விற்றுக் கொண்டிருந்த தேனி மாவட்டத்தில் அறுநூறு பத்திரிகையை விற்றுத் தந்தார்கள்.

ஆனால் அடிதவறாமல் டி.எம். மணி அவர்களை உடனேயே இஸ்லாத்தில்

இணைந்திட சொல்லுங்கள், காலந்தாழ்த்திட வேண்டாம் என்றார்கள். இதனை டி.எம். அவர்களிடம் நேரிலும், பலமுறை சொல்லி இருக்கின்றார்கள் ஆசிரியர், ஹிதாயத் துல்லாஹ் அவர்கள். சில நேரங்களில் அன்பாகவும், பல நேரங்களில் கோபமாகவும் சொல்லி இருக்கின்றார்.

ஆசிரியரின் கோபம் எல்லாம் அறிந்த ஒருவர் ஏன் இன்னும் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ளவில்லை என்பதிலிருந்து தோன்றியது.

சென்னையில் நடந்த எங்கள் ஆலோசனைக் குழுவில் அதாவது நாங்கள் மனித நீதி பாசறை என்ற இயக்கமாக உருவெடுப்பதற்கு முன்பு ஒரு முறை ஓர் முடிவெடுத்தார்கள்.

அதில் நானும் காரைக்கால் உமர் அவர்களும் கணமும் தாமதிக்காமல் டி.எம். அவர்களிடம் சென்று அவரை இஸ்லாத்தை உடனேயே ஏற்றிடச் சொல்லிட வேண்டும் எனப் பணித்தார்கள். கலீமாவைச் சொல்லுவதற்குள் மரணம் வந்துவிட்டால் டி.எம். உமர் ஃபாருக் அவர்கள் நரகம் சென்றுவிடுவார்களே என்ற அச்சம் தான் ஆலோசனைக் குழுவை அப்படி முடிவெடுக்கச் செய்தது.

ஆலோசனைக் குழுவின் முடிவின்படி நானும், காரைக்கால் உமர் அவர்களும் டி.எம். அவர்களைச் சென்று சந்தித்தோம். அவர் நாங்கள் சொன்னவற்றைப் பொறுமை யாகச் செவிமடுத்தார்கள். முடிவில் இப்படிச் சொன்னார்கள்.

“நான் மதமாற்றத்தை முடிவு செய்து உங்களுக்குச் சொல்வேன். இப்போது அதற்குள்ள சூழ்நிலைகள் இல்லை” எனச் சொல்லி விட்டார்கள். இதற்காகவே கும்பகோணம் வரை சென்னை நாங்கள் வெறுங்கையோடு வீடு திரும்பினோம்.

இனி ‘ஹிதாயத்’ என்ற நேர்வழியின் பக்கம் மக்களை இணைப்பது என்பது அல்லாஹ்வின் கைகளில் உள்ளது என இருந்தோம்.

ஆனால் டி.எம். அவர்கள் தனக்குக் கீழிருந்த மக்களைத் தொடர்ந்து இஸ்லாத்தை ஏற்க சொல்லிக் கொண்டே இருந்தார்கள்.

மொத்தத்தில் எல்லோரும் அண்ணன் டி.எம். அவர்கள் விரைந்து இஸ்லாத்தை ஏற்றிட வேண்டும் என்பதில் மிகைந்த ஆர்வமுடையவர்களாக அக்கறை உடையவர் களாக இருந்தார்கள் என்பதை நாம் பார்த்திட முடிந்தது.

ஆனால் அண்ணன் டி.எம். உமர் ஃபாருக் அவர்களின் தொடரை இப்போது புரிந்து கொண்ட அளவுக்கு அப்போது பெரும்பாலோர் புரிந்து கொள்ளவில்லை. தலீத் பெருங்குடி மக்களைத் தவிர.

அன்று தொடரை நிறுத்த சொன்னவர்கள், பிற்றை நாட்களில் எங்களோடு சேர்ந்து தாஃவா செய்யுங்கள் என அவருடைய இல்லந்தேடி சென்று அழைத்தார்கள்.

அதனால் தொடரை முடிக்கச் சொல்லி அழுத்தங்கள் வந்தன.

அதனால் நான் அண்ணன் டி.எம். அவர்களிடம் நாசூக்காக ஒரு சொல்லைச் சொல்லிட வேண்டியதாயிற்று. அதை அண்ணன் அவர்கள் எடுத்துக் கொண்ட விதம் அலாதி!

அதனை அடுத்த இதழில் பார்ப்போம்.

இன்ஷா அல்லாஹ்.

**தொடரும்**

# பா.ஜ.க.வும் வராக்கடனும்






பி.ஜே.பி. ஆட்சி கட்டிலில் ஏறிய காலத்திலிருந்து சிலரை காப்பாற்றி வருகிறது. காப்பாற்றப்பட்டவர்கள் ஏழைகளோ, நிரபராதிகளோ, சாமானியர்களோ அல்ல. மத்திய அரசின் அதிகாரிகளால் தேடப்படும் குற்றவாளிகளின் பட்டியலில் இருக்கும் சில கோடிஸ்வரர்கள் தாம் அவர்கள். இதில் முதன்மையானவர்கள் லலித் மோடியும், விஜய் மல்லையாவும்.

ஐ.பி.எல். கிரிக்கெட்டின் வாயிலாக அறியப்பட்டவர் லலித் மோடி இவர் பண பரிவர்த்தனை மோசடியில் ஈடுபட்டதாக மத்திய அரசு அதிகாரிகள் குற்றம் சாட்டினர்.

இந்த லலித் மோடி தன் மீது வழக்கு இருக்கும் போதே ஜாமீன் பெற்று லண்டனுக்கு தப்பியோடினார்.





1700 கோடி நிதி மோசடி சூதாட்டம் தில்லுமுல்லு உள்ளிட்ட பல குற்றச்சாட்டுகளை உள்ளடக்கிய 16 வழக்குகளில் சிக்கிய இந்த மோடியின் பாஸ்போர்ட்டை ரத்து செய்தாலாவது இந்தியாவுக்கு திரும்புகிறாரா பார்க்கலாம் என்ற அடிப்படையில் கடந்த காலம் மத்திய அரசு 2010ல் அவருடைய பாஸ் போர்ட்டை ரத்து செய்தது. இன்று வரை இந்திய தாய்நாட்டின் பக்கம் தலைவைக்காத தேசியவாதியாக இருக்கிறார் லலித் மோடி! (ஆதாரம் : தி ஹிந்து ஜூன் 19,2015 திருச்சி)

பாஸ்போர்ட் விவகாரத்தில் லலித் மோடிக்கா வாதாடிய வழக்கறிஞர் பி.ஜே.பி. தலைவர்களில் ஒருவரான சுஷ்மா சுவராஜின் மகள் பன்சூர் ஸ்வராஜ். நீதிமன்றமும் பாஸ்போர்ட் முடக்கத்தை ரத்து செய்தது. இதனால் இன்று வரை இந்திய தாய்நாட்டின் பக்கம் தலைவைக்காத தேசியவாதியாக இருக்கிறார் லலித் மோடி (ஆதாரம் - தி ஹிந்து ஜூன் 19,2015 திருச்சி)

ஒரு குற்றவாளியை காப்பாற்றுவதற்காக ஒரு பி.ஜே.பி. அமைச்சரின் குடும்பமே போராடியிருக்கிறது என்னே ஒரு தேச பற்று! இவையெல்லாம் பார்க்கும் போது கருப்பு பணத்தை மீட்போம் எனும் கோஷம் போடும் இந்துத்துவா கட்சியின் செயல் முரணானதும் நாட்டுக்கு எதிரானதுமாகும்.

அதே போல் தான் விஜய் மல்லையாவின் கதையும்! இவர் நம் நாட்டு வங்கிகளிடமிருந்து 9000 கோடி ரூபாய் கடன் பெற்றிருந்தார். இன்று கடனை அடைக்காமல் வெளிநாட்டுக்கு தப்பி ஓடி விட்டார். இப்பணம் நம் நாட்டின் சாமான்யர்கள் தங்கள் தேவைகளை சுருக்கி சேமித்த பணமிது. ஊதாரிகளுக்காக சேமித்த சேமிப்பில்லை!

வங்கியிடம் இருந்து 9000 கோடி கடன் பெற்ற குற்றச்சாட்டுக்காக கடந்த ஆண்டு (2015) டிசம்பர் மாதம் சி.பி.ஐ. அதிகாரிகளின் கண்காணிப்பில் விஜய் மல்லையா கொண்டு வரப்பட்டார். ஆனால் மார்ச் 02, 2016 அன்று லண்டனுக்கு சகல ஏற்பாடுகளுடன் ஏழு பெரிய சூட்கேஸ்களுடன் தப்பி ஓடினார். (ஆதாரம் தி ஹிந்து டிசம்பர் 11,2015 மதுரை) (ஆதாரம் - The Times of of India March,11,2016 Madurai)

இடைப்பட்ட காலத்தில் பி.ஜே.பி. அரசு மல்லையாவின் பாஸ் போர்ட்டை முடக்காமல் வெளிநாடு தப்பி செல்லும் வரை அமைதி காத்தது. இப்பிரச்னையை எதிர் கட்சிகள் பாராளுமன்றத்தில் எழுப்பிய போது, டெல்லி கிரிக்கெட் வாரியம் ஊழல் மன்னன் மத்திய நிதியமைச்சர் அருண் ஜெட்லி "நீதிமன்ற உத்தரவின் அடிப்படையில் மட்டுமே ஒருவருடைய பாஸ்போர்ட்டை முடக்க முடியும். இல்லாவிட்டால் ஒருவர் வெளிநாடு செல்வதை யாராலும் தடுக்க முடியாது" என்று தனது பா.ஜ.க. அரசின் கையாலாகாத தனத்தை வெளிப்படுத்தினார். (ஆதாரம் : தி இந்து மார்ச், 11,2016 மதுரை)

மேலும் அக்டோபர் 2015 அன்றே சி.பி.ஐ. அதிகாரிகளால் விஜய் மல்லையா வெளிநாடு செல்வதை தடுப்பதற்காக ஓர் சுற்றறிக்கை எல்லா விமான நிலையங்களுக்கும் அனுப்பப்பட்டிருக்கிறது. இந்த சுற்றறிக்கையையும் கண்டு கொள்ளாமல் மல்லையா 9000 கோடி சொத்துடன் தப்ப வைக்கப்பட்டிருக்கிறார் (ஆதாரம் - Times of India 11, March, 2016, Madurai)

ஓர் குற்றவாளி சி.பி.ஐ. விசாரணை வலைக்குள் இருந்தாலும் வெளிநாடு எளிதாக தப்பி செல்லலாம் எனும் நிலை இந்துத்துவா கட்சி பி.ஜே.பி. ஆட்சியில் மட்டுமே முடியும்.

உள்நாட்டில் உள்ள வராக்கடனையே வசூலிக்க முடியாதவர்கள் வெளிநாட்டில் இருக்கும் கருப்பு பணத்தை மீட்டு வருவார்களாம்! யார் காதில் பூ சுற்றுகிறார்கள்?

9000 கோடி கடன் வாங்கி மோசடி செய்தவரை வெளிநாட்டுக்கு தப்ப விட்டு விட்டு ஏழை விவசாயிகளை அவர்கள் வாங்கிய கடனுக்காக அடித்து உதைத்து அனைத்தையும் பிடுங்கி அவர்களை துன்புறுத்துவது தான் இந்துத்துவ சாம்ராஜ்ஜியத்தின் வெற்றியோ! (ஆதாரம் : கார்டூன், தி இந்து, மார்ச், 10,2016 மதுரை)

ஆனால் தன் பொருளாதார சீர்திருத்த கொள்ளைக்காக பேச முனைந்த மோடி அம்பானிக்கும் சாமானியருக்கும் அரசுக் கொள்கை ஒன்றே என வாய் பந்தல் போட்டதை நாம் மறந்துவிடக் கூடாது. (ஆதாரம் : திஇந்தும ஏப்ரல் 12, 2015)

சாமானியருக்கு ஒரு நீதி! பணக்காரர்களுக்கு ஒரு நீதி என்பது மனுநீதியின் நவீன வடிவமாகும். இதுதான் இன்றைய பா.ஜ.க.வின் நீதியும் கூட!

அநீதி கட்சி பா.ஜ.க. வை புறக்கணிப்போம்.

# வைகறை வெளிச்சம் மறுப்புக்கு விளக்கம்

**6.9.2015 அன்று திருப்பூரில் மௌனத்தின் சாட்சியம் என்ற நாவலின் அறிமுக நிகழ்ச்சி நடைபெற்றது. நிகழ்ச்சியில் தாருல் இஸ்லாம் சார்பில் திருப்பூர் பொறுப்பாளர் ஜனாப் காதர் மொய்தீன் அவர்கள் உரையாற்றினார்கள். அதனை நமது வைகறை வெளிச்சம் அக்டோபர் 2015 இதழில் வெளியிட்டிருந்தோம். அதில், அந்த நாவலில் இடம் பெற்ற பல கருத்துக்களுக்கு எதிரான கருத்துக்கள் இடம் பெற்றிருந்தன.**

**இந்த எதிர் கருத்துக்களுக்கான மறுப்பொன்றை அந்த நாவலின் ஆசிரியர் ஷம்ஸ் ஹீரா அவர்கள் அனுப்பி இருந்தார்கள். அதனை பெப்ருவரி 2016 வைகறை வெளிச்சம் இதழில் வெளி யிட்டிருந்தோம்.**

**அந்த மறுப்பிற்கான விளக்கம் ஒன்றை திருப்பூர் காதர் மொய்தீன் அவர்கள் எழுதி அனுப்பி இருந்தார்கள். அதனை கடந்த பெப்ருவரி இதழிலும், மார்ச்சு இதழிலும் வெளியிட்டிருந்தோம். நாவலாசிரியர் ஷம்ஸ் ஹீரா அவர்கள் பல அடிப்படைகளிலேயே முரண்படுவபதால் அவருக்கான பதிலை மிகவும் விளக்கமாகச் சொல்லிட வேண்டிய தேவை ஏற்பட்டது. அந்த விளக்கத்தின் தொடர்ச்சியை இந்த இதழிலும் வெளியிடுகின்றோம். (சென்ற இதழில் அதிக இடம் ஒதுக்கிட இயலவில்லை என்பதே காரணம்)**

*வைகறை வெளிச்சம் இதழுக்கு ஆசிரியர் தந்த மறுப்பில் இப்படிக் கூறுகின்றார்.*

*“கம்யூனிச ஆட்சி பற்றி நீங்கள் கேட்டக் கேள்விக்கு உலகில் கம்யூனிச ஆட்சி எங்கு நடந்தது என்று உதாரணம் சொல்லுங்கள் என்று மேடையிலேயே கேட்டேன். இங்காவது நீங்கள் பதில் சொல்லி இருக்கலாம். உலகில் இதுவரை எந்த நாட்டிலுமே கம்யூனிச ஆட்சி வந்ததில்லை. (ஆதிப் பொதுவுடமை சமூகம் தவிர்த்து). அப்படி இருக்க கம்யூனிச ஆட்சியில் வறுமை ஒழியவில்லை என்பதும், கம்யூனிசம் தோற்றுப் போய் விட்டது என்று சொல்வதும் எந்த அளவுக்கு நியாமானதாக இருக்கும்? கம்யூனிச சமூகம் என்பது இறுதிக் கட்டம். சோசலிசக் கட்டம் என்பது கம்யூனிச சமூகத்திற்கு முந்தையக் கட்டம். அதாவது கம்யூனிச சமூகத்தை நோக்கி நகரும் கட்டம். கம்யூனிஸ்ட்டுகள் சில நாடுகளில் அதிகாரத்திற்கு வந்தார்கள். அங்கு சோசலிச ஆட்சியை நிறுவினார்கள். அந்த அரசுகள் தோல்வியடைந்ததை நாங்கள் மறுக்கவில்லை. அந்த தவறுகளைப் பரிசீலித்து அவற்றிலிருந்து பாடம் கற்றுக் கொண்டு முன்னேற வேண்டும் என்பதில் உறுதியாக இருக்கின்றோம்” எனக் கூறியுள்ளார்.*

*இதனை சற்று விளக்கமாகப் பார்ப்போம்.*

*கம்யூனிசம் தோற்றுப் போய்விட்டது என்பதை கம்யூனிச உலகமே ஒத்துக் கொண்டிருக்கும் போது நாவலாசிரியர் மண்ணில் வீழ்ந்தோம் மீசையில் மண் ஒட்டவில்லை என்கின்றார்.*

குறிப்பாக மார்ச்சு 14- 2016 ஆம் நாள் காரல் மார்க்ஸ் இன் பிறந்த நாளில் உலகெங்கும் நடந்த விவாதங்கள் கம்யூனிசத்தின் தோல்வியைச் சுற்றியே சுழன்றன.

நமது திஹிந்து பத்திரிகை (தமிழ்)ஓர் கட்டுரையை வெளியிட்டது. அதில் கம்யூனிசத்தின் தோல்வியைப் பற்றியே அந்த விவாதம். கட்டுரை, ஏன் கம்யூனிசம் தோற்றது? என்பதைப் பற்றிய காரணங்களைக் கோடிட்டுக் காட்டிற்று.

அதில்,"மார்க்சின் கோட்பாடுகள் இந்த நூற்றாண்டின் இறுதியில் நெருக்கடிகளைச் சந்தித்தன. ரஷ்யா உட்பட பல சோசலிச நாடுகளின் வீழ்ச்சிக்கு வழி வகுத்தது" எனக் கூறுகின்றார் கட்டுரை ஆசிரியர். (தி ஹிந்து மாாச்சு 14,2016)

காலமெல்லாம் கம்யூனிசத்தை தூக்கிப் பிடித்தவர்கள், கம்யூனிசம் தோற்றது என்று மட்டும் குறிப்பிடவில்லை. ரஷ்யா உட்பட பல சோசலிச நாடுகளின் வீழ்ச்சிக்கும் வழி வகுத்தது கம்யூனிசம் எனக் குறிப்பிட்டார்கள். அதே நேரத்தில் பச்சையாகத் தோல்வியை ஒத்துக் கொள்வதை விட்டு தேக்க நிலை என்று பூசி மொழுகுகின்றார்கள்.

இங்கே நாம் சோவியத் ரஷ்யா இறுதியில் வீழ்ந்தது ஆப்கானிஸ்தான் முஜாஹித்களின் கைகளில்தாம் என்பதை நினைவில் கொள்ள வேண்டும். அந்த ஆப்கானிஸ்தான் முஜாஹித்கள் இஸ்லாத்தையும் இஸ்லாமிய விழுமியங்களையும் முன் வைத்து போராடி கம்யூனிஸ்ட் ரஷ்யாவை வீழ்த்தியவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

கம்யூனிச ஆட்சி எங்கேயும் ஏற்பட வில்லை என்பது உண்மையல்ல. பொய். கம்யூனிச கொள்கையும் அதன் ஆட்சியும் வீழ்ந்து போயின என்பதுதான், உண்மை! இதை யதார்த்தமான கம்யூனிஸ்ட்டுகள் ஒத்துக் கொள்ளவே செய்கின்றார்கள். சோவியத் ரஷ்யாவைப்போல் சைனாவும் கியூபாவுந்தான் கம்யூனிசம் இனி கவைக்குதவாது என்பதை அழுத்தமாகப் பிறகடனப்படுத்தியது.

கம்யூனிச உலகின் கதாநாயகன் ஃபிடல் கேஸ்ட்ரோ இப்படிப் பிரகடனப்படுத்தினார்.

கியூபாவின் பொருளாதார முறை (கம்யூனிசம்) எங்களுக்குள்ளேயே இனி செயல்படாது. (ஆதாரம் : டெக்கான் கிானிக்கல் 10/9/2010)

இஸ்லாமும் இதரப் பொருளாதாரக் கொள்கைகளும், பக்கம் 119, அட்லாண்டிக் மேகசின் என்ற பத்திரிகைக்கு அளித்தப் பேட்டியில்தான் இப்படிக் குறிப்பிட்டார்கள்.

கம்யூனிசம் மூன்று கட்டங்களைக் கடந்து வரும் என்ற கோட்பாடு கம்யூனிசத்தின் அடிப்படை. அந்த மூன்று கட்டங்களையும் கடந்து விட்டது. ஆனாலும் புண்ணியப்படவில்லை என்று பிரகடனப் படுத்தினார் முன்னாள் சோவியத் அதிபர் மிக்காயல் கோர்பசவ் அவர்கள். அவர் அப்போது ரஷ்யாவின் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவராகவுமிருந்தார். அவர் கம்யூனிசத் தைக் கைவிட்டுவிட்டு ஒரு புதுக் கொள்கை யை பிரகடனப்படுத்தினார். அதன் பெயர் 'பிரஸ்தேரைக்கா'. இதே தலைப்பில் அவர் எழுதிய நூலில் பக்கம் 177 இல் இப்படிப் குறிப்பிடுகின்றார்.

"ஒவ்வொரு நாட்டிற்கும் அதனதன் வளர்ச்சிப் பாதையைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளளும் உரிமையுண்டு."

இதன் பொருள் கம்யூனிசம் எந்த நாட்டிற்கும் இனி உதவாது என்பதே! ஒவ்வொரு நாடும், ஏதாவது ஒரு பாதையைத் தேர்ந்தெடுத்து பிழைத்துக் கொள்ளுங்கள் என்பதே!

அத்தோடு பொட்டிற் அறைந்தாற் போல் இப்படிக் குறிப்பிட்டார். நமது 'பிரஸ்தேரைக்கா' வானத்திலிருந்து வந்தது என்றார்.

வானத்திலிருந்தே என்ற சொல்வழக்கு பெரும்பாலும் இறைவனைக் குறிக்கவே பயன்படுத்துவார்கள்.

ஆண்டாண்டு காலமாக, ஆண்டவனை மறந்தவர்கள் ஆண்டவனுக்குப் பக்கத்தில் வந்துவிட்டார்கள். தங்கள் புதுக் கொள்கையைப் பிரகடனப்படுத்திட! நாம் வரவேற்போம் இந்த நிலையை.

1989 இல் ஆப்கானிஸ்தானில் சோவியத் ரஷ்யா அடைந்த தோல்விக்குப் பின் ரஷ்யாவின் ஆட்சித் தலைவர் கோர்பசேவ் வேறு வழிகளைத் தேடுகின்றார் என்பதைத் தெரிந்து தான் ஈரான் இஸ்லாமியக் குடியரசின் தலைவர் இமாம் கொமைய்னி அவர்கள் ஓர் கடிதத்தை எழுதினார்கள் கோர்பசவ் அவர்களுக்கு. அதில் கம்யூனிசத்தின் தோல்விக்கு காரணம் நீங்கள் இறைவனுக்கெதிராக நடத்திய பெரும் போர்தான். அதனால் நீங்கள் வேறு வழிகளைத் தேடும் முன், இஸ்லாத்தை ஆய்வு செய்யுங்கள் என்றார்கள்.

இந்த இறைவனை ஏற்பதுதான் நண்பர் ஷம்ஸ் ஹீராவுக்கும் நல்லது இம்மைக்கும் மறுமைக்கும் என அன்போடு அழைக் கின்றோம்.

ஷம்சு ஹீரா அவர்கள் "அந்த அரசுகள் தோல்வியடைந்ததை நாங்கள் மறுக்கவில்லை. அந்தத் தவறுகளைப் பரீசிலித்து அவற்றிலிருந்து பாடம் கற்றுக் கொண்டு முன்னேற வேண்டும் என்பதில் உறுதியாக இருக்கின்றோம்" என தன் மறுப்பில் கூறியுள்ளார். இனி அது உலக அரங்கில் நடக்கப் போவதில்லை. இந்தியாவைப் பொறுத்தவரை நிலை என்ன? என்பதை மெத்தப் படித்த மூத்த கம்யூனிஸ்ட் தலைவர் 11 முறை அதாவது சுமார் 55 ஆண்டுகள் கம்யூனிஸ்ட் கட்சியின் நாடாளுமன்ற உறப்பினராக இருந்தவர் சோமநாத் சாட்டர்ஜி அவர்கள் இப்படிக் கூறி இருக்கின்றார்கள் "கம்யூனிசம் இன்றைய இந்தியாவுக்கு முற்றிலும் பொருத்தமற்றது" (தி வீக் - ஜுலை25, 2010 பக்கங்கள் 38-39).

நண்பர் ஷம்ஸ் ஹீரா போன்றவர்கள் இனி வேறு கொள்கைகளைப் பரிசீலிக்கலாம். நான் இஸ்லாத்தை அன்போடும் அடக்கத்தோடும் பரிந்துரைக்கின்றேன் - காதர் மொய்தீன்.

**குறிப்பு :** இன்னும் அதிகமான விளக்கங்களைப் பெற்றிட 'இஸ்லாமும், இதர பொருளாதார கொள்கைகளும்' என்ற நூலை படிக்கவும். இதனை நண்பர் ஷம்ஸ் ஹீரா அவர்களுக்கு எப்போதோ கொடுத்து விட்டேன்.

2. கோர்பசவ் அவர்களின் பிரஸ்தேரைக்கா ஓர் முழு நூலாகவே கிடைக்கின்றது.

3. நான் இதில் மேற்கோள் காட்டியுள்ள இஸ்லாமும் இதர பொருளாதாரக் கொள்கைகளும் என்ற நூலில் கம்யூனிசம் எந்தெந்த கட்டங்களைக் கடக்க முயன்றது. அது எப்படி வீழ்ந்தது என்பதை அறிஞர் முஹம்மத் குதுப் விளக்கமாகவே கூறியுள்ளார்கள். அதனை வாசகர்கள் படிக்கவும். நண்பர் சமஸ் ஹீராவுக்கு நூலைத் தந்துவிட்டோம் அதனால் விரிவிஞ்சி இங்கே அதனை மீண்டும் பதிக்கவில்லை.

4. சோவியத் அதிபர் கோபர்சவ் அவர்களுக்கு இமாம் கொமைய்னி அவர்கள் எழுதிய கடிதம், நாம் மேலே குறிப்பிட்ட இஸ்லாமும் இதரப் பொருளாதாரக் கொள்கைகளும் என்ற நூலில் இணைக்கப் பட்டுள்ளது.

**முஸ்லிம் அல்லாதவர்கள் திருகுர்ஆனை இலவசமாக பெற வேண்டுமா? கீழே உள்ள தொலைபேசியை தொடர்பு கொள்ளவும்**

**8148129887**

# கோடை காலத்தில் பரவும் நோய்கள்

## (DISEASES SPREADING IN SUMMER)

டாக்டர் எஸ். முஹம்மது அப்சல்

கோடை காலத்தில் வெயில் 35°C / 105°F க்கும் அதிகமாக இருப்பதால் உடலில் பல விதமான பாதிப்புக்கள் ஏற்படுகின்றன. மேலும் பல நோய்கள் பரவுகின்றன. விடுமுறையின் காரணமாக சிறுவர், சிறுமியர் அதிகம் வெயிலில் விளையாடு வதாலும், வெப்பத் தினால் அவர்களுக்கு பல நோய்கள் பரவு கின்றன உடலில் பல பாதிப்புகள் ஏற்படுகின்றன.



அம்மை (Chicken Pox), மண்ணன் (Measles), மஞ்சள் காமாலை (Jaundice), டைப்பாய்டு (Typhoid), மலேரியா (Malaria), புட் பாய்சன் (Food Poisoning), வயிற்றுப் போக்கு, காலரா (Cholera), சிறுநீர் இன்பக்சன் (U.T.I.), வெப்பத்தினால் நரம்பு சோர்வு (Heat Stroke), Rash, போன்ற நோய்கள் வெயில் காலத்தில் பரவலாம்.

### அம்மை (Chicken Pox)

இது வெரிகெல்லா ஜோஸ்டர் (Varicella Zooster) வைரஸ் மூலம் ஏற்படுகிறது. இந்நோய் டிராப்லெட் (Droplet) இன்பெக்ஷன் மூலம் பரவுகிறது. இந்நோய் மனிதர்களில் மட்டும் காணப்படுகிறது. பெரும்பாலும் வாலிப வயதிற்குள் பாதிக்கிறது. 5 முதல் 18 வயதிற்குட்பட்டவர்களில் 58.2 சதவிகிதம் பாதிக்கிறது.

இந்நோய் பாதித்தவர்களுக்கு பினேட்லெட் குறையலாம் (Thrombotytopenia) சிறுவயதினருக்கு நரம்பு பாதிப்புகள் ஏற்படலாம். (Neurological Complication) பெரியவர்களுக்கு நிமோனியா போன்ற பாதிப்புக்கள் வரலாம். கர்ப்பிணிகளுக்கு கருவுற்ற முதல் 6 மாதங்களில் நோய் தாக்கினால் பிறக்கும் குழந்தைகளுக்கு பிறவி கோளாற்றுடன் பிறக்கலாம்.

இந்நோய் வராமல் தடுக்க தடுப்பூசி போட்டுக் கொள்ள வேண்டும். 15 மாதங்களுக்கு மேல் வயதுள்ள குழந்தைகளுக்கு முதல் தடுப்பூசி. 15வது மாதத்திலும், இரண்டாவது ஊசி 4-6 வயதிலும் போட வேண்டும். நோய் தாக்கும் அபாயம் இருந்தால் இரண்டாவது ஊசியை முதல் ஊசி எடுத்த 3 மாதங்களில் எடுக்கலாம்.

நோய் தாக்கியவர்கள், தாக்கி 72 மணி நேரத்திற்குள் வெரிசெல்லா ஸோஸ்டர் இம்முனேரி கிஸோபின் (Varicella Zooster immunoglobin) ஊசி எடுக்கலாம். இதற்கு 3 வாரம் நோயிலிருந்து பாதுகாப்பு காணப்படும்.

### மண்ணன் (Measles)

இதுவிரைவாக பரவும். சுவாசத்தை பாதிக்கும். வைரஸ் நோய். இந்நோய் 2 வயதிற்கு கீழ் உள்ள குழந்தைகளை அதிகம் தாக்கும். இந்நோயின் தாக்கம் அதிகமானால்

நுரையீரல், நரம்புகள், குடல் போன்றவை பாதிக்கலாம். ஹிப்படைடிஸ் (Hepatitis) அப்பன்டிசைட்டிஸ், இதய தசைகள் பாதிப்பு (Myo Caralitis) போன்ற பாதிப்புகள் வரலாம். இந்நோய் பெரியவர்களில் தீவிரமாக இருக்கும், நிமோனியா போன்றவை ஏற்படலாம். இந்த நோய் சுகாதார குறைவு மற்றும் ஜன நெருக்கடி காரணமாக எளிதாக பரவுகிறது.

இந்த நோய் தடுப்பூசிகள் மூலம் தடுக்கப்படுகிறது. பிறந்து 9 மாதங்கள் கழித்த பிறகு தடுப்பூசி போட வேண்டும். பின்னர் 15 வது மாதத்தில் MMR தடுப்பூசியும், 4.5 வயது முதல் 5 வயதிற்குள் இரண்டாவது ஊசியும் (Booster) எடுக்க வேண்டும்.

## மஞ்சள் காமாலை (Jaundice) - ஹிபடைடிஸ் A

இந் நோயை ஏற்படுத்துவது பிக்கோர்ளை வைரஸ் (Picorma Virus) வகையைச் சார்ந்தது. இது உலக அளவில் வருடம் 1.5 மில்லியன் நோயாளிகள் காணப்பட்டாலும் வளரும் நாடுகளில் தான் அதிகம் பாதிக்கிறது. சுகாதாரத் குறைவு, சுகாதாரமற்ற உணவு வகைகள் சாப்பிடுவது, சுகாதாரமற்ற கழிவு நீர் வெளியேற்றம் (Poor Sanitation) போன்றவை நோய்க்கான முக்கிய காரணங்கள்.

இந்நோயினால் சோர்வு, வயிற்று வலி, பசியின்மை, வாந்தி, காய்ச்சல், வயிற்றுப் போக்கு, சிறுநீர் மஞ்சள் நிறத்தில் கழிப்பது, மஞ்சள் காமாலை ஏற்படும்.

இரத்த பரிசோதனை மூலம் நோயை உறுதி செய்யலாம். சுகாதாரமான உணவு, தேநீர், பழக்க வழக்கங்கள் மூலம் நோய் பரவுவதை தடுக்கலாம். தடுப்பூசி போடுவதன் மூலம் நோய் வருவதை தடுக்கலாம். 2 வயதுக்கு மேற்பட்ட குழந்தைகளுக்கு இரண்டு தடுப்பூசிகள் 6 மாத இடைவெளியில் போடலாம். 19 வயதிற்கு மேற்பட்டவர் களுக்கும் 2 ஊசிகள் எடுக்க வேண்டும்.

இந்நோய் பாதித்தவர்கள் கல்லீரலை பாதிக்கும் மருந்துகள், மாத்திரைகள், பாரஸிட்டமால் வலி நிவாரிணிகள் சாப்பிடக் கூடாது. மருத்துவ சிகிச்சை, ஆலோசனை பெற வேண்டும்.

குழந்தைகளுக்கு முறையான தடுப்பூசிகள் எடுத்தால் (as per immuninaton schedule) மேற்படி அடுமை, மண்ணன், ஹிப்படைடிஸ் ஏ போன்ற நோய்கள் வருவதை தடுக்கலாம்.

அம்மை நோய் கண்டவர்களுக்கு செந்தாழம்பூ சிறந்த மருந்து. இந்த பூக்களின் மடல்களை இடித்து, நீரில் போட்டு நன்றாக சுண்டும்படி காய்ச்ச வேண்டும். ஆறிய பின்னர் காலை, மாலை ஆகிய இரு வேளையும் ஏழு ஸ்பூன் அளவு சாப்பிட்டு வர நோய் கட்டுப்படும்.

அக்கி நோய்க்கு வெண்தாமரைப் பூவை கஷாயமாக போட்டு இரு வேளைக்கு ஒரு ஸ்பூன் சாப்பிட்டால் உஷ்ணம் நீங்கும். பசலைக் கீரையை அரைத்து பசும் வெண்ணெயில் குழைத்து அக்கியின் மேல் தடவி வர குணமாகும்.

## மலேரியா (Malaria)

இது பிளாஸ்மோடியம் வகை கிருமிகளால் ஏற்படுகிறது. மனிதனில் அனோபிலிஸ் (Anopheles) கொசுக்களால் பரவுகிறது. சுமார் 200 வகை பிளாஸ் மோடியம் (Plasmodium) கண்டறியப் பட்டாலும் பத்து வகைகள் தான் மனிதனில் பாதிப்பு ஏற்படுத்துகிறது. இந்தியாவில் பி. வைவாக்ஸ் (P. Vivox) - 50-50 சதவீதிம் பி. பால்சிபாரம் (P. Falciparcim) 45-50 சதவீதம் பாதிப்பை ஏற்படுத்துகிறது. இந்தியாவில் 70 முதல் 100 மில்லியன் பேர் இந்நோயினால் பாதிக்கப்படுகின்றனர். தமிழகத்தில் 2 சதவீத பேரும் ஒரிசா வில் 25 சதவீதம் பேரும் பாதிக்கப்படுகின்றனர்.

தலைவலி, சோர்வு, வயிற்று வலி, தசை வலி, காய்ச்சல் போன்ற அறிகுறிகள் முதலில் தோன்றும், பின்பு வாந்தி இரத்த அழுத்த குறைவு (Hypotension) இருக்கும். காய்ச்சல், ஜன்னி குளிர் குறிப்பிட்ட இடைவெளியில்

இருக்கும். காய்ச்சல் 40 டிகிரிக்கு மேல் வரும். மஞ்சள் நோய் இருக்கலாம்.

மலேரியா (Clanical Malaria), தீவிர மலேரியா (Severe Malaria), செரிபரல் மலேரியா (Celebral Malaria) போன்ற வகைகளில் ஒன்றாக வரலாம்.

மலேரியா காரணமாக இரத்தத்தில் சர்க்கரை குறைவு (Hypoglycemia) ஏற்படலாம். மேலும் அசிடொசிஸ் (Acidosis), நுரையீரல் நீர் (Palmonary Cedema) போன்ற உயிருக்கு ஆபத்தான பின் விளைவுகள் வர வாய்ப்புள்ளது. மேலும் சீறுநீரக கோளாறு (Resal Impairment) நிகழலாம். இரத்த அனுக்களில் மாறுதல், கல்லீரல் பாதிப்புகள் போன்றவை ஏற்படலாம்.

பால்சிடாரம் மலேரியாவினால் பாதிக்கப்பட்ட கர்ப்ணிகளுக்கு பிறக்கும் குழந்தைகள் எடை குறைவாகவும், குறைமாத பிரசவமாகவோ, இறந்து பிறக்கவோ (Still Birth) செய்யலாம்.

கொசுக்கள் ஒழிப்பு மூலம் மலேரியாவை தடுக்கலாம். நோய் தாக்கியவர்கள் மருத்துவரை நாடவேண்டும். மலேரியாவுக்கான தடுப்பூசி மருத்துவ சோதனையில் உள்ளது (Clinical Trials)

## டெங்கு காய்ச்சல் (DENGUE)

இந் நோய் டெங்கு வைரஸ் மூலம் ஏற்படுகிறது. இது பிளேவி வைரஸ் (Flavi Virus) வகையைச் சார்ந்தது. இந் நோய் எய்டீஸ் ஈஜிப்பீ (Ades Aegypti) வகை கொசு கடியின் மூலம் மனிதர்களிடையே பரவுகிறது. இதன் வகையான டெங்கு ஹிமோரேஜிக் காய்ச்சல் 1950ல் தென்கிழக்கு ஆசியாவில் முதலில் கண்டறியப்பட்டது.

வைரஸ் தாக்கிய 4 முதல் 6 நாட்களில் நோயின் அறிகுறிகளான காய்ச்சல், குளிர் தலைவலி கண்ணின் மேல்பகுதியில் வலி (Retro Orbital Pain) தோன்றும். காய்ச்சல் 39 டிகிரி முதல் 40 டிகிரி வரை இருக்கும். சில மணி நேரம் முதல் 2நாட்கள் வரை காய்ச்சல் இல்லாமல் இருக்கும். பின்பு இரண்டாம் கட்ட காய்ச்சல் 1 முதல் 2 நாள்கள் காணப்படும் (Saddle back pattern). இவ்வாறு 5 முதல் 7 நாட்கள் வரை இருக்கும். உடலில் அரிப்புகள் தோன்றும்.

டெங்கு ஹிமோரேஜிக் காய்ச்சல் (Dengue Haemorrhagic Fever) காய்ச்சல் மற்றும் இரத்த கசிவை ஏற்படுத்தும். பிளேட் லெட் (Platelet) எண்ணிக்கை 50,000க்கும் குறைவாக இருக்கும். 12 வயதிற்கு மேல் இந்த நோய் வருவது குறைவு. காய்ச்சல் மற்றும் டெங்குவின் அறிகுறிகளுடன் காணப்படும். காய்ச்சல் 38 டிகிரி முதல் 40 டிகிரி வரை 2 முதல் 7 நாட்கள் வரை இருக்கும். 3 முதல் 7 நாட்களில் ஹிமோரேஜிக் காய்ச்சல் மற்றும் ஷாக் வரும்.

## டைப்பாய்டு காய்ச்சல் (TYPHOID FEVER)

இந்நோய் சால்மொநெல்லா என்ற நீக்கா டைபீ (S. Typhic) மற்றும் பாராடைபீ (S. Paratyphi) வகை பாக்டீரியாக்களால் வருகிறது. இவை இரண்டும் பொதுவாக என்டரிக் காய்ச்சல் (Enteric Fever) என்று அழைக்கப் படும். இது சுகாதாரமற்ற குடிநீர் மூலம் பரவுகிறது. பெரும்பாலும் குழந்தைகளையும், இளைஞர்களையும் அதிகம் பாதிக்கிறது. வறுமைக்கோடுக்கு கீழ் உள்ளவர்கள் பாதிக்கப்படுகிறார்கள். நோய் தாக்கி 10 முதல் 14 நாட்களில் நோயின் அறிகுறிகள் தென்படும்.

காய்ச்சல் படிப்படியாக அதிகரிக்கும் (101.8 டிகரி முதல் 104.9 டிகரி ஃபாரன்ஹீட்). தொடர்ந்து காய்ச்சல் காணப்படும். குளிர், தலைவலி, இருமல், தொண்டை வலி, தலைவலி, தலை சுற்றல் போன்றவை இருக்கும். நோய்க்கு சிகிச்சை பெற வேண்டும். இந்நோயினால் பல்வேறு உறுப்புகளை பாதிக்கும் பல விளைவுகள் (Complications) வரலாம்.

சுத்தமான நீர், உணவை உட்கொள்ள வேண்டும். ஒவ்வொரு 2 வருட இடை வெளியில் தடுப்பூசி (Typhoid Vaccine) எடுத்துக் கொள்ள வேண்டும்.

## புட் பாய்சன் (FOOD POISONING)

இது சுகாதாரமற்ற உணவு, நீர் உட்கொள்வதால் ஏற்படுகிறது. சால்மொ யினல்லா (Salmonella) ஸ்யெலோ காக்கல் (Staphy coccus), ஈ கோலை (E. Cole), சூகம்பைலோ (Camphylo), சீசக்லா (Shigella) போன்றவைகளால் ஏற்படுகிறது.

வயிற்று வலி, வாந்தி, பேதி போன்றவை ஏற்படும். இதனால் உடலில் நீர் சத்து குறைவு உண்டாகிறது. அறிகுறிகள் நோய் தாக்கி 1 மணிநேரம் கழித்து வரும்.

ORS யை சுத்தமான கொதித்த நீரில் இட்டு அருந்தினால் நீர்சத்து குறைவு நீங்கும், மருத்துவரை அணுக வேண்டும்.

சாலையோர சுகாதாரமற்ற உணவுகளை உண்ணக் கூடாது. கெட்டுப் போன உணவை உண்ணக் கூடாது.

சுத்தமான நீரையும், உணவுகளையும் உண்ண வேண்டும். காரம் அதிக உள்ள உணவுகள், பொரித்த உணவுகளை தவிர்க்க வேண்டும்.

## காலரா (CHOLERA)

இது பண்டைய காலம் தொட்டு உள்ள முக்கியமான ஒரு நோயாகும். இந்நோய் விப்ரியோ காலரா (Vibrio Cholera) மூலம் உண்டாகிறது. இது வாய் வழியே பரவுகிறது. இந்நோயில் பேதி (Profuse Watery Diarrhoea) வாந்தி உயிரை அச்சுறுத்தும் நீர்சத்து குறைவு (Life Threatening Dehydration) காணப்படும்.

அதிக நீர் சத்து குறைவு காரணமாக தோலின் தன்மை மாறும் (reduced skin turgor) கண்கள் சுருங்கி இருக்கும் (Sunban eye) வாய் வறண்டு காணப்படும். இதய துடிப்பு அதிகரித்தால் இரத்த அழுத்தம் குறைவு காரணமாக சிறுநீரகம் செயலிழப்பு, கோமா ஏற்படலாம்.

உடலின் நீர் சத்து குறையை தடுப்பதும் சரி செய்வதும் சிகிச்சையின் முக்கிய அம்சமாகும். மருத்துவ சிகிச்சை எடுக்க வேண்டும். தடுப்பூசி இந்நோயை தடுக்கும்.

## கோடை காலத்தில் மேற்படி நோய்கள் அதிகம் பரவ காரணம்

காலநிலை மாற்றம் காரணமாக இந்நோய்கள் அதிகம் பரவுகிறது. அதனால் மலேரியா, டெங்கு போன்ற கொசுக்களால் பரவும். நோய்கள் அதிகரிக்கின்றன. கொசுக்கள் மற்றும் பாரஸைட் (Parasite) எண்ணிக்கை வெப்பத்தினால் பன்மடங்கு அதிகரிக்கின்றது. அரை டிகிரி சென்டிகிரேட் வெப்பம் அதிகரிப்பதால் கொசுக்களின் எண்ணிக்கை 30 சதவீதம் முதல் 100 சதவீதம் அதிகரிப்பதாக கண்டறியப்பட்டுள்ளது.

நீர் நிலைகள், ஆறுகள், குளங்கள் வற்றி நீர் குட்டைகளாவதால் அதில் கொசுக்கள் அதிகம் உற்பத்தியாகின்றன. வறட்சி காரணமாக வீடுகளில் தண்ணீர் சேமித்து வெப்பத்தால் நல்ல நீரில் டெங்கு காய்ச்சலை பரப்பும் ஏய்மீஸ் கொசுக்கள் உற்பத்தி யாகின்றன.

எல் நினோ மற்றும் கடல்நீர் பரப்பு வெப்பமாவதால் கடலில் மிதக்கும் ஜீப்ளாங்டன் (Zooplankton) மற்றும் பைபேடா பிளாங்டன் (Phytoplankton) காலரா நோய்க்கு காரணமான விப்ரியோ காலரே கிருமியை வளர்க்கிறது. இது வங்க தேசத்தில் ஆண்டுதோறும் வேனில் காலத்தில் பரவும் காலாரோ நோயை உறுதிபடுத்துகிறது.

## HEAT STROKE

மனிதனின் உடல் 35 டிகிரி முதல் 38 டிகிரி வரை உடல் வெப்பத்தில் இருக்கும். அதற்காக இயற்கையாக உடலில் சில செயல்பாடுகள் (Phyislogical Thermo regulatory Mechanisms) திகழ்கின்றன. இதற்காக உடலின் மேல் தோல் (Skin) Subartaneous Tissues, தசைகள் மற்றும் உள் பாகங்களான மூளை, இதயம் மற்றும் உள் உறுப்புக்கள் (Videra) செயல்படுகின்றன.

இந்தியாவில் 5 ஆண்டுகளில் அதிக வெப்பத்தினால் நரம்பு செயலிழப்பு (Heat Stocks) காரணமாக 3194 மரணங்கள் நிகழ்ந்துள்ளது. 5 வயதிற்கு குறைந்தவர்கள். 65

வயதிற்கு அதிகம் உள்ளவர்கள், கர்ப்பினிகள், தொழிலாளிகள், உடல் ஆரோக்கிய மற்றவர்கள், மதுவுக்கு அடிமையானவர் தோல் வியாதி உள்ளவர்கள் இதனால் அதிகம் பாதிக்கப்படுகின்றனர்.

உடலின் வெப்பம் (Body Temperature) 41 டிகிரிக்கு அதிகம் காணப்படும். இது 105 டிகிரி ஃபாரன்ஹீட் அதிக வெயிலில் அதிக நேரம் நிற்பதால் ஏற்படுகிறது. வாந்தி, வலிப்பு, Confusion உடலில் நீர் சத்து குறைவு (Dehydration) ஷாக், Dis Orientation, சுயநினைவு இழத்தல் பின்பு கோமா நிலைக்கு தள்ளப்படுவர். முதலில் தலைவலி ஏற்படும். வேர்வை இருக்காது. உடல் சூடாக இருக்கும். தோல் உலர்ந்து காணப்படும் (Dry Skin) இதய துடிப்பு அதிகரித்தல் பின்பு மேற்கூறிய நிலைகள் காணப்படும்.

இதன் காரணமாக கல்லீரல் செயலிழப்பு (Hepatic Failrue) சிறுநீரக செயலிழப்பு, மூளை பாதிப்பு போன்ற பின்விளைவுகள் ஏற்படலாம். சிகிச்சை தாமதியாமல் 30 சதவீதம் முதல் 50 சதவீதம் மரணம் நிகழலாம்.

## முதல் உதவி

Heat Stroke கால் பாதிக்கப்பட்டவரை உடனடியாக நிழலுக்கு குளிர்ந்த இடத்திற்கு மாற்ற வேண்டும்.

ஆடைகளை தளர்த்த / களைய வேண்டும்.

25 டிகிரி முதல் 30 டிகிரி வெப்பம் உள்ள நீரை பாதித்த நபர் மேல் பீய்ச்சி அடிக்க வேண்டும். அல்லது மேற்கூறிய வெப்பத்தில் உள்ள நீரில் நனைந்த துணியை அவர் உடலில் சுற்றவேண்டும்.

காற்று வரும்படி வீச வேண்டும்.

உடலில் இரத்த சட்டம் சீராக, உடலை மசாஜ் செய்யவேண்டும்.

ஐஸ் கட்டிகளை கழுத்து பகுதி கைகளுக்கு இடையே தொடைகளுக்கு இடையே வைக்க வேண்டும்.

உடனடியாக மருத்துவமனை கொண்டு செல்லவேண்டும்.

கோடை காலங்களில் வெயிலில் அதிக நேரம் நிற்பதை தவிர்க்க வேண்டும். தினமும் சராசரியாக 5 முதல் 6 லிட்டர் நீர் பருக வேண்டும். தாகம் இல்லாவிட்டாலும் 250 மில்லி முதல் 300 மில்லி வரை அடிக்கடி பருக வேண்டும். மெல்லிசான, தளர்வான ஆடைகளை அணிய வேண்டும். பழங்கள் அதிகம் உண்ண வேண்டும் இயற்கையாக கிடைக்கும். இளநீர், தர்பூசனி அதிகம் அருந்த வேண்டும். குழந்தைகள், பெரியவர்கள் வெயிலில் நிற்க கூடாது. அதிகாலை அல்லது காலையில் உடற்பயிற்சி செய்ய வேண்டும்.

## தசை பிடிப்பு (HEAT CREMPE)

அதிகமாக கால் தசைகள், தோள் தசைகளில் அதிகம் பிடிப்பு (Spasm) ஏற்படுகிறது. பெரும்பாலும் வெப்பத்தில் அதிகம்தசைகள் அசைவதால் இது ஏற்படுகிறது. இதன் தாக்கம் அதிகமானால் வாந்தி ஏற்படும். 0.1 சதவீதம் முதல் 0.2 சதவீதம் உப்பு நீரை அருந்தினால் தளர்பிடிப்பு நீங்கும். தாக்கம் அதிகம் உள்ளவர்கள் வாந்தி உள்ளவர்களுக்கு ஊசி மூலம் செலுத்த வேண்டும் (Istra Vonous).

## HEAT TETANY

அதிக வெயிலில் நிற்பதால் கை தசைகள் பிடித்தம் (Carpopedal Spasm) மற்றும் மரத்தல் ஏற்படலாம். உடனே குளிர்ந்த இடத்திற்கு செல்லவேண்டும். மூச்சு வாங்கலாம். அதனால் Respratory Acideosis ஏற்படலாம்.

## HEAT SYNCOPE

அதிக வெயிலில் நிற்பதால் Heat Syncope ஏற்படுகிறது. உடனே நிழலான இடத்திற்கு செல்ல வேண்டும். அதிகம் நீர் பானங்கள் பருக வேண்டும்.

## HEAT OEDEMA

வெயிலினால் வயதானவர்களுக்கு கை, கால்களில் வீக்கம் (Oedema) ஏற்படலாம். வீங்கிய பகுதியை சற்று உயர்த்தி வைக்க வேண்டும்.

## PRICKLY HEAT

வெப்பத்தினால் உடலில் அரிப்பு உண்டாகலாம். இது தோல் நோயாக மாறலாம். தினமும் குளிப்பது, மெல்லிசான தளர்ந்த உடைகளை அணிய வேண்டும். கலாமின் லோஷன் (Calamin Lotion) அரிப்பு மேலே போட வேண்டும். அதிகம் இருந்தால் தோல் மருத்துவ ஆலோசனை பெற வேண்டும்.

## தோல் நோய்கள் (SKIN INFECTIONS)

## டீனியா கார்பொரிஸ் (TINEA CORORIS)

இது வெயில் காலத்தில் அதிகம் காணப்படும் இது டீரெக்கோ பிளைம்ன ரூபோம் (Trichoplyton Ruborum) மற்றும் டீரைக்கோ பிளைடன் மென்டகிரோாயைடல் (Trichoplyton Mentographlytes) Fungus காரணமாக வருகிறது. இது ஒரு Itchy Papale வாக தொடங்கி வட்ட வடிவாகும்.

## டீனியா கிருரிஸ் (TINEA CRURIS)

இது ஆண்களில் அதிகம் காணப்படும். அதிகம் பருமனானவர்கள் சர்க்கரை நோயாளிகள் அதிகம் பாதிக்கப்படுவார்கள். இந்நோய் அரை பகுதியில் தொடங்கி தொடைகளின் உள்பகுதி, அடி வயிற்றுப் பகுதிகளில் பரவும்.

## டீனிபா பெடிங் (TINEA PEDIS)

இது சுகாதாரமற்ற காலணிகளை அணிவதால் வருகிறது. வேனிற், காலங்களில் அதிகம் காணப்படும்.

## இம்மிபடிகோ கண்டாகியாஸா (IMPETIGO CONTAGIASA)

இது தோலை பாதிக்கும் நோய். இது பச்சிளம் குழந்தைகள், குழந்தைகளை அதிகம் பாதிக்கும். ஸ்டபலோகாக்கஸ் ஆசியஸ் (S. Aurees) ஸ்டெப்டோசாக்கல் பீட்டா கிமோவதக்கா (Staptococcus beta Hemolytica) பாக்டீரியாக்கலால் வருகிறது.

பெரியவர்களில் ஏக்திமா (Ecthyma) அதிகம் பாதிக்கும். பெரும்பாலும் கால்களை பாதிக்கும்.

உடலில் சுகாதாரம் பேனுதல் இந்நோய்களை தடுக்கும். தோல் நோய்களுக்கு தோல் மருத்துவரின் ஆலோசனை பெற வேண்டும்.

வெயிலினால் கண்ணில் கட்டி, கண் எரிச்சல் வரலாம். கண் மருத்துவ ஆலோசனை பெற வேண்டும்.

கண் எரிச்சலை போக்க வில்வம் பழம் சிறந்த மருந்து. வில்வம் பழத்தை நெருப்பில் சுட்டபின் அதனை உடைத்து அதனுள் இருக்கும். விபூதை தலையில் தேய்த்துக் குளித்தால் எரிச்சல் நீங்கும்.

உடலில் உஷ்ணத்தினால் அவதி படுபவர்கள் உணவில் வெந்தயம் அதிகம் சேர்த்துக் கொள்ளலாம். நார்சத்து மிக்க பச்சை காய்கறிகள் அதிகம் குழந்தைகளுக்கு கொடுக்க வேண்டும். பெரியவர்களும் எடுக்க வேண்டும். மனத்தக்காளி கீரை, வெங்காயம் போன்றவை அதிகம் சேர்த்துக் கொண்டால் உஷ்ணம் தனியும். அதிகம் காரம் உள்ள உணவுகளையும் பொரித்த உணவுகளை தவிர்க்கலாம்.

பழ வகைகள் அதிகம் உண்ணலாம். திராட்சை பழத்திற்கு உஷ்ணத்தை தணிக்கும் ஆற்றல் உண்டு. உடலில் குளிர்ச்சியை உண்டாக்கி மலச்சிக்கலை போக்கும்.

வெயில் காலங்களில் நீர் அதிகம் பருக வேண்டும். 5 முதல் 6 லிட்டர் வரை பருக வேண்டும். இயற்கையான கிடைக்கும் இளநீர், தர்பூசனி மற்றும் எலுமிச்சை சாறு (Lemon Juice) அதிகம் அருந்தலாம். அவை உடலின் சத்து தேவையை பூர்த்தி செய்வதுடன், நீர் சத்தையும் பூர்த்தி செய்யும்.

உஷ்ணத்தினால் உடலில் கட்டிகள், வேர்குரு தொல்லை அதிகம் காணப்படும். கலாமின் லோஷன் தடவலாம். பனைநுங்கு கொண்டு வேர்குரு உள்ள இடத்தில் தேய்த்தால் பலன் கிடைக்கும். நுங்கு கிடைக்காதவர்கள் சந்தனம் பூசலாம்.

# கற்காலம் – ஒரு வரலாற்றுப் பொய்

மூலம் : ஹாருன் யஹ்யா                    தமிழில் : அபூஹாசின்

பரிணாமவியலாளர்களால் கூறப்படும் கற்கருவிகளை ஒரு கல் வேலைப் பாடுகளை செய்யும் ஒருவரிடம் கொடுத்து மேலே குறிப்பிட்ட வரைபடங்களை அதைப் போன்றே பாறைகளில் செதுக்குமாறு கேட்டுக் கொண்டார்.

அவரால் முடிந்ததா?

இரண்டு மணி நேர இடைவிடாத முயற்சிக்கு பின்னரும் அவரால் அதே போன்று கொண்டு வர இயலவில்லை.

நீங்களும் இதே போன்ற சோதனையை வீடுகளிலும் முயற்சி செய்யலாம். கிரானைட் போன்ற வலிமையான கற்களை எடுத்து கொள்ளுங்கள். அதை கொண்டு 100,000 வருடங்களுக்கு முன்னர் வாழ்ந்த மக்கள் பயன்படுத்திய உருளை வடிவிலான தலையை உருவாக்க முடியுமா என்று முயற்சி செய்யுங்கள். கற்கள், கிரானைட் இவை இரண்டைத் தவிர வேறு எதையும் பயன்படுத்தக் கூடாது. உங்களால் எந்த அளவுக்கு வெற்றி பெற முடியும் என்று நினைக்கிறீர்கள்? ஒரு சிறிய கல்லை எடுத்துக் கொள்ளுங்கள். அதில் குறுகிய முனையையும் சமச்சீரான, மென்மையான தன்மையையும் உருவாக்க முடியுமா?

இன்னொரு முயற்சியையும் செய்து பார்க்கலாம். ஒரு சதுர மீட்டர் அளவிலான கிரானைட் கல்லை எடுத்து அதில் விலங்குகளின் வரைபடத்தை ஒரு குறிப்பிட்ட ஆழத்தில் உருவாக்க முயற்சி செய்யுங்கள். ஒரு வலிமையான கல்லை மற்றொரு கல்லுடன் உராய்ப்பதன் மூலம் எந்த மாதிரியான முடிவு கிடைக்கின்றது.

ஸ்டீல் (எஃகு) அல்லது இரும்பினால் செய்யப்பட்ட கருவிகளை பயன்படுத்தாமல் ஒரு சிறிய உருளை வடிவிலான தலையை கூட உருவாக்க முடியாது.

கற்களை செதுக்குதல், வடிவமைத்தல் என்பது அதற்கென்ற கலைஞர்கள் உள்ள ஒரு பிரிவு. தேய்ப்பான், கடைசல், இயந்திரம் மற்றும் மற்ற கருவிகளை உருவாக்க ஒரு அடிப்படையான தொழில் நிபுணத்துவம் தேவை. ஆதிகால தொழில முறைகள் நன்கு மேம்பட்டதாக இருக்க முடிந்ததனால் மட்டுமே இம்மாதிரியான கருவிகளை உருவாக்க முடிந்திருக்கின்றது என்று நமக்கு புரிய வைக்கிறது. பரிணாமவியலாளர்கள் கூறும், எந்த தொழில் நிபுணத்துவம் இல்லாத கற்களை மட்டுமே மனிதன் பயன்படுத்தினான் என்பது பொய் (அல்லது) கதை. அப்படி ஒரு கற்காலம் இருந்திருக்கவே இல்லை.

வெட்டுதல், வடிவமைத்தலுக்கு அக்கால மக்களால் பயன்படுத்தப்பட்ட எஃகு மற்றும் இரும்பினாலான கருவிகள் இன்றைய காலங்களில் கிடைக்கவில்லை என்பது ஏற்றுக் கொள்ளப்படிக்கூடிய ஒன்று தான். ஈரப்பதமான, அமிலத்தன்மை கொண்ட உலோகங்கள் ஆக்ஸிஜனேற்றம் பெற்று காலப்போக்கில் மறைந்து விடுகின்றன. மக்குவதற்கு நீண்ட நாட்கள் எடுத்துக் கொள்ளும் கற்களும் அதன் பகுதிகள் மட்டுமே எஞ்சுகின்றன. எனவே இத்துண்டுகள் ஆராய்ச்சி செய்வதன் மூலம் அக்காலவாசிகள் கற்களை மட்டும் பயன்படுத்தினார்கள் என்று கூறுவது அறிவியல் பூர்வமானது அல்ல.

உண்மையில் தொல்லியல் கண்டு பிடிப்புகள் ஒரு போதும் டார்வினிஸத்திற்கு ஆதரவாக இருந்ததில்லை என்றே சிறந்த தொல்லியல் நிபுணர்கள் ஒப்புக் கொள்கின்றனர். தொல்லியல் கண்டுபிடிப்பு

களான கற்கருவிகளை பரிணாமவியல் தத்துவத்திற்கு ஆதரவாக எடுப்பது சரியல்ல என்று பரிணாமவியலாளர்களும் தொல்லியல் நிபுணருமான ரிச்சர்ட் லெகே (Richard Leakey) கூறுகிறார்.

டார்வின் கோட்பாட்டை வலுவிழக்கச் செய்யும் சான்றுகள் தான் தொல்லியல் துறையில் கண்டுபிடிக்கப்படுகிறது. டார்வின் கோட்பாடு உண்மையாக இருக்குமானால் அதற்கு ஆதரவாக கூறப்படும் (பைபிடாலிட்டி) இரு கால்களை உடைய விலங்குகள், தொழில் நுட்பம், மற்றும் அளவில் அதிகமான மூளை, போன்றவற்றின் சான்றுகள், தொல்லியல் துறைகளிலும், மக்கிய தாதுப் பொருட்களின் படிமங்களிலிருந்தும் நமக்கு கிடைக்கப் பெற்றிருக்கும். ஆனால் அப்படி நடக்கவில்லை. டார்வின் கோட்பாடு தவறு என்று நிரூபணம் மேற்கூறப்பட்ட கற்கருவிகளை பற்றிய விளக்கமே போதுமானது.

**பரிணாமவியலாளர்களின் கற்பனையான கால வரைபடங்கள்**

வரலாற்றை வகைப்படுத்தும் போது, பரிணாமவியலாளர்கள் அவர்கள் கண்டுபிடித்த பொருட்களை தங்களுடைய நம்பிக்கைகளுக்கு தோதாக விளக்கம் கொடுக்கின்றனர். வெண்கல கருவிகள் பயன்படுத்தப்பட்ட காலத்தை வெண்கல காலம் என்று அழைக்கின்றனர். அவர்களின் கூற்றுப்படி மிகத் தொன்மையான நாகரீகங்கள், உலோகங்களை பயன்படுத்தவில்லை. இரும்புகள் பயன்படுத்த தொடங்கிய காலம் கொஞ்ச நாட்களாகத்தான இருந்து வருகின்றது.

இந்தக் கூற்று உண்மைதானா?

இன்ஷா அல்லாஹ் அடுத்த இதழில் பார்ப்போம்.


## இப்போது பரபரப்பான விற்பனையில் படித்து விட்டீர்களா!




**விலை : ரூ. 20.00**

**அ. மார்க்ஸ் அவர்களின்**

**டி.எம். உமர் பாரூக்**

**ஒரு தலித் போராளியின் வாழ்வும் அவர் காட்டிய வழியும்**

வெளியீடு :

**வேர்கள் பதிப்பகம்,**

52/1, மண்ணடி தெரு, மண்ணடி,
சென்னை - 600 001.
தொடர்ப்புக்கு : 8148129887

# வேர்கள் வெளியீட்டகத்தின் நூல்கள்

| | | |
|---|---|---|
| 1. | சிறையில் எனது நாட்கள் - ஜெய்னப் அல் கஸ்ஸாலி - பக்கம் : 212 | ரூ. 90.00 |
| 2. | ஆஃப்கானிஸ்தான் முஜாஹித்களின் தியாக வரலாறு - மு. குலாம் முஹம்மது | ரூ. 100.00 |
| 3. | சாதி ஒழிந்தது - டி.எம். மணி, ஐந்தாம் பதிப்பு - பக்கம் 132 | ரூ. 50.00 |
| 4. | End of Casteism T.M. Mani பக்கம் -134 | ரூ. 50.00 |
| 5. | அஹமதாபாத் குண்டுவெடிப்புகள் - மு. குலாம் முஹம்மது, பக்கம் -48 | ரூ. 10.00 |
| 6. | டெல்லி குண்டுவெடிப்புகள் - மு. குலாம் முஹம்மது, பக்கம் - 48 | ரூ. 10.00 |
| 7. | நாடாளுமன்ற தாக்குதல் வெளிச்சத்திற்கு வந்த உண்மைகள், மு. குலாம் முஹம்மத் | ரூ. 25.00 |
| 8. | மால்கம் எக்ஸ் - மு. குலாம் முஹம்மது, பக்கம் -231 | ரூ. 80.00 |
| 9. | தீண்டாமையை கற்பிக்கும் கடவுளை மாற்றுவோம், டி.எம். மணி, பக்கம் -31 | ரூ. 20.00 |
| 10. | செந்தமிழ்நாட்டுச் சேரிகள்- டி.எம். மணி, பக்கம்:94 | ரூ. 40.00 |
| 11. | கர்கரேயை கொலை செய்தது யார்? பக்கம் 453 | ரூ. 250.00 |
| 12. | சிந்திப்பீர் செயல்படுவீர், நா. கோதண்டபாணி, பக்கம் 47 | ரூ. 15.00 |
| 13. | ஒரு நீதிபதியின் விடுதலை முழக்கம், ப. கோபால கிருஷ்ணன், பக்கம்-84 | ரூ. 40.00 |
| 14. | சாதி ஒழிந்தது- ஹிந்தி - டி.எம். மணி, பக்கம் - 148 | ரூ. 50.00 |
| 15. | நாம் பிரிந்து விடவேண்டாம், பேராசிரியர் கா.மு. இல்யாஸ் ரியாஜி, பக்கம்-292 | ரூ. 175.00 |
| 16. | தாலிபானின் பிடியில், மு. குலாம் முஹம்மது, பக்கம் - 202 | ரூ. 90.00 |
| 17. | பாலஸ்தீன முஸ்லிம்கள் அகதிகளான வரலாறு, மு. குலாம் முஹம்மது பக்கம்-163 | ரூ. 110.00 |
| 18. | பாபரி மஸ்ஜித் அடிப்படை தகவல்கள், மு. குலாம்மது, பக்கம் -143 | ரூ. 90.00 |
| 19. | இஸ்லாமிய நாகரிகம் - முஸ்தஃபா அல் சிபாய், பக்கம் - 206 | ரூ. 130.00 |
| 20. | கஷ்மீரின் பாதி விதவைகள், மு. குலாம் முஹம்மது, பக்கம் - 140 | ரூ. 70.00 |
| 21. | எது முதலில்? டாக்டர் யூசுஃப் அல் கர்ளாவீ, தமிழில் கா.மு. இல்யாஸ் ரியாஜி | ரூ. 50.00 |
| 22. | சாதி ஒழிந்தது - கன்னடம், | ரூ. 50.00 |
| 23. | அண்ணல் அம்பேத்கரின் மதமாற்றம் பின்னணி? டி.எம். உமர் ஃபாரூக் | ரூ. 20.00 |
| 24. | கசாப்-ஐ இரகசியமாகத் தூக்கிலிட்டது ஏன்? மு. குலாம் முஹம்மது பக்கம்:48 | ரூ. 30.00 |
| 25. | முஹம்மத் (ஸல்) அவர்கள் ஓர் சகாப்தம், பக்கம் 30 | ரூ. 15.00 |
| 26. | இஸ்லாமும் இதர பொருளாதார கொள்கைகளும், பக்கம் - 120 | ரூ. 50.00 |
| 27. | இஸ்லாம் வழங்கும் தண்டனைகள் | ரூ. 40.00 |
| 28. | இஸ்லாமும் விஞ்ஞானமும் | ரூ. 70.00 |
| 29. | இஸ்லாம் அடிமைத்தனத்தை அங்கீகரித்ததா? | ரூ. 60.00 |
| 30. | இஸ்லாமும் பெண்களும் | ரூ. 70.00 |
| 31. | இஸ்லாம் இன்றைய கொள்கைகளை வெல்லுமா? | ரூ. 70.00 |
| 32. | தேசப்பிரிவினைக்கு யார் காரணம்? | ரூ. 30.00 |
| 33. | 26/11 -நீதித்துறையும் மயங்கியது ஏன்? | ரூ. 220.00 |
| 34. | ஒரு தலித் போராளியின் வாழ்வும், அவர் காட்டிய வழியும் | ரூ. 20.00 |

**வேர்கள் பதிப்பகம்,** 52/1, மண்ணடி தெரு, மண்ணடி, சென்னை - 600 001.

தொடர்புக்கு : 8148129887

# பாலியல் அடிமைத் தொழிலுக்காக கடத்தப்படுகின்றதா சிரிய நாட்டு குழந்தைகள்



தலைப்பு நமக்கு ஒரு பெரும் அதிர்ச்சியை தந்திடலாம். ஆம் சிரியாவில் நடந்து கொண்டிருக்கும் யுத்தத்தின் விளைவே அது.

10000க்கும் அதிகமான குழந்தைகள் ஐரோப்பாவில் காணாமல் போயுள்ளனர். இவர்கள் அனைவரும் ஆதரவற்ற நிலையில் புலம் பெயர்ந்து ஐரோப்பாவிற்கு வந்தவர்கள்.

இதில் அதிகமானோர் பாலியல் தொழிலுக்காகவும், அடிமைகளாக நடத்தப் படுவதற்கும், கடத்தப்பட்டிருக்கலாம் என அச்சம் கொள்வதாக ஐரோப்பாவின் காவல்துறை யுரோப்பல் கூறியுள்ளது. புலம் பெயர்ந்து வருபவர்களினால் ஏற்படும் நெருக்கடியில் இவ்விவகாரம் அதாவது, துணையின்றி வரும் சிறார்களின் நிலைமை குறித்த விவகாரம் புதிய அழுத்தத்தை உருவாக்கியுள்ளது. பிரிட்டன் செய்தி நிறுவனமான அப்சர்வரில் (Observer) வெளியிடப்பட்ட இந்த காணாமல்போயுள் ளோரின் எண்ணிக்கையை யுரோப்பல் செய்தி அலுவலகம் இது சரிதான் என உறுதிபடுத்தியுள்ளது. இது கடந்த 18 முதல் 24 மாதங்கள் முடிய எடுக்கப்பட்ட தகவல் என்றும் கூறியுள்ளது.

ஐரோப்பாவிற்குள் நுழைந்து அங்குள்ள அதிகாரிகளிடம் பதிவு செய்த பின் இக்குழந்தைகள் மாயமாகி உள்ளதாக இந்த செய்தி முகவாண்மையில் தலைவர் பிரயன் டொனால்ட் தெரிவித்துள்ளார்.

இத்தாலியில் மட்டுமே 5000 குழந்தைகள் மாயமாகியுள்ளனர் என்றும் அவர் தெரிவித்தார்.

“It is not unreasonable to say that we’re looking at 10,000 plus children Donald said, adding that 5000 had disappeared in Italy alone.”

காணாமல் போன எல்லாக் குழந்தைகளுமே தவறான காரணங்களுக்காக பயன்படுத்தப்பட்டிருக்க வாய்ப்பில்லை. சிலர் தங்கள் குடும்பங்களுடன் இணைந் திருக்க லாம். அவர்கள் எங்கே இருக்கிறார்கள்? என்ன செய்து கொண்டிருக்கிறார்கள்? எவர்களுடன் அவர்கள் இருக்கின்றார்கள் என்பது எங்களுக்குத் தெரியவில்லை.

புலம் பெயர்ந்தவர்களை தங்களது சொந்த லாபத்திற்கு பயன்படுத்திடலாம் என்ற நோக்கில் சட்டத்திற்கு புறம்பான ஒரு கட்டமைப்பு கடந்த 18 மாதங்களாக செயல்பட்டு வந்ததற்கான ஆதாரங்கள் கிடைத்துள்ளதாக டொனால்ட் கூறியுள்ளார்.

ஐரோப்பாவிற்கு மக்களை கடத்திக் கொண்டு வரும் கடத்தல் கும்பல்களுக்கும், அவர்களை (புலம் பெயர்ந்தவர்களை) பாலியல் மற்றும் அடிமைத் தொழிலுக்காகப் பயன்படுத்துபவர்களுக்கும் இடையே தொடர்புகள் இருந்ததற்கான ஆதாரத்தை யுரோப்பல் கண்டுபிடித்துள்ளது. பெரியவர்களின் துணை இல்லாமல் தனியே வரும் சிறார்கள் தான் மிகவும் பாதிப்புக்கு உள்ளாவதாக Save the Children என்ற இத்தாலிய - ஐரோப்பிய அமைப்பின் இயக்குனர் ரபேலா மிலனோ கூறியுள்ளார்.

இதில் எங்கே நாம் திருப்பி அனுப்பப்பட்டு விடுவோமோ என்ற பயத்தில் அதிகமான சிறார்கள் தங்களது பயணத்தை ஐரோப்பிய அதிகாரிகளுக்கு தெரியாமல் மறைத்தே வருகின்றனர் என்று ரபேலோ மிலனோ கூறியுள்ளார்.

ஐக்கிய நாடுகளின் அமைப்பான UNICEF-ம் துணையின்றி வரும் சிறார்களுக்கு தகுந்த பாதுகாப்பு வழங்கிடுமாறு ஐரோப்பிய நாடுகளை கேட்டுக் கொண்டுள்ளது.

துணையின்றி விடப்பட்ட குழந்தை களை அவர்களுடைய குடும்பத்துடன் சேர்ப்பதற்கும் அவர்கள் தங்குவதற்கான புதிய இடங்கள் அல்லது மாற்று ஏற்பாடுகளை செய்வதற்கும் ஒரு திட்டத்தை ஏற்படுத்த வேண்டி ஐரோப்பாவிற்கு அவசரமாக அழைப்பு விடுத்துள்ளோம். இதன் மூலம் கடத்தல் கும்பல்களிடம் சிக்கி துயரப்படுவதி லிருந்து தடுத்திடலாம் என UNICEF கூறியுள்ளது. உறவினர்களுடன் பயணத்தை மேற்கொள்ளாத சிறார்களுக்கு உதவும் பணியில் Meta - Action என்ற குழு ஈடுபட்டுள்ளது. வேறு இடங்களுக்கு செல்ல வேண்டும் என்று காத்திருப்போரின் நிலைமையை விட இவ்வாறு பயணத்தை மேற்கொள்வோரின் முடிவு மிகவும் மோசமாக உள்ளது என இக்குழுவின் தலைவர் லாரா பப்பா தெரிவித்துள்ளார்.

தங்கள் உறவினர்களுடன் மீண்டும் சேர்வதற்கு இவர்கள் கிட்டத்தட்ட ஏழு மாதங்கள் காத்திருக்க வேண்டும். ஆனால் இதற்கான செயல்முறைகள் தாமதமானதாகவும் சிக்கலானதாகவும் இருக்கலாம் என அவர் தெரிவித்தார்.

சிலர் வந்து நாங்கள் அக்குழந்தையின் உறவினர்கள் என்று கூறி குழந்தைகளை எடுத்துச் செல்கின்றனர். இந்த குழப்பமான நேரத்தில் அந்த உறவினர்களின் அடையாளத்தை சரிபார்ப்பதும் அவ்வளவு சுலபமல்ல.

இது வரை 3000 குழந்தைகளை அவர்களுடைய உறவினர்களுடன் சேருவதற்கு நாங்கள் உதவியுள்ளோம். ஆனால் இது போதாது என லாரா பப்பா தெரிவித்துள்ளார்.

## அதிகரிக்கும் பதற்றம்

பெற்றோர்களை பிரிந்து வரும் சிறார்களையும், அகதிகளையும் நாங்கள் ஏற்றுக் கொள்கிறோம் என பிரிட்டன் கூறியுள்ளது. புலம் பெயர்ந்து வருபவர்கள் மரணத்தை தழுவிடலாம் அல்லது கடத்தப்படலாம். இந்த இன்னல்கள் இருந்த போதும் வறுமை, அடக்குமுறை இவற்றிலிருந்து தங்களை விடுவித்துக் கொள்ள ஐரோப்பாவிற்கு தொடர்ந்து அவர்கள் வந்த வண்ணமே உள்ளனர்.

ஆபத்து நிறைந்த மத்திய தரைக்கடல் பகுதியை கடக்கும் பொழுது உயிரை இழப்பவர்களில் சிறார்களே அதிகம்.

சமீபத்தில் பெண்களும், குழந்தைகளும் வந்த படகு கவிழ்ந்தது. இதில் கரையோரம் ஒதுங்கிய 37 உடல்களை துருக்கி கடலோர காவற்படை மீட்டது.

இவ்வாறு அதிகரிக்கும் புலம் பெயர்ந்தவர்களின் எண்ணிக்கையால் ஐரோப்பிய நிலப்பகுதிகளில் பதற்றம் நிலவுகிறது. வலது சாரி குழுக்கள் புலம் பெயர்ந்து வருபவர்களை தடுக்க கோரியும் எல்லைகளில் கட்டுப்பாடுகள் விதிக்க கோரியும் அழைப்புகள் விடுத்துள்ளன.

புலம் பெயர்ந்து வரும் இளைஞர்களின் மீது தாக்குதல் நடந்துங்கள் என முகமூடி அணிந்த ஒரு கும்பல் ஸ்டாக்ஹோமில் கூடி துண்டு பிரசுரங்களை வெளியிட்டுள்ளன. இவர்கள் புதிய நாசிக்களாக இருக்கலாம் என ஸ்வீடன் காவல்துறை தெரிவித்துள்ளது.

புகலிடம் தேடி வருபவர்களை அரவணைப்பதாக ஜெர்மனி கடந்த வருடம் அறிவித்தது. இதனை எதிர்த்து நின்ற ஒரு கும்பல் அகதிகள் வசிக்கும் முகாம்களில் கையெறி குண்டுகளை வீசியது. இதனால் பதற்றம் நிறைந்த சூழலே ஐரோப்பிய கண்டங்களில் நிலவுகிறது.

## தலைமை இல்லாத சமுதாயம்

ஓர் ஆட்டுக்குட்டி அநியாயமாக இறந்தால் கூட அதற்காக நான் இறைவனிடத்தில் பதில் சொல்ல வேண்டும் என்ற கவலையும் குடி மக்களின் மீது அக்கறை கொள்ளும் ஆட்சியும், தலைவரையும் கொண்டு விளங்கியது இஸ்லாமிய சமுதாயம். இன்று கொத்து கொத்தாக மடியும், கடலில் கரை ஒதுங்கும் சிறார்களை பார்த்து நம்மால் என்ன செய்து விட முடிகிறது.

முஸ்லிம்களை ஒருங்கிணைத்திடவும், அவர்களை அநீதியின் பிடியிலிருந்து காத்திடவும் பெருமானார் (ஸல்) அவர்கள் காட்டித் தந்த அல்லது உருவாக்கியதொரு தலைமையே இன்று வாழும் சமுதாயத்திற்கு தேவைப்படுகிறது. நாமும் அதற்காக முயற்சி செய்ய வேண்டும் என்பதே இதிலிருந்து நாம் கற்றுக் கொள்ளும் பாடம்.

## யார் காரணம்?

இன்று நடந்து கொண்டிருக்கும் யுத்தத்திற்கும் அதனால் உருவாகியுள்ள அகதிகள் பிரச்னைக்கும் காரணம் யார்? ஐ.எஸ். அமைப்பா?

இந்த உண்மையை தெரிந்து கொள்ள வரலாற்றில் நடந்த சில சம்பவங்களை நாம் புரிந்து கொள்ள வேண்டும். அதில் ஒன்று தான் சைக்ஸ் பிக்காட் ஒப்பந்தம். இதனை தெரிந்து கொண்டால் இந்த யுத்தத்தின் பின்னணியை புரிந்து கொள்ளலாம்.

## சைக்ஸ பிக்காட் ஒப்பந்தம் - 1916

இரண்டு நபர்கள் உலக வரைபடத்தினை எடுத்து தங்கள் முன் வைத்துக் கொண்டனர். தங்களிடம் உள்ள பேனாவின் மூலம் உதுமானிய பேரரசின் கீழ் வரும் பகுதிகளை வெட்டத் தொடங்கினர். ஒருவர் பிரிட்டனை சார்ந்த மார்க் சைக்ஸ், மற்றொருவர் பிரான்சை சார்ந்த பிக்காட். உதுமானிய பேரரசின் பகுதிகளை சின்னா பின்னப்படுத்தி அவற்றை ஐரோப்பியர்கள் தங்களுக்குள் எவ்வாறு பங்கிட்டு கொள்வது என ஓர் இரகசிய திட்டத்தை இரு நாட்டை சேர்ந்தவர்களும் தீட்டினர்.

இவர்கள் ஏற்கனவே அரபி மொழி பேசியவர்களிடம் அரபு தேசியம் என்ற ஒன்றை ஊட்டி வளர்த்திருந்தனர்.

உதுமானிய பேரரசிற்கு எதிராக அரபுக்கள் பிரிட்டனோடு சேர்ந்து கலகம் செய்திட வேண்டும். இதற்கு கைமாறாக அரபியர்களுக்கென ஒரு தனித் தாயகம் உருவாக்கப்படும் என ஒப்பந்தம் எழுதப்பட்டது.

நயவஞ்சகத்தின் மொத்த பிரதிபலிப்பே இந்த ஒப்பந்தம். இது அரபுக்களை ஏமாற்றிட தீட்டப்பட்ட ஒரு திட்டம். உண்மையைக் கூறின் மேற்கு ஆசியாவில் இன்று நடந்து

கொண்டிருக்கும் அனைத்துவிதமான சிக்கல்களுக்கும் ஆரம்பப்புள்ளி இந்த ஒப்பந்தத்தில் இருந்தே ஆரம்பிக்கின்றது. இதன் படி பிரான்சின் கட்டுப்பாட்டின் கீழ் சிரியா. பிரிட்டன் கட்டுப்பாட்டின் கீழ் ஈராக்.

VICE செய்தி நிறுவனம் வெளியிட்ட ஆவணப்படத்தில் ஒரு காட்சி வருகிறது. அதில் ஈராக்கையும் சிரியாவையும் பிரிக்கும் எல்லையில் உள்ள தடுப்பு வேலிகளை ஐ.எஸ். அமைப்பின் ஒரு கூட்டம் இடித்து தள்ளுகிறது. அதன் படைத் தளபதிகளில் ஒருவர் இவ்வாறு கூறினார். 'சைக்ஸ்-பிக்காட்' ஒப்பந்தத்தை நாங்கள் ஏற்றுக் கொள்ள வில்லை. அதை நாங்கள் முறித்து விட்டோம். சைக்ஸ்-பிக்காட் ஒப்பந்தம் நிறைவேற்றப் பட்ட பொழுது, குர்துகள் (அதிகமானோர் சன்னி பிரிவை சேர்ந்தவர்கள்) ஈராக், ஈரான் சிரியா, துருக்கி என நான்கு நாடுகளில் பரவியிருந்தனர். அவர்களுக்கென ஒரு கலாச்சார முறை இருந்தது. அரபுக்களுக்கும் குர்துகளுக்கும் இது நிரந்தரமான விரிசலை ஏற்படுத்தியது.

## ஈராக் மீது தாக்குதல்

5 செப்டம்பர் 2003 அன்று, அமெரிக்காவின் செயலாளர் காலின் பவுல் ஐக்கிய நாடுகளின் பாதுகாப்பு மன்றம் நடத்திய ஒரு கூட்டத்தொடரில் பேசிய பொழுது, உலகத் தலைவர்களின் கவனங்கள் அனைத்தும் அவரின் பக்கமே இருந்தன. அவர் ஈராக்கை தாக்குவது குறித்து பேசினார். இன்று நான் அறிவிக்கும் வாக்குமூலங்கள் அனைத்தும் உறுதியான ஆதாரங்களின் அடிப்படையிலானது. நாங்கள் இங்கே கூறுவது உண்மை. தீர்மானங்கள் யாவும் நம்பத் தகுந்த தகவல்களின் அடிப்படையில் எடுக்கப் பட்டவை என்று அவர் கூறினார். ஈராக்கில் பேரழிவு ஆயுதங்களை வைத்திருக்கும் பல்வேறு கிடங்கிலிருந்து ஆயுதங்கள் நகர்த்தப்பட்டுள்ளன. செயற்கை கோளின் வழி எடுக்கப்பட்ட இது சம்பந்தமான புகைப்படங்கள் நம்மிடத்தில் உள்ளன என்றார் அவர்.

இந்த வாக்குமூலத்தை கூறும் பொழுது அவர் காண்பித்த புகைப்படங்கள் அதன் பின்னர் உலகம் முழுவதும் உள்ள செய்தி தாள்களில் வலம் வந்தது. மேற்கு ஆசியாவின் மீது அமெரிக்கா தொடுக்கப் போகும் யுத்தத்திற்கு மிகப் பெரிய ஆதரவு கரத்தை இந்த புகைப்படங்கள் ஏற்படுத்தி தந்தன. இதன் அடுத்த கணமே அமெரிக்காவும் அதன் கூட்டுப் படைகளும் ஈராக்கினுள் நுழைந்தன. 1,50,000 அப்பாவி உயிர்களை பறித்தன. ஈராக்கினுள் நுழைந்த படைகளுக்கு எதிராக எந்த விதமான இரசாயன மற்றும் உயிர்களை பறிக்கும் ஆயுதங்களை சதாம் உசேன் பயன்படுத்திடவில்லை. ஈராக்கிடம் முறை யாக செயல்படும் விமானப் படைகள் கூட கிடையாது என்பது அதன் பின்னரே தெரிந்தது.

2011 இல் பவுல், In life and leadership என்ற புத்தகத்தை வெளியிட்டார். அதில் "தோல்விகள் எப்பொழுதும் என்னையும், ஐக்கிய நாடுகளின் கூட்டத் தொடரில் நான் ஆற்றிய உரைகளோடும் தொடர்பு படுத்தப்படுகிறது. என்னுடைய உரையினை மையமாகக் கொண்டு நாம் ஒன்றாக பணிபுரிந்த நேரத்தில் ஏன் ஒருவர் கூட அந்த நேரத்தில் எழுந்து நின்று பேசிடவில்லை. அதில் சில பேர் அதன் பின்னர் அவர்கள் எழுதிய புத்தகத்தில் இப்படிக் குறிப் பிட்டிருந்தனர். "நான் சரியான ஆதாரமில்லாத சான்றை நம்பியிருந்ததை கண்டு அதிர்ச்சி அடைந்ததாக கூறியுள்ளனர்."

## தீவிரவாதத்திற்கு எதிரான யுத்தம்

அமெரிக்கா யுத்தத்தை நடத்த திட்டமிட்டிருந்தது. அதற்காக அவர்களுக்கு தேவைப்பட்டது எல்லாம் ஒரு காரணம். யுத்தம் திட்டமிடப்பட்டு போலியான காரணங்கள் விதைக்கப்பட்டன என்பதே நமக்கு புரிகிறது. எண்ணெய் வளங்களை தங்களுடைய கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வர வேண்டும் என்பது மட்டும் யுத்தத்தின் நோக்கமன்று புதிய பழமைவாதிகளால் முன்னிறுத்தப்படும் மேற்கு ஆசியாவில் தன்னடைய (அமெரிக்கா) பங்கை மறு வரையறு செய்வதும் யுத்தத்தின் நோக்கமாகும் என ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத்தில் மேற்கு ஆசிய கல்வி மையத்தில் பணிபுரியம் A.K. ராமகிருஷ்ணன் குறிப்பிடுகிறார்.

அல்காயிதாவுக்கும், சதாம் உசேனுக்கும் தொடர்புகள் இருக்கின்றன. அவர்கள் எல்லோரும் 9/11 தாக்குதல் சம்பவத்தோடு

தொடர்புடையவர்கள் என ஜார்ஜ் புஷ் வலியுறுத்தி கூறினார். ஈராக்கினுள் அல்காயிதா அமைப்பு ஊடுருவியுள்ளது. அதற்கான தெளிவான சான்றுகள் உள்ளதாக அமெரிக்காவின் அப்போதைய பாதுகாப்பு செயலாளர் டொனால்ட் ரம்ஸ்பீல்டு கூறிய கூற்றை பென்டகனில் வீற்றிருக்கும் அமெரிக்க இராணுவத்துறை சில ஆராய்ச்சிக்குப் பின் 2008 இல் அதை மறுத்தது. 2003ஆம் ஆண்டு அமெரிக்கா படைகள் ஈராக்கினுள் நுழையும் பொழுது அங்கே அல்காயிதா அமைப்பு இல்லை என 2008இல் தெளிவாகியது.

**சிரியா**


ஆரம்பத்தில் பசர் அல் அசத் ஆட்சிக்கு எதிராக ஏற்பட்ட உள்நாட்டு கிளர்ச்சியை வெகு விரைவில் சவுதி அரேபியா, கத்தார், UAE மற்றும் மேற்குலகை ஆதரிக்கும் அசத்-இற்கு எதிரான இராணுவ குழுக்கள் தங்கள் கட்டுப்பாட்டில் கொண்டு வந்துவிட்டன.

சைக்ஸ்-பிக்காட் என்ற இருவரால் ஆரம்பிக்கப்பட்ட பிரித்தாளும் சூழ்ச்சி இறுதி கட்டத்தை அடைந்துவிட்டது. இதில் எந்த படிப்பினையும் பெறவில்லை என்பது தெளிவு.

ஒசாமா பின்லேடனுக்கு பயிற்சி கொடுத்த அவரை ஆயுதமேந்தி சோவியத்திற்கு எதிராக போராட செய்தது முதல் இன்று நடைபெறும் அசத் ஆட்சிக்கு எதிராக போராடிக்கொண்டிருக்கும் சிரியா கிளர்ச்சியாளர்களுக்கு ஆயுத விநியோகம் செய்வது வரை எப்பொழுதுமே வியூகம் ஒன்று தான் என்று கூறுகிறார் ராமகிருஷ்ணன்.

உள்நாட்டு குழுக்களின் வன்முறைகள் ஒரு புறம். தங்கள் நாட்டை விட்டு வெளியேறி மத்திய தரைக்கடல் வழியாக ஐரோப்பாவிற்கு உயிரை காவு கொள்ளும் பயணத்தை மேற்கொள்ளும் பொதுமக்கள் ஒரு புறம் என மேற்கு ஆசியா மாறியதற்கு மேலை நாடுகளின் தலையீடுகளே முக்கியமான காரணம்.

ஐரோப்பாவை பொறுத்தவரை, இந்த நெருக்கடிகள் அதன் அரசாங்கத்தால் விழைந்ததே. ஐரோப்பாவின் யுத்தங்களும் அதன் பொருளாதார கொள்கைகளும் தங்கள் சொந்த நாட்டிலேயே பாதிப்பை ஏற்படுத்தும் என்பதற்கு இது ஒரு நினைவூட்டல் என கூறுகிறார் ராமகிருஷ்ணன்.

விலை ரூ. 60 மட்டுமே

**தீவிரவாதிகள் என்று சித்தரிக்கப்படும் தாலிபான்கள் யார்? என்பதை தெரிந்து கொள்ள இந்த நூல்களை படியுங்கள்!**



விலை ரூ. 90 மட்டுமே

**வேர்கள் பதிப்பகம்,**
**52/1, மண்ணடி தெரு, மண்ணடி,**
**சென்னை - 600 001.**
**தொடர்புக்கு : 8148129887**

# இந்துத்துவா ஆட்சியும் வெளிநாட்டு வாழ் இந்தியர்களும்!

கடந்த 1999 ஜனவரி பா.ஜ.க. ஆட்சியில் இந்தியாவின் ஒரிசா மாநிலத்தில் கிரஹாம் ஸ்டெயின்ஸ் என்ற சமூக நல சேவையாளரும் அவாதம் குழந்தைகளும் உயிரோடு காரில் வைத்து எரித்து கொல்லப் பட்டனர். எரித்து கொன்றதற் காக ஆயுள் தண்டனை பெற்ற தார சிங் என்பவன் பஜ்ரங் தள் என்ற இந்துத்துவா அமைப் போடு தொடர்புடையவன்.



இந்த சமூக நல சேவையாளர் ஆஸ்திரேலியாவைச் சேர்ந்தவர். இந்தியாவில் இவர் இந்துத்துவா கும்பலால் எரித்து கொல்லப்பட்ட பிறகு ஆஸ்திரேலிய வாழ் இந்தியர்களுக்கு உள்ளூர அச்சம் ஏற்பட்டது. சில வருடங்களுக்கு பிறகு இச்சம்பவத்தின் விளைவாக ஆஸ்திரேலியாவில் வாழும் இந்தியர்கள் சிலர் தாக்கப்பட்டனர். கொல்லப்பட்டனர். இதை நமது பத்திரிகைகள் தொடர்ச்சியாக செய்திகளாக வெளியிட்டு வந்தன.

இப்படி ஒரு அச்சுறுத்தலை வெளிநாட்டு வாழ் இந்தியர்களுக்கு நாம் ஏற்படுத்த கூடாது. ஆனால் இந்துத்துவா கும்பல் யார் உயிரை பற்றியும் கவலை கொள்வதில்லை. சமீபத்தில் கூட பெங்களூரில் ஆப்பிரிக்காவின் தான்சானியா நாட்டை சேர்ந்த மாணவியை அடித்து நொறுக்கி ஆடைகளை கிழித்து பொதுமக்கள் முன்னிலையில் நிர்வாணப்படுத்தியுள்ளார்கள். இச்சம்பவம் தொடர்பாக இந்துத்துவாவின் அரசியல் கட்சியான பா.ஜ.க.வை சார்ந்த கவுன்சிலர் உட்பட 9 பேர் கைது செய்யப் பட்டுள்ளனர். பிற நாடுகளில் நம் நாட்டை பற்றிய தவறான பிம்பத்தை ஏற்படுத்தி யிருக்கிறது. (ஆதாரம் : தி இந்து, பிப்ரவரி 09,2016, மதுரை)





அதே போல் உத்திரப்பிரதேசம் பீகார் எல்லையை ஒட்டியிருக்கும் நேபாள பகுதிகளில் மதேசிகள் என்ற சமூகம் வாழ்ந்து வருகிறது. இது இந்திய வம்சாவளியை சார்ந்த சமூகமாகும். நேபாளத்தின் அரசியல் வரலாற்றில் மன்னர் ஆட்சி ஒழிக்கப்பட்டு ஜனநாயக ரீதியாக தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்களின் ஆட்சி மலர்ந்தது. அப்போது நேபாள நாட்டிற்கான அரசியல் சட்டம் இயற்றப்பட்டது.

இந்த அரசியல் சட்டம் மதேசிகளான நேபாள குடிமக்களை இரண்டாம் தர

**தொடர்ச்சி 55ம் பக்கம்**

# நேதாஜி சுபாஷ் சந்திர போஸ்!



## விடுதலைப் போரின் மறைக்க முடியாத  ஆனால் மறைத்துவிட்ட அத்தியாயம்

**இந்தியாவின் முதல் பிரதமர் பண்டித ஜவஹர்லால் நேரு.**

**அவர் ஏன் நேத்தாஜி சுபாஷ் சந்திர போஸுக்கு அப்படி அஞ்சினார்?**

**அன்பார்ந்த வாசகர்களே நாம் நேத்தாஜி அவர்களின் வாழ்க்கை வரலாற்றை இந்தப் பகுதி வழியாக மக்கள் மன்றத்தில் வைத்து வந்தோம்.  அதில் முந்தைய இதழ்களில் இடம் பெற்றவற்றை இங்கே சுருக்கமாக குறிப்பிடுகின்றோம்.**

நேத்தாஜி அவர்களின் மூதாதையர்கள் குடும்பத்தைச் சார்ந்தவர்கள் வங்காளப் பகுதியை ஆட்சிச் செய்த முஸ்லிம் நவாப்களின் அரசவையில் சிறப்பாக பணி யாற்றி நவாப்க்களின் பாராட்டைப் பெற்றவர்கள். நவாப்களின் நம்பிக்கைக் குரியவர்களாக இருந்தார்கள்.

நவாப்களின் அரசவையில் உயர் பதவிகளைப் பெற்றவர்கள்.

நேத்தாஜி குடும்பத்தினருக்கு வங்காள நிஜாம்கள் பரிசாகத் தந்த கிராமத்தில் தான் நேத்தாஜி பிறந்தார்கள்.  அது இன்றைய ஒரிசா (ஒடிசா) மாநிலத்திலுள்ள

**ஒரு கிராமம். அன்று இன்றைய ஒரிசா மாநிலம் க்ஷநபேயட ஞசடிஎனைஉந என்று வங்காளத்துடன் இருந்தது.**

**நேத்தாஜி சுபாஷ் சந்திர போஸ் தன் தொடக்க கல்வியை அந்தக் கிராமத்திலேயே தான் முடித்தார்.**

**தன் கல்லூரி படிப்பை கல்கத்தா நகரில் இருந்த அரசு தேசிய கல்லூரி (ஞசநளனைநஉல ஊடிடடநபந) யில் தான் தொடங்கினார்.**

**அந்த அரசு கல்லூரியில் வெள்ளையர் கள் நமது இந்திய மாணவர்களை அடிமைகளைப் போல் நடத்துவதும், விரும்பும் போதெல்லாம் உதைப்பதாவுமாய் இருந்தார்கள். இதனை மாணவர் நேத்தாஜி எதிர்த்தார்கள். மாணவர்களை ஒன்று திரட்டிப் போராடினார்கள்.**

**அதனால் கல்லூரியிலிருந்து வெளி யேற்றப்பட்டார்கள். படிப்பை ஓராண்டு விட்டுவிட்டு, மீண்டும் கல்கத்தாவிலுள்ள இன்னொரு கல்லூரியான "ஸ்காட்டிஸ் சர்ச்" கல்லூரியில் தொடந்தார்கள்.**

**அங்கு 1919 இல் இளம் நிலை பட்டப்படிப்பை முடித்துவிட்டு லண்டன் மாநகரம் சென்றார்கள் என்பது வரை நாம் முந்தைய இதழ்களில் பார்த்தோம்.**

*லண்டன், மாநகரில் ஆட்சிப் பணி என்றும் ICS என்றும் இன்று 'IAS' அழைக்கப்படும் படிப்பை படிக்கச் சென்றார். அந்தப் படிப்பில் தன் முழுக் கவனத்தையும் செலுத்தினார் நேத்தாஜி. லண்டனில் இந்தியர்கள் குழுமும் பேரவை ஒன்று இருந்தது. அதற்கு இந்தியன் 'மஜ்லிஸ்' என்று பெயர்.*

**இந்தியன் மஜ்லிஸ்:**

*வாய்ப்பு கிடைக்கும் போதெல்லாம் அங்கிருந்த இந்தியன் மஜ்லிஸ் என்ற இந்தியர்களின் குழுமுமிடத்திற்கு செல்வார்.*

*மொழியில் இதில் இஸ்லாமிய வாடை அல்லது முஸ்லிம் மணம் இதில் தெரியும். ஏனெனில் அன்றைய நாள்களில் ஆங்கிலேயர்களிடமிருந்து இந்தியாவை மீட்டாக வேண்டும் என முழு மூச்சிலும் முழுவேகத்திலும் செயல்பட்டவர் கள் முஸ்லிம்கள். ஆனால் அன்று இந்த விடுதலைப் போரில் எல்லா சமுதாயமும் இந்தியாவில் வாழ்ந்த எல்லாக் குடிமக்களும் (இந்த விடுதலைப் போரில்) ஓரணியில் நின்றார்கள்.*

*அன்றைக்கு இந்தியாவில் வாழ்ந்த மக்களின் ஒற்றுமையையும், ஒருமைப் பாட்டையும் உருகுலைக்கும் பாசிச சக்திகள் இன்றைய நாள்களைப் போல் அவ்வளவாகத் தலையெடுத்திருக்கவில்லை.*

*ஆக, இந்தியன் மஜ்லிஸ் இந்தியர்கள் அனைவரும் ஒன்றாக கூடி இந்தியாவின் நடப்புகளையும் இந்தியாவின் எதிர்காலத்தை யும் விவாதிக்கும் களமாகவும், தளமாகவும் அமைந்திருந்தது.*

*அதேபோல் இந்தியாவிலிருந்து முக்கிய தலைவர்கள், ஆன்றோர்கள், சான்றோர்கள் லண்டன் வந்தால் அவர்களை அழைத்து உரைகளையும் விவாதங்களையும் ஏற்பாடு செய்வதில் முன்னணியில் நின்றார் முனைப் போடு செயல்பட்டார் சுபாஷ் சந்திர போஸ்.*

*ஆனாலும் தனது ஆட்சிப் பணி ICS தேர்விலும் கவனம் செலுத்தி வந்தார். இந்தத் தேர்வுக்காக உலக வரலாறு, உலகின் பலப் பாகங்களிலும் நிலவும் அரசு நிருவாக முறை அவற்றின் வரலாறு, ஐரோப்பாவில் புழங்கும் கொள்கைகள், தற்கால உலக வரலாறு,*

உலகில் உலாவரும் பொருளாதார முறைகள் - ஆங்கிலம் - அதன் இலக்கிய வளம், வரலாறு இப்படி உலகையே ஒட்டுமொத்தமாக படித்தாக வேண்டும். படித்தார் இந்தப் படிப்பினூடே இந்திய மஸ்லிஸ் விவகாரத் திலும் அதிகமாகக் கவனம் செலுத்தினார்.

இறுதியில் 1920 ஆம் ஆண்டு ஜூலை திங்கள் இந்திய ஆட்சிப் பணி தேர்வுகள் நடந்தன. ஒரு மாதம் முழுமையாக நடந்த இந்தத் தேர்வுகளை மெத்த சிரமத்தோடு எழுதினார் நேத்தாஜி.

ஆனால் ஏனோ தேர்வில் வெற்றி பெறுவோம் என்ற எண்ணம் அவருக்கு வரவில்லை. இதனை இந்தியாவிலிருந்த தனது நண்பர்களுக்கு கடிதங்கள் வழி தெரிவித்தார்.

இந்தக் கடிதங்கள் தாம் பிற்றை நாட்களில் அவருடைய வாழ்க்கை வரலாற்றை நம்மைப் போன்றவர்கள் எழுதிட மிகவும் உறுதுணையாக இருந்தன.

இந்தக் கடிதங்களில் (ICS) என்ற இந்திய ஆட்சிப் பணிதேர்வில் தாம் தேறிட வாய்ப்பில்லாததால் தான் கேம்பிரிஜ் பல்கலைக்கழகத்தில் ஒரு சிறப்பு ஆராய்ச்சி யை மேற்கொள்ளப் போவதாக கூறினார்.

இந்திய ஆட்சிப் பணித் தேர்வில் தாம் வெற்றி பெறாவிட்டாலும் அதற்காகத் தான் மேற்கொண்ட முயற்சிகள் பெரிய அளவில் தன் அறிவு வளர்ச்சிக்குப் பயன்பட்டன.

உலகையும் உலக நிருவாகத்தையும் தான் நன்றாகப் புரிந்து கொண்டதாகவும், தன் நண்பர்களுக்கு எழுதிய கடிதங்களில் குறிப்பிட்டார். இந்த அறிவு பலம் பிற்றை நாட்களில் அவருக்கு உற்ற துணையாக இருந்தது.

ஆனால் ஆட்சிப் பணிதேர்வுகள் குறித்து அவருடைய நண்பர் ஒருவர் அவருக்குத் தந்த தகவல் அவரைஆச்சர்யத்தில் ஆழ்த்திற்று. அது . . . ?

இன்ஷா அல்லாஹ் அதனை அடுத்த இதழில் பார்ப்போம்.

**-தொடரும்**

---

**52ம் பக்கத்தின் தொடர்ச்சி. . .**

குடிமக்களாக ஆக்குவதாக கூறி மதேசிகள் போராட்டம் என்ற பெயரில் வன்முறையில் நீண்ட காலமாக ஈடுபட்டனர்.

மதேசிகள் நோபாள அரசை பணிய வைக்க இந்திய - நேபாள் எல்லை வழியாக நேபாளுக்கு செல்லும் பகுதி மக்கள் நெருக்கடியை சந்தித்தனர். இதனை ஒடுக்க நேபாளம் தன் இராணுவத்தை பயன்படுத்த வில்லை என்பது கவனிக்கத்தக்கது.

மதேசிகளின் மிக முக்கிய கோரிக்கை, விகிதாச்சார பிரதிநித்துவம் மக்கள் தொகை அடிப்படையில் நாடாளுமன்றத்தில் இடம் அளித்தல் போன்ற திருத்தங்களை நேபாள அரசியல் சாசன சட்டத்தில் கொண்டு வருதல் ஆகும்.

இதனால், நேபாள அரசியல் சாசனத்தில் திருத்தம் கொண்டு வர மோடி பா.ஜ.க. அரசு வலியுறுத்துகிறது. (ஆதாரம் : தி இந்து ஜனவரி, 01,2016மதுரை)

இச்செய்கை நேபாள மக்களிடம் நம்மை பற்றிய எதிர்மறையான கருத்துகளையும் எண்ணங்களையும் உருவாக்கி விட்டது. இந்தியர்களை வெறுக்க ஆரம்பித்து விட்டனர். இனி அவர்கள் நம்மை சார்ந்து இருப்பதை விட்டு விலகி, நம் எதிரி நாடான சீனாவை சார்ந்திருக்க ஆரம்பித்து விட்டார்கள்.

இதனால் இந்தியாவின் ஏற்றுமதி இறக்குமதி பொருளாதார நலன் பெருமளவில் பாதிக்கப்படும் என்று அஞ்சப்படுகிறது.

இன்றைய பாசிச ஆட்சியின் செயலால் ஏற்படும் மறைமுக விளைவு நம் தேசத்தையும் மக்களையும் நெருக்கடியில் தள்ளுகிறது.

இந்து ஆன்மீகம் வேறு இந்துத்துவா அரசியல் வேறு! இரண்டையும் இணைத்து மக்களே ஏமாந்து விடாதீர்கள்!

எனவே பா.ஜ.கவை புறக்கணிப்போம்! இந்துத்துவாவை புறக்கணிப்போம்! பாரதத்தைக் காப்போம்

**- ஆபூக்கர் சித்திக்**

# பெருமானார் (ஸல்) அவர்கள் நமது காலத்திற்காக அனுப்பப்பட்ட நபி

**ஆங்கிலம் : கரன் ஆம்ஸ்டிராங்** **தமிழில் : மு. குலாம் முஹம்மத்**



**நவீனங்கள் நிறைந்த இன்றைய உலகைப் பற்றி யார் கொள்ளும் பார்வையும் முழுமையானதாக அமைந்திடாது. அவர் இஸ்லாத்தைப் புரிந்து கொள்ளவில்லை என்றால்.**

**இஸ்லாத்தைப் புரிந்திட வேண்டும் என்றால், இறைவனின் தூதர் முஹம்மத் (ஸல்) அவர்களைப் புரிந்திட வேண்டும்.**

**முஹம்மத் (ஸல்) அவர்களை ஓர் இறைத்தூதர் என்ற அளவிலும், ஒரு மனிதர் என்ற அளவிலும் ஒரு தனி மனிதர் என்ற அளவிலும் புரிந்திட வேண்டும்.**

**இந்த உலகிற்கு மதங்களைக் கொண்டு வந்தவர்களில் மிகவும் அதிகமாக அறியப்படுபவர் முஹம்மத் (ஸல்) அவர்கள்.**

**அவர்களைப் பற்றி வெளிவந்துள்ள இலக்கியங்கள் பலப்பல. இந்த இலக்கியங்களில் பல அவரது வாழ்க்கையை சரியான கோணத்தில் நம் முன் சமர்ப்பிக்கின்றன. இன்னும் பல, வேண்டுமென்றே அவருடைய வாழ்க்கையைத் திரித்தும் புரட்டியும் தவறான எண்ணங்களையும் அவற்றின் வழி தவறான சிந்தனைகளையும் விதைக்கின்றன, வளர்க்கின்றன.**

**ஆனால் கரன் ஆம்ஸ்ட்ராங் -இன் இந்த நூல் அந்த கண்ணியமிக்க மனிதரின் வாழ்க்கையை நடுநிலையோடு நம்முன் சமர்ப்பிக்கின்றது.**

SUNDAY TIMES **லண்டலிலிருந்து வெளிவரும் ஆங்கில நாளிதழ்**

## அநாதைகள்

*முஹம்மது (ஸல்) அவர்களின் வாழ்வின் தொடக்கம் ஆதரவற்ற நிலை. அநாதைகளின் வாழ்க்கையை அனுபவத்தால் உணர்ந்தவர். வளர்ந்தவர்.*

*அதனால் உலகம் உள்ளளவும் அநாதைகள் வாழ்க்கைப் படிக்கட்டுகளில் லாவகமாக ஏறி ஏற்றம் பெற்றிடும் வழிகளைக் காட்டித் தந்தார்.*

*நங்கை நல்லாள் கதீஜா அன்பான அரவணைப்பிற்குப் பின் வரிய நிலை சிறிதே அகன்றது.*

*அன்பாலும், உள்ளார்ந்த உணர்வாலும் உள்ளங்கள் ஒன்றுபட்டு உவகைக் கொண்ட காலம் அது. அவர்களின் இந்த வாழ்க்கையில் இரண்டு ஆதரவற்றவர்களை அரவணைத்து அன்புக்காட்டி உலகம் புகழ உயர்த்திக் காட்டினார்கள்.*

### அந்த இருவர்

*ஒருவர் ஜெய்யித் இப்னு அல் ஹாரித். இவர் வடக்குப் பகுதியிலுள்ள ஒரு குலத்தை சார்ந்தவர். அடிமை.*

*கதீஜா பின் குவாலித் அவர்கள் முஹம்மத் அவர்களை மணந்த போது முஹம்மது அவர்களுக்குத் தந்த அடிமை இவர். முஹம்மத் அவர்கள் அவரை அடிமை என்ற நிலையிலிருந்து முழுமையாக விடுவித்தார்கள். அவரை தன் மகனைப் போல்*

வளர்த்தார்கள். எந்த அளவுக்கு ஜெய்யித் இப்னு அல் ஹாரித் அவர்கள் முஹம்மத் அவர்களின் அன்பையும் அரவணைப்யையும் பெற்றார் என்பதை வரலாறு இப்படி வரையிட்டுக் காட்டுகின்றது. ஜெய்யித் - இப்னு - அல் ஹாரித் அவர்களை அடிமைத் தளையிலே இருந்து மீட்க பணத்ரோடு மக்கா வந்தார்கள் அவர்களின் குடும்பத்தவர்கள்.

ஜெய்யித் - இப்னு - அல் - ஹாரித் அவர்கள் அந்தக் குடும்பத்தவர்களிடம் கெஞ்சினார்கள். என்னை முஹம்மத் அவர்களிடமே விட்டுவிடுங்கள் நான் அவருடனேயே வாழ்ந்திட விரும்புகின்றேன் எனப் பன்னிப் பன்னி முறையிட்டார்கள். குடும்பத்தவர்கள் மறுத்த போது அவர்களிடம் என்னை முஹம்மத் அவர்களுடன் விட்டு விடுங்கள் என யாசிக்கத் தொடங்கி விட்டார்கள். ஜெய்யித் - இப்னு - ஹாரித் அவர்கள்.

இதனால் அவருடய குடும்பத்தவர்கள் முஹம்மத் அவர்களிடமே அவரை விட்டு விட்டுச் சென்றார்கள்.

இப்படி அன்பையும் அரவணைப்பை யும் அள்ளிக் சொரிந்து ஆயிம் அன்னையரின் மாண்பையும் மனதையும் கொண்ட மனிதப் புனிதர் முஹம்மத் அவர்களைத் தான் மேலை நாட்டவர்களாகிய நாம் இரக்கமற்றவர், ஏந்திய வாளை இறக்கி வைக்காதவர், சிந்தனையற்று இரத்தத்தை சிந்துபவர். உயிர்களை மாய்ப்பதில் உல்லாசம் காண்பவர் என்றெல்லாம் பிரச்சாரம் செய்கின்றோம். விட்டோமா அத்தோடு, கல்விக் கூடங்கள், பல்கலைக்கழகங்கள் இப்படி எங்கெல்லாம் முடியுமோ அங்கெல்லாம் இளையத் தலைமுயினரிடம் இந்த பொய்யைச் சொல்லி வளர்க்கின்றோம். அவருடைய அருங் குணங்கள் எங்கே நம்மை ஆட்கொண்டு விடுமோ, நமது இளவல்களை அள்ளிச் சென்று அல்லாஹ்வின் அடிமைகளாக்கி விடுமோ என்ற ஆதங்கம் நமக்கு! அன்று பிடித்த அந்த கிலி இன்றும் நம்மை விடவில்லை. என்னே நமது நேர்மை, மனச்சாட்சி?

முஹம்மத் அவர்களின் அரவணைப் பில் வந்த அடுத்த இளைஞர் அலி இப்னு அபூதாலிப். வளமும் வனப்பான வாழ்வும் வரப்பெற்றவராய் வாழ்ந்த அபூதாலிப் அவர்களின் வாழ்க்கையில் சரிவு? அதனால் அபூதாலிப் அவர்களின் மகனான அலி அவர்களை முஹம்மத் அவர்கள் தன்னோடு வாழ்ந்திட அழைத்தார்கள். இதன் வழி, பெரிய தந்தை அபூ தாலிப் அவர்களின் பொருளாதார சுமைகளை சற்றே இறக்கி வைத்தார்கள்.

இந்த இருவரையும் முஹம்மத் தான் பெற்ற மகன்களைப் போல் வளர்த்தார்கள். வாழ வைத்தார்கள்.

முஹம்மத் அவர்களின் இந்த வாழ்க்கையைப் பற்றி நாம் அதிகமாக அறிந்திட இயலவில்லை. ஆனால் அவருடைய பிற்றை நாள் வாழ்க்கை நமக்கு பல உண்மைகளைப் பளிச்சென சொல்லின. அதில், அவர்கள் அன்றைய நாள் இளைஞர்களைப் பீடித்திருந்த ஒரு பெரும் நோயை மிகவும் ஆழமாக இனங்கண்டு வைத்திருந்தார்கள், என்பதை எளிதில் புரிந்திட முடிந்தது.

அன்றைய இளைஞர்களைப் பீடித்திருந்த அந்த நோய் பணமே எல்லாம். அதைக் கொண்டு மகிழ்ந்து கிடப்பதற்கே வாழ்க்கை என்ற எண்ணங்கள்தாம். மட்டற்ற போகம், சுகம் இதற்கே வாழ்க்கை என இலட்சியம் அமைத்துக் கொண்டு வாழ்ந்திட தொடங்கினார்கள்.

குறைஷிகள் தாம் இதில் முன்னே நின்றார்கள். ஏனெனில் அன்றைய வியாபார வாழ்க்கையில் அவர்களே கொடிகட்டி பறந்தார்கள். வியாபாரிகள் வந்து சங்கமிக்கம் மக்காவையும் அதன் வணிக வளாகத்தையும் அவர்கள் வளைத்துப் பிடித்துத் தங்கள் பிடிக்குள் வைத்திருந்தார்கள். மக்காவைச் சுற்றியுள்ள வசியுமிடங்களில் பணத்தால் வசதியானவர்கள் தங்கள் வீடுகளை எழுப்பி வாழ்ந்து கொண்டிருந்தார்கள்.

வசதியற்றோர் இயல்பாகவே புறநகர் பகுதிகளை நோக்கித் தள்ளப்பட்டார்கள்.

குறைஷிகளிடமிருந்த பழையப் பெருந்தன்மைகள் நீத்துப் போய்விட்டன. தங்கள் குலத்திலுள்ளவர்களுக்கு ஈய மறுத்தார்கள். தங்களது வியாபாரத்திற்கு புண்ணியப்படும் அளவுக்கே அடுத்தவர் களுக்கு உதவினார்கள். முன்பெல்லாம் வளமும் வறுமையும் நமது விதி வசத்தால் விளைவது என்றிருந்தார்கள். இப்போது, அந்த விதியை தங்கள் வியாபார சாதுரியங்களால் வசப்படுத்தி தங்களுக்குச் சாதகமாக மாற்றிவிட்டதாக இறுமாப்புக் கொண்டார்கள்.

முஹம்மத் அவர்கள், குறைஷிகள் தங்களிடமிருந்த நற்குணங்களையெல்லாம் எடுத்தெறிந்து விட்டு கேடும், பாழும் தரும் குணங்களையே தக்க வைத்துக் கொண்டிருக்கினறார்கள் என்பதைத் தெளிவாகக் கண்டார்கள்.

அந்த நிலையில் குறைஷிகளிடம் எஞ்சி இருந்ததெல்லாம் சுகங்களைத் தேடிச் செல்வதில் கடிவாளமற்ற வேகம், மனங்களில் திமிர். எல்லாமே எங்களுக்குக் கீழ். நாங்களே எல்லாம் என்ற ஆணவம். இது போன்ற மமதைகள் எந்த சமுதாயத்தைப் பீடிக்கின்றவோ, அந்தச் சமுதாயம் நிலை குலைந்து நிலத்திலே வீழும் என்பதே வரலாறு. இதனை முஹம்மத் அவர்கள் சரியாகவே கணக்கிட்டார்கள்.

குறைஷிகளின் பணம், அதைக் கொண்டு தேடிடும் சுகம், இவையெல்லாம் எந்த அளவுக்கு அவர்களை ஆணவம் கொள்ளச் செய்தது என்றால், மரணமே தங்களை நெருங்காது. தாங்கள் இறவா வாழ்க்கைக்குச் சொந்தக்காரர்கள் என எண்ணினார்கள். பிற்றை நாள்களில் அருளப்பெற்ற இறைவனின் வழிகாட்டுதல் இப்படிப் பேசிற்று.


“காலத்தின் மீது சத்தியமாக! நிச்சயமாக மனிதன் நஷ்டத்தில் இருக்கின்றான். ஆயினும், எவர் இறைவனை ஏற்றுக் கொண்டு, அழகான நற்செயற்களைச் செய்து சத்தியத்தைக் கொண்டு ஒருவருக்கொருவர் உபதேசம் செய்து, மேலும் பொறுமையைக் கொண்டும் ஒருவருக்கொருவர் உபதேசம் செய் கின்றார்களோ. அவர்களைத் தவிர. (இவர்கள் நஷ்டத்தில் இல்லை)”

அல்குர்ஆன் : அத்தியாயம் 103, வசனம் 1-3)

ஆனால் அன்றைய மக்கள் வாழ்க்கையில் கைக்கு எட்டியதையெல்லாம் அனுபவிக்காதவன் நஷ்டத்தில் இருக்கின்றான் என்றே வாழ்க்கையை எடுத்துக் கொண்டார்கள்.

அந்த மக்கள் இறைவனைப்பற்றி கொண்டிருந்த கோட்பாடுகளும் அவர்களின் வசதிக்கேற்பவே இருந்தனர் அவற்றை அடுத்த இதழில் பார்ப்போம்.


**நாடார் பெருங்குடியினர் ஏன் மதம் மாறினார்கள்?**




விலை ரூ. 10 மட்டுமே

**வேர்கள் பதிப்பகம்,**

**52/1, மண்ணடி தெரு, மண்ணடி,**
**சென்னை - 600 001.**
**தொடர்ப்புக்கு : 8148129887**




# இணை வைப்பும் நயவஞ்சகமும் இருவகையுண்டு!

**சி**றியது பெரியது என்று இருவகை இறைமறுப்பு உண்டு என்பது போல இணை வைப்பு (ஷிர்க்) இருவகையுண்டு.

அல்லாஹ்வுக்கு இணையாக ஏதேனும் ஒரு பொருளையோ யாரேனும் ஒருவரையோ ஆக்கிக் கொள்வதும் அல்லாஹ்வை விரும்பும் அளவுக்கு அவரை, அப்பொருளை விரும்புவதும் தான் பெரிய இணை வைப்பு என்கிறார் அறிஞர் இப்னுல் கய்யிம் (ரஹ்) அவர்கள். இது அனைவரும் அறிந்த ஒன்றுதான்.

இணை வைப்பவர்கள் தமது போலி தெய்வங்கள் அகிலங்களின் இறைவனாம் அல்லாஹ்வுக்கு இணையானவை என்றே கருதி வந்தனர்.

வணங்கியவர்களும், வணங்கப்பட்ட போலி தெய்வங்களும் நரகத்தில் கிடக்கும் போது இப்படிச் சொல்வார்களாம். அல்லாஹ் கூறுகிறான்.

'உங்களை நாங்கள் அகிலங்களின் இறைவனுக்குச் சமமாக ஆக்கி வைத்தபோது அல்லாஹ்வின் மீது சத்தியமாக நாம் தெளிவான வழிகேட்டிலேயே இருந்தோம்.' (26:97,98)

இப்படிப்பட்ட இணை வைப்பாளர் தாம் உலகில் வாழும் போதே அதற்காக மன்னிப்புக் கேட்டு அல்லாஹ்விடம் மன்றாடினால் தான் மன்னிப்புக் கிடைக்கும்.

அல்லாஹ் கூறுகிறான் : தனக்கு இணை வைக்கப்படுவதை அல்லாஹ் நிச்சயமாக மன்னிக்க மாட்டான். அதைவிடத் தாழ்ந்த (பாவத்)தை தான் நாடியவருக்கு மன்னிப்பான். *(4:48)*

ஷிர்க், (இணைவைப்பு) ஜாஹிலிய்யா (அஞ்ஞானம்) ஆகியவற்றையும் திருக்குர்ஆன் இகழ்ந்து பழிக்கின்ற பாவங்களையும் ஒருவன் தெரிந்து கொள்ளவில்லையென்றால் அவற்றை அவன் செய்துவிடுவான். அதிலிருந்து அவன் வெளியே வரமாட்டான். அவை தவறு அல்ல. அவற்றைச் செய்யலாம் என்று பிரச்சாரம் கூடச் செய்வான். அவை அழகிய நற்செயல்கள் என்றும் கூறுவான்.

இஸ்லாத்துக்கு முந்தைய அஞ்ஞான காலத்து மக்கள் கடைப்பிடித்து வந்ததையே தாமும் கடைப்பிடிக்கிறோம் அல்லது அதற்கு ஈடானதையோ அதைவிட மோசமானதையோ அதை விடத் தாழ்ந்ததையோ தான் தாம் கடைப்பிடிக்கிறோம் என்று அவனுக்குத் தெரியாமலேயே போய் விடுகிறது.

இதன் மூலம் தமது உள்ளத்திலிருக்க வேண்டிய இஸ்லாமிய பிடிப்பை அவன் உடைத்து நொறுக்கி விடுகிறான்.

நல்லதை கெட்டதென்றும் கெட்டதை நல்லதென்றும் நபி வழியை வழி கேடு என்றும் வழி கேட்டை நபி வழி என்றும் கருதி விடுவான்.

தூய ஏகத்துவமும், சுத்தமான இறை நம்பிக்கையும் உள்ளவர் (காஃபிர்) இறை மறுப்பாளராக க் கருதப்படுவார். வழி கேட்டையும் மனோ இச்சைகளையும் விட்டுத் தூர விலகி நின்று நபி வழியில் நடப்பவர் வழி கேடர் என்று தூற்றப்படுவார்.

சிந்தனைத் தெளிவும் உயிருள்ள இதயமும் கொண்டவர்கள் இதைக் கண் கூடாகக் காண முடியும்.

இதற்கெல்லாம் காரணம் சரியான புரிதல் இல்லாததுதான்.

அறிஞர் இப்னுல் கய்யிம் (ரஹ்) கூறுகிறார்:

அல்லாஹ் அல்லாதவை மீது சத்தியம் செய்வது, மனிதர்களுக்காக (வணங்குவது போல்) நடிப்பது, மெல்லிய முகஸ்துதி (ரியா) ஆகியன சிறிய இணை வைப்பாகும்.

நபி (ஸல்) கூறினார்கள் : "அல்லாஹ்வின் மீது அல்லாமல் (வேறொன்றின் மீது, வேறொருவர் மீது) சத்தியம் செய்பவர் திட்டமாக இணை வைத்து விட்டார்." (அறிவிப்பாளர் : இப்னு உமர் (ரழி) நூல் : திர்மிதி ஹாகிம் அஹ்மது)

"அல்லாஹ்வும் நீங்களும் நாடியது நடக்கும்" "இது அல்லாஹ்விடமிருந்தும் உங்களிடமிருந்தும் கிடைத்தது", "அல்லாஹ்வின் உதவியைக் கொண்டும் உங்களின் உதவியைக் கொண்டும் நான் இருக்கிறேன்" "அல்லாஹ்வையும் உங்களையும் விட்டால் எனக்கு வேறு யாருமில்லை" "அல்லாஹ்வையும் உஙகளைம் நான் முழுக்க முழுக்க (தவக்குல்) நம்புகிறேன்". "நீங்கள் இல்லாவிட்டால் இதெல்லாம் நடந்திருக்காது".

இப்படி ஒருவர் இன்னொருவரைப் பார்த்துக் கூறுவது சொல்பவரையும் அவரது நோக்கத்தையும் பொருத்து பெரிய இணை வைப்பாகக் கூட ஆகி விடுவதுண்டு.

ஒருவர் நபி (ஸல்) அவர்களிடமிருந்து "அல்லாஹ்வும் நீங்களும் நாடியது நடக்கும் என்று கூறினார், அதறகு, "என்னை அல்லாஹ்வுக்கு இணையாக்கி விட்டாயா?" என்று கூறினார்கள் நபி (ஸல்) அவர்கள்".

(அறிவிப்பாளர் : இப்னு அப்பாஸ்(ரழி) நூல்: நஸயீ)

மேலே நாம் கூறிக்காட்டியுள்ள வார்த்தைகளிலேயே இதுதான் மிக மெல்லிய வார்த்தையாக இருக்கிறது. இதைக் கூறியதற்கே நபி (ஸல்) அவர்கள் அவரைக் கண்டித்து விட்டார்கள்.

இது போலவே ஒரு குருநாதரை நாடிச் செல்லும் முரீது அவருக்கு (ஸஜ்தா) சிரவணக்கம் செய்வதும் இணைவைப்புத் தான்.

ஏனெனில் சிரவணக்கம் செய்பவர் அதை யாருக்கு செய்கிறாரோ அவரை அல்லாஹ்வுக்கு இணையாக ஆக்கிவிட்டார்.

குருநாதருக்காக தலையை மழித்து மொட்டையடிப்பதும் இணைவைப்பே. ஏனெனில் தலைமுடியை மழிப்பது அல்லாஹ்வுக்காகச் செய்யப்படும் ஹஜ், உம்ரா வின் ஒரு வழிபாடு. அதை பிறருக்காக செய்வது இணை வைப்புதான்.

தன் குருநாதரிடம் பாவ மன்னிபுக் கோரி மன்றாடுவதும் இணைவப்பே. இது பயங்கரமான இணைவைப்பு. ஏனெனில் தொழுகை நோன்பு, ஹஜ் உம்ரா குர்பானி போல பாவமன்னிப்பு அல்லாஹ்வுக்கு மட்டுமே உரியது. அவனைத் தவிர பாவங்களை மன்னிப்பவர் எவருமில்லை.

நபி (ஸல்) அவர்களிடம் ஒரு கைதி கொண்டு வரப்பட்டார். அவர் "இறைவா! நான் உன்னிடம் மட்டுமே பாவ மன்னிப்புத்

தேடுவேன். முஹம்மது (ஸல்) விடம் பாவமன்னிப்புத் தேட மாட்டேன்" என்று கூறினார்.

உடனே நபி (ஸல்) அவர்கள், "இவர் இந்த உரிமை அதற்குரியவனுக்கு சொந்தமானது என்று விளக்கி விட்டார்" என்று கூறினார்கள். (அறிவிப்பாளர்: அஸ்வது பின் ஸரீவு (ரழி) நூல்: மஜ்மவுஸ்ஸவாஇத் அஹ்மது)

எனவே தொழுகை, நோன்பு போல தவ்பா எனும் பாவமன்னிப்பும் அல்லாஹ்வுக்கு மட்டுமே உரியதாகும். அது ஒரு வணக்கம்.

மேலும் அல்லாஹ்வுக்காக அன்றி வேறு யாருக்காகவும் நேர்த்திக்கடன் வைப்பது இணை வைப்பே. இது பிறர் மீது சத்தியம் செய்வதை விட கொடிய இணை வைப்பாகும்.

"அல்லாஹ்வின் மீதல்லாமல் வேறு எதன் மீதும் யார் மீதும் சத்தியம் செய்தவர் இணை வைத்துவிட்டார்" என்றொரு நபி மொழியும் "நேர்ச்சையும் ஒரு சத்தியம் தான்" என்றொரு நபிமொழியும் உண்டு.

எனவே நேர்ச்சைக்கும் சத்தியத்துக்கும் ஒரே சட்டம்தான்.

மேலும், அல்லாஹ்வின் தண்டனைக்கு அஞ்சாமல் மற்றவர்கள் தண்டனைக்கு அஞ்சுவது,

அல்லாஹ்வை மட்டும் சார்ந்திருக் காமல் வேறொவரையும் முழுக்கச் சார்ந்து (தவக்குல்) இருப்பது,

அல்லாஹ்வுக்காக அன்று மற்றவர் களுக்காகப் பணியாற்றுவது,

அல்லாஹ்விடமன்றி மற்றவர்களிடம் அடைக்கலம் தேடுவதும் அடி பணிவதும்,

அல்லாஹ்விடமிருந்தல்லாமல் வேறு யாரிடமிருந்தோ வாழ்வாதாரங்களை எதிர்பார்ப்பது

அல்லாஹ் வழங்கிய செல்வங்களுக்காக மற்றவர்களைப் புகழ்வது,

பிறரை மட்டும் புகழ்ந்து பாராட்டி விட்டு அல்லாஹ்வைப் புகழாமல் பாராட்டாமலிருப்பது,

தாமே தேடிக்கொண்ட விளைவுகளுக்காக அல்லாஹ்வைத் திட்டுவது கோபம் கொள்வது,

அல்லாஹ் தந்த அருள் கொடைகளை வேறு யாரோ தந்ததாகக் கூறுவது,

அல்லாஹ் நாடாதவை கூட உலகில் நடக்கும் என்று நம்புவது,

ஆகிய அனைத்துமே இணைவைப்பே. (நூல் : மதரரிஜுஸ்ஸாலிகீன், பாகம் : 1, பக்கம்: 344-346)

சிறிய பெரிய நயவஞ்சகங்கள்

குஃப்ர் எனும் இறைமறுப்பு, ஷிர்க் எனும் இணை வைப்பு ஆகியவை போல நயவஞ்சகமும் சிறியது பெரியது என இருவகை உண்டு.

உள்ளத்தில் இறை மறுப்பை மறைத்து வைத்துக் கொண்டு நான் ஒரு முஸ்லிம் என்று கூறிக் கொள்வதுதான் பெரிய நயவஞ்சகம், இது கொள்கை நயவஞ்சகம்.

இப்படிப்பட்டவர்கள் நரகத்தின் மிகக் கீழான பள்ளத்தில் நிரந்தரமாகக் கிடப்பார்கள் அதிலிருந்து மீள முடியாது.

நபி (ஸல்) அவர்களின் காலத்தில் இவர்கள் இருந்தார்கள். இவர்களின் முகத்திரை கிழித்து எறிந்து இவர்களை அம்பலபடுத்தியது அருள் மறையாம் திருக்குர்ஆன்.

உண்மையான இறை நம்பிக்கை யாளர்கள் இவர்களிடம் மிக எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்பதற்காக அவர்களைப் போலல்லாமல் முஸ்லிம் தமது குணங்களை சீரமைத்துக் கொள்ளவுமே எச்சரிக்கிறது இறைவேதம்.

நடத்தை நயவஞ்சகம் செயல் நயவஞ்சகம் சிறிய நயவஞ்சகமாகும்.

அதாவது, ஒருவரின் அஜீதா எனும் கொள்கை எவ்வளவுதான் சரியாக இருந்த போதிலும் அவரின் நடத்தையும் பண்பும் நயவஞ்சகர்களைப் போலிருந்தால் அவரிடம் சிறிய வகை நயவஞ்சகம் உள்ளது என்றே மார்க்கம் கருதுகிறது.

பின் வரும் நபி மொழிகள் எச்சரிப்பதைப் பாருங்கள்:

நபி (ஸல்) கூறினார்கள் : நான்கு குணங்கள் யாரிடம் உள்ளனவோ அவர் தெளிவான நயவஞ்சகராவார். அவற்றுள் ஒரு குணம் இருந்தால் அவர் அதைக் கைவிடும் வரை நயவஞ்சகப் பண்புகளில் ஒன்று அவரிடம் உள்ளது.

1. நம்பினால் துரோகம் செய்வது

2. பேசினால் பொய்யுரைப்பது

3. ஒப்பந்தம் போட்டால் மோசடி செய்வது

4. விவாதத்தின் போது (தீய வார்த்தைகள் பேசி) தீயவனாக நடந்து கொள்வது

(அறிவிப்பாளர் : அப்துல்லாஹ் பின் அம்ரு (ரழி) நூல் : புஹாரி, முஸ்லிம்)

மேலும் நபி (ஸல்) கூறினார்கள் : நயவஞ்சகனின் அடையாளம் மூன்று. பேசினால் பொய்யுரைப்பான். வாக்களித்தால் மாறு செய்வான். அவனை நம்பினால் துரோகம் செய்வான். (அறிவிப்பாளர் : அபூஹுரைரா (ரழி) (நூல்: புஹாரி முஸ்லிம்)

இப்படிப்பட்டவன் தொழுதும் நோன்பு வைத்தும் தம்மை ஒரு முஸ்லிம் என்று கருதியும் கொண்டாலும் சரியே (இவன் ஒரு நயவஞ்சகன் தான்) என்று மற்றொரு அறிவிப்பில் காணப்படுகிறது (நூல்: முஸ்லிம்)

நபி மொழிகளில் கூறப்பட்டுள்ள இந்த எச்சரிக்கைகளால் நபித் தோழர்கள் தம்மிடமும் நயவஞ்சகம் இருக்குமோ என்று அஞ்சினார்கள்.

உமர் (ரழி) அவர்கள் நபி (ஸல்) அவர்களின் ரகசியக் காப்பாளரான ஹுதைய்பா (ரழி) விடம் "நபி (ஸல்) அவர்கள் உம்மிடம் கூறியுள்ள நயவஞ்சகர்களின் பட்டியலில் என் பெயர் உள்ளதா?" என்று கேட்டார்கள்.

விபரமான விளக்கமுள்ள நயவஞ்சகனிடம் மக்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்று உமர் (ரழி) கூறுவார்கள்.

"ஒருவன் நயவஞ்சகனாகவும் விளக்கமுள்ளவனாகவும் எப்படி இருக்க முடியும்?" என்று அவர்களிடம் கேட்கப்பட்ட போது "அவன் விபரமாக விளக்கமாகப் பேசுவான். உள்ளத்தால் மூடனாக இருப்பான்" என்று உமர் (ரழி) பதிலளித்தார்கள்.

ஹசன் பஸரி (ரஹ்) கூறினார்கள் : நயவஞ்சகத்தின் குணங்கள் தம்மிடம் இருக்குமோ என்று முஃமின் அஞ்சுவார். அவை தம்மிடம் இருக்கவே இருக்காது என்று நயவஞ்சகன் தைரியமாக இருப்பான்.

நபித் தோழர்களுள் சிலர் இப்படிப் பிரார்த்தனை செய்வார்கள், "இறைவா! நயவஞ்சகத்தனமாக பணிவதைவிட்டு உம்மிடம் பாதுகாப்புத் தேடுகிறேன்"


"நயவஞ்சகமாகப் பணிவது என்றால் என்ன?" என்று கேட்கப்பட்ட போது "உடல் இறைவனுக்குப் பணிந்து உள்ளம் பணியாத நிலைதான் அது" என்று அவர்கள் பதிலளித்தனர். (நூல்: மதாரிஜுஸ்ஸாலிகீன் பாகம் :1 பக்கம் 358)

எனவே நயவஞ்சகமும் சிறியவை பெரியவை என இருவகை உண்டு.

**தமிழ் வடிவம் : இல்யாஸ் ரியாஜி**

தொடர். . .

## முஸ்லிம்களின் வீழ்ச்சியால் உலகம் இழந்ததென்ன?



# ரோமர்கள் வீரத்தை வணங்கினார்கள்! வீரம் அவர்களைக் கைவிட்டது!

**- அபுல் ஹசன் அலீ நத்வீ**

**மொழிபெயர்ப்பு: அஹ்மது ஜலாலுத்தீன் நத்வீ**

ஆக சுருங்கக் கூறின், ரோமர்களின் வாழ்வில் அவர்களின் மதம் எந்த தாக்கத்தையும் ஏற்படுத்தவில்லை.

ஒழுக்கத்தில், அரசியலில் சமுதாய வாழ்வில் அவர்களின் மதம் அவர்களுக்கு எந்த பங்களிப்பையும் தரவில்லை.

அது அவர்களின் உணர்வுகளை, ஆசைகளைக் கட்டுப்படுத்தவுமில்லை. அவர்களின் ஒழுக்கங்களையும், நடவடிக்கை களையும் கண்காணிக்கவும் இல்லை.

அது அவர்களின் உள்ளத்துப் பள்ளத்தினுள் புகுந்திடவுமில்லை. அவர் களுடைய ஆன்மாக்களை ஆளும் ஆழமான மதமாகவும் இருக்கவில்லை.

மதம் என்பது ஒரு சடங்கு சம்பிரதாயம் என்ற அளவில் மட்டுமே இருந்தது. அவர்கள் கடைப்பிடித்து வந்த அரசியல் தனக்கென பெயரளவில் ஒரு மதம் இருக்கட்டும் என்று விரும்பியது அவ்வளவே.

இதுவே ரோமர்களிடம் மதம் பெற்றிருந்த மரியாதை.

அறிஞர் (LECKY) லேகி கூறுகிறார் : ரோமர்களின் மதம் சுயநலத்தின் மீதே கட்டமைக்கப்பட்டிருந்தது. சிரமங்கள் பிரச்சனைகள் ஏதுமற்ற சுக போகப் பெரு வாழ்வு வாழ்ந்திடவே தனிமனிதனை அது தூண்டியது.

பாருங்களேன்! ரோமர்களில் பெருவீரர்களும் பெருந்தலைவர்களும் தோன்றியுள்ளனர். ஆனால் உலக இன்பங்களைத் துறந்த துறவிகளோ முனிவர்களோ ஒருவர் கூடத் தோன்றியதில்லை என்றால் பார்த்துக் கொள்ளுங்கள். மதம் அவர்களை எப்படி உருவாக்கியிருக்கிறதென்று.

நாட்டுக்காக தம்மை அர்ப்பணித்துக் கொண்ட தியாகிகளும் பொது நலவாதிகளும் ரோமில் தோன்றியிருப்பதை வரலாறு அறியும்.

ஆனால் அவர்களையெல்லாம் உருவாக்கியதில் மதத்துக்கு எந்த பங்கும் இல்லை என்பதே உண்மை என்கிறார் லேகி (Source : History of European Morals , P.177)

காலனி ஆதிக்கச் சிந்தனையும் பச்சையான உலகாதாய போக்கும் ரோமர்களின் அடையாளங்கள். இவற்றை ஒரு மதம் போலவே அவர்கள் கடைப்பிடித்து வந்தனர்.

இதர சமுதாயங்களிலிருந்து அவர்களை என்றென்றும் வித்தியாசப்படுத்திக் காட்டுவதும் இவைதான். இன்றைய ஐரோப்பா தம் முன்னோர்களான ரோமர்களிடமிருந்து இதை பிதுரார்ஜிதச் சொத்தாகவே பெற்றுக் கொண்டது.

ஜெர்மானிய முஸ்லிம் அறிஞர் முஹம்மது அஸத் அவர்கள் தனது நூலில் இதை அருமையாக விவரிக்கிறார்:

ரோம் ராணுவ வலிமைமிக்க நாடாக வேண்டும். ரோமாபுரியின் நலனுக்காக இதர சமுதாயங்களை கசக்கிப் பிழிந்து வேலை வாங்க வேண்டும் என்பதே ரோம சாம்ராஜ்யத்தின் ஒரே எண்ணம்.

பிரபுக்களுக்கும், பிரமுகர்களுக்கும் பெரு வாழ்வு வாழ்ந்திட எத்தகைய காட்டுமிராண்டித்தனத்தையும் அநீதியையும் செய்வதற்கு வெட்கப்படவில்லை.

ரோமர்கள் நீதிமிக்கவர்கள் என்ற பேச்செல்லாம் ரோமர்களுக்கு மத்தியில் மட்டும் தான். இதர சமுதாயங்கள் இவர்களிடம் நீதியைப் பெற்றதில்லை.

இவ் உலக வாழ்வையும் நாகரிகத்தையும் அவர்கள் உலகாதயப் பார்வை கொண்டு அணுகியதால்தான் அப்படிப்பட்ட முரட்டு வாழ்க்கை வாழ்ந்தார்கள்.

அவர்களின் உலகாதய சிந்தனை அறிவுக்கு ஏற்றபடி அமைந்திருந்த போதிலும் அதில் எள்ளளவும் மனிதாபிமானம் என்பதே இருக்கவில்லை. இதனால் அவர்கள் தமது நாகரிக வளர்ச்சிக்காக இதர சமுதாயத்து மக்களைச் சுரண்டுவதை சித்ரவதை செய்வதை பாவமாகவே கருதவில்லை.

ரோமர்கள் மதத்துக்கும் பெரிய மரியாதை தந்து கொண்டிருக்கவில்லை. அவர்களின் சம்பிரதாயம் தெய்வங்கள் கிரேக்கர்களின் கட்டுக்கதைகளின் பிரதிபலிப்பாகவே இருந்தன.

ரோமர்களை ஒரு இனமாகவும் ஒரு சமுதாயமாகவும் இணைத்து வைத்திருந்தது அவர்களின் மதம் தான். அதனால் அவர்கள் மதங்களை நம்பினார்கள். இதைத் தாண்டி தம் அன்றாட வாழ்வை வழி நடத்திட அதில் தலையிட தெய்வங்களை அவர்கள் அனுமதித்ததில்லை.

தமது ரகசியங்களை பூசாரிகள் வழியாக தெய்வங்களிடம் சொல்லிக் கொண்டார்கள். ஆனால் வாழ்க்கை நெறிகளையும் ஒழுக்க விழுமங்களையும் மனிதர்களுக்குக் கற்றுத் தந்திட தெய்வங்களை அவர்கள் அனுமதிக்கவே இல்லை.

(SOURCE : ISLAM AT THE CROSS ROADS P. 38-39)

ரோமக் குடியரசின் ஒழுக்க வீழ்ச்சி

ரோமக் குடியரசு தனது இறுதி ஆண்டுகளில் லஞ்ச லாவண்ய பெருங்கடலில் வீழ்ந்தது. ரோமர்களிடம் இயல்பாக இருந்து வந்த ராணுவக் கட்டுப்பாடு நேர்மை இவைகளையெல்லாம் அவர்களின் ஆடம்பரப் பெருவாழ்வின் காரணமாக கரைந்து காணாமல் போய்விட்டது. அவர்களின் சமூகக் கட்டமைப்பும் தொலைந்து அழிந்து போனது.

ரோமர்களின் அவலத்தை நம் கண்முன்னே காட்சியாக கொண்டு வந்து நிறுத்துகிறார் அமெரிக்க எழுத்தாளர் ஜான் வில்லியம் டிராபர். இதோ:

ராணுவ வலிமையிலும் அரசியல் செல்வாக்கிலும் ரோமப் பேரரசு உச்சத்தைத் தொட்ட போது நாகரிகத்தின் உச்சப் படிக்கட்டை அது அடைந்த போது ஒழுக்க

கேட்டில் வீழ்ந்தது. மத ரீதியாகவும், பண்பாட்டு ரீதியாகவும் அதல பாதாளத்தில் கிடந்தனர் ரோமர்கள்.

வாழ்க்கையின் எல்லைகளை உடைத்து அற்பலீலைகளிலும், சொகுசுகளிலும் தம்மை இழந்தார்கள்.

இவ் உலக வாழ்வென்பது அற்ப சுகஙகளை அனுபவிக்க கிடைத்த அரிய வாய்ப்பு என்றே நம்பினார்கள்.

ஆடம்பரத்திலிருந்து உல்லாசத்துக்கும் கேளிக்கைகயிலிருந்து சிற்றின்பத்துக்கும் மனிதன் மாறிக் கொண்டேயிருக்க வேண்டும் என்பதே அவர்களின் கொள்கையாக இருந்தது.

எப்போதாவது சில வேளைகளில் அவர்கள் எளிமையைக் கடைப்பிடித்தார்கள். உண்ணா நோன்பிருந்தார்கள். இதெல்லாம் எதற்காக என்றால் உணவின் மீதான ஆசை அதிகரிக்க வேண்டும் என்பதற்காக இப்படி நோன்பு என்ற பெயரில் ஓர் இடைவேளை எடுத்துக் கொண்டார்கள்.

நீண்ட நெடும் நாட்கள் ஆடம்பரமாக வாழ வேண்டும் என்றால் அது திகட்டாமல் இருப்பதற்காக கொஞ்ச நான் நடுநிலை வாழ்வை வாழ்ந்து கொண்டார்கள்.

அவர்களின் உணவு மேசைகளில் வைரம் பதித்த தங்கம் வெள்ளிப் பாத்திரங்கள் ஜொலித்துக் கொண்டிருக்கும்.

உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் ஆடைகளை அணிந்த வண்ணம் யவ்வன அழகிகள் பணியாளர்களாக உலா வந்து கொண்டிருப்பார்கள்.

மேனியின் அவயங்களை அப்பட்டமாய்க் காட்டிடும் மெல்லிய ஆடைகளை வெட்கமின்றி அணிந்திருக்கும் பாடகிகள் சூழ்ந்து நிற்பார்கள்.

ஆடம்பரத்தைக் கூட்டும் படோடாபமான நீச்சல் குளங்கள், கூத்துக் கும்மாள மடிப்பதற்காக மாபெரும் மைதானங்கள், வீரர்களும், வீரர்களும் மோதிக் கொள்ளும் மல்யுத்தக் களங்கள். இருவரில் ஒருவர் ரத்த வெள்ளத்தில் பிணமாக வீழும் வரை தொடரும் போட்டிகள் என எல்லா அநாகரீகங்களும் நிறைந்திருந்தன அவர்களின் அவைகளில்.

தம் வனப்பான வீரத்தால் உலகையே வளைத்துப் போட்டிருந்த ரோமர்கள் வீரத்தையே தெய்வமாக வணங்கினர். ஏனென்றால் இந்த வீரம் தான் அவர்களுக்கு எல்லாவற்றையும் தந்தது.

ஓர் உழைப்பாளி நெற்றி வேர்வையை நிலத்தில் சிந்தி கரங்கள் ஓய உழைத்துச் சேர்க்கும் செல்வங்களையெல்லாம் ஒரு வீரன் ஒரு போரில் ஒருவனை வீழ்த்தினால் அடைந்திட முடியும் அங்கே.

ஒரு போரில் வென்று காட்டினால் செல்வம், அதிகாரம், சன்மானம் எல்லாம் ஒரு வீரனைத் தேடி வரும்.

ஆக ரோம ராஜ்யத்தின் தலைமைப் பீடம் வீரம், புஜபலம் ஆகியவற்றின் குறியீடாகவே இருந்தது.

அரசே வீரத்தின் குறியீடாக ஆகிவிட்டதால் ரோம நாகரீகமும் அரசின் வழியிலேயே அமைந்துவிட்டது.

இப்படி வீரத்தின் விளைவாகவே எல்லாம் கிடைக்கும் என்ற அளவில் ரோம் இருந்த போதிலும் ஆளை மயக்கும் வெளிப்பூச்சாகவும் ஒப்பனையாகவுமே அது இருந்தது.

ஆம், இந்த கித்தாப்பு ரோம் நாட்டை வீழ்ச்சியிலிருந்து காப்பாற்றவில்லை. கிரேக்கர்களின் கீர்த்தி அவர்களை வீழ்த்திடாமல் காப்பாற்றவில்லையல்லவா, அது போல. (Source : History of the Conflict between Religion and Science, London 1927 P. 312)

ரோம் கிறிஸ்தவ மயமானது

இங்கே ஒரு நிகழ்வைக் கூறியாக வேண்டும். அதை உரக்க முழங்காமல் ஒரு வரலாற்றாசிரியரால் இருக்க முடியாது.

சிலை வணக்கத்தை தனது மதமாகக் கொண்ட ரோம ராஜ்யத்தை கிறிஸ்தவம் வெற்றி கொண்ட செய்திதான் அது.

கி.பி. 305ம் ஆண்டு சிலை வணக்கத்தை கிறிஸ்தவம் வீழ்த்தியது. ஆம், புதிதாக கிறிஸ்தவத்தைத் தழுவியிருந்த மன்னன் கான்ஸ்டன்டைன் யாராலும் வெல்ல முடியாத ரோமை வீழ்த்தி சிம்மாசனத்தில் அமர்ந்தான்.

கனவிலும் நினைத்துப் பார்க்க முடியாத பென்னம் பெரும் வலிமையான அரசை கிறிஸ்தவம் பெற்றது.


பல்லாயிரக்கணக்கான கிறிஸ்தவர்கள் தன்னுயிரை ஈந்தனர். தம் பிணங்களைப் பாலங்களாக்கினர். தம் குருதியை நதியாய் ஓடவிட்டனர். இப்படி கிறிஸ்தவர்கள் தந்த தியாகங்களால் தான் கான்ஸ்டன்டைன் ரோமின் சிம்மாசனத்தில் அமர்ந்தான்.

அந்த நன்றிக்காக அவன் தன்னையே கிறிஸ்தவத்துக்காக அர்ப்பணித்தான். அரசின் களஞ்சியத்தையும் நிதிகளையும் அதன் திறவு கோல்களையும் கிறிஸ்தவத்துக்காக வாரி வழங்கினான்.

**தொடரும். . .**

**தமிழ் வடிவம் : இல்யாஸ் ரியாஜி**


**இப்போது பரபரப்பான விற்பனையில்**




விலை ரூ. 30 மட்டுமே

**வேர்கள் பதிப்பகம்,**
**52/1, மண்ணடி தெரு, மண்ணடி,**
**சென்னை - 600 001.**
**தொடர்ப்புக்கு : 8148129887**




**மனம் திருந்திய குற்றவாளி**
**சுவாமி அசிமானந்தாவின்**
**ஒப்புதல் வாக்குமூலம்**

விலை ரூ. 20 மட்டுமே

**வேர்கள் பதிப்பகம்,**
**52/1, மண்ணடி தெரு, மண்ணடி, சென்னை - 600 001.**
**தொடர்ப்புக்கு : 8148129887**



Owned and published by M. Gulam Mohamed from 52/1, Mannady Street, Mannady, Chennai - 600 001. Editor M. Gulam Mohamed, Printed by M. Gulam Mohamed at Chennai Offset Printers, 19/1, 21/2, Kitabath Khan Bhadhur Street, Chennai - 600 002.